
படைப்பு
ஊற்று: 1 | நதி: 6 | அக்டோபர் 2018 | திங்களிதழ்

# தகவு

கலை இலக்கிய மின்னிதழ்

www.padaippu.com



## “தமிழ் அறம்தான் வேறொரு வழியில தமிழ் மார்க்சியம்னு வருது...”

**கோவை ஞானி அவர்களுடன் ஒரு நேர்காணல்**



ஹீரோவான காந்தி
– மானசீகன்



பாகன் திரும்பும் வரை
– நூல் விமர்சனம்



சிங்க மராட்டியர்தம் கவிதை கொண்டு...
– ஜி ராஜன்

படைப்பு தகவு
கலை இலக்கிய மின்னிதழ்

ஊற்று: 1 | நதி: 6 | அக்டோபர் 2018

நிர்வாக ஆசிரியர்:
**ஜின்னா அஸ்மி**

ஆசிரியர்:
**ஆசியாதாரா**

நிர்வாக மேலாளர்:
**சகா (சலீம் கான்)**

நிருபர்கள் குழு:
முனைவர் **கோ.நித்தியா**
**ஸ்டெல்லா தமிழரசி**
**தனபால் பவானி**

முதன்மை வடிவமைப்பாளர்:
**கமல் காளிதாஸ்**

வடிவமைப்பு: **ஐசக்**

ஓவியக் கலைஞர்கள்:
**கொ.வடிவேல்**
**அழ.ரஜினிகாந்தன்**

படைப்புகள் மற்றும்
கருத்துக்களை அனுப்ப
வேண்டிய மின்னஞ்சல் முகவரி:
**padaippugal@padaippu.com**

இணையதள முகவரி:
**www.padaippu.com**



அலுவலக முகவரி:
படைப்பு குழுமம்
அரசு பதிவெண் : 521/2018
#8, மதுரை வீரன் நகர்,
கூத்தப்பாக்கம்,
கடலூர், தமிழ்நாடு - 607002
admin@padaippu.com
9489375575



நேர்காணல்கள் மற்றும்
கட்டுரையாளர்களின் கருத்துக்கள்
அவரவர் கருத்துக்களே.
கதை மற்றும் கவிதைகளின்
கருத்துக்கள் கற்பனையே,
படைப்பு தகவு மின்னிதழின்
கருத்துக்கள் அல்ல.


## உள்ளே...


- **தலையங்கம்** - பக். 04
- **"தமிழ் அறம்தான் வேறொரு வழியில தமிழ் மார்க்சியம்னு வருது.."**
  - கோவை ஞானி அவர்களுடன் ஒரு நேர்காணல் - பக். 05
- **ஹீரோவான காந்தி**
  - மானசீகன் - பக். 12
- **உயர்த்தியது தமிழ்!**
  - முனைவர் ஹாஜாகனி - பக். 15
- **சமூகக் காயத்திற்கான களிம்பு - 'பாகன் திரும்பும் வரை' நூல் விமர்சனம்**
  - துரை.நந்தகுமார் - பக். 25
- **சாகித்ய விருது பெற்ற 'படைப்பு'க் கவிஞர்** - பக். 28
- **நல்லாசிரியர் சுகன்** - பக். 29
- **மதிப்புறு முனைவர் அகன்!**
  - தனபால்பவானி - பக். 38
- **பாஷோவின் பழைய குளம்**
  - முகம்மது பாட்சா - பக். 39
- **படைப்புக் குழும இரண்டாமாண்டு விழா - புகைப்படங்கள்** - பக். 42
- **சிலேட்டுக்குச்சி**
  - கட்டாரி - பக். 47
- **தொடர்ந்து செல்.. வேகம் குறைந்துபோகாதே!**
  - இரா.விசுவேசுவரன் - பக். 52
- **சிங்க மராட்டியர்தம் கவிதை கொண்டு...**
  - ஜி ராஜன் - பக். 55
- **ஈரிருநாள் இலங்கை**
  - தமிழ்பாரதன் - பக். 59

- நாடக வடிவில் சங்க இலக்கியம்
  – பழநியப்பன் கிருஷ்ணமூர்த்தி – பக். 63


## சிறுகதைகள்


- ஞானப்பால்
  – ந.பிச்சமூர்த்தி – பக். 18
- குள்ளப்பொண்ணு
  – பிறைமதி – பக். 32
- பாபிலோனியாவின் தொங்கு தோட்டம்
  – பிரேமபிரபா – பக். 43


## கவிதைகள்


- மனு
  – கண்டராதித்தன் – பக். 11
- கார்த்திக் திலகன் – பக். 24
- கயல் – பக். 37
- நீ துளையிட்ட எனது புல்லாங்குழல் - 1
  – ஜின்னா அஸ்மி – பக். 46
- படைப்புலகம் – பக். 50






# தலையங்கம்

வணக்கம்.

படைப்பு 'தகவு' ஆறாம் மின்னிதழ் உங்கள் கண்முன் ஒளிவீசிப் பரந்துவிரிந்திருக்கிறது.

மகாத்மாக்களை, மகாத்மாவாக மட்டுமே பார்ப்பது, மனிதராக மட்டுமே பார்ப்பது என்ற முரணான நோக்குகள் என்றும் மையம்கொண்டிருக்கும் நியதியில், மகாத்மாக்களுக்கு நேர்த்தளத்திலான பெரும்புகழஞ்சலிகளும் எதிர்த்தளத்திலான கடும்விமர்சனங்களும் நேர்ந்துகொண்டுதான் இருக்கும். தனிமனிதர் மீதான பார்வை சமூகம் பற்றிய புரிதலை விரிவுபடுத்தும் எனில், அப்பார்வை பன்முகமாய் அமைதல் நலம். காந்தியத்தின்வழிக் கண்டறிதல் சமூகத்தோடியைந்த சுயமும்தான். இவ்இதழில் காந்தி குறித்த இருகட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

கவிதைகள், நெகிழ்ந்த மொழியின் இறுகிய கருத்துவடிவம். சின்னஞ்சிறு சொற்கோர்வைக்குள் பேருணர்வைப் புதைத்துவைத்திருக்கும் மின்னல் வடிவம் அது. வியப்பென்னவெனில், மொழியின் அதிநுட்பமான கவிவடிவம் பலருக்கும் கைவந்திருக்கிறது. கவிச்சூழல்களும் கவிஞர்களும் பெருகிய காலகட்டத்தில் கவிதைகளுக்கான பக்கப்பங்குகளும் பெருகவேண்டியதாயிருக்கிறது. இதுவரை வெளிவந்த கவிச்சித்திரம் பகுதியுடன் 'படைப்புலகம்' என்ற கவிதைகளுக்கான புதிய பகுதியும் 'கஸல்' கவிதைத் தொடரும் இணைந்துள்ளன.

கோவைஞானி தமிழுலகம் கொண்டாடப்பட வேண்டிய முதுபெரும் திறனாய்வாளர். பரவலான வாசிப்பு உள்ளதெனினும் இலக்கியத்தை அணுகவேண்டிய முறையை அறியாதிருக்கும் இன்றைய தலைமுறை கட்டாயம் அறிந்திருக்கவேண்டிய ஆளுமை அவர். படைப்பை வெறும் சொற்களாகக் கருதாமல் அதனுள் பொதிந்திருக்கும் சமூகத்தைக் கண்டறியக் கற்றுத்தரும் சூட்சுமக்காரர் அவர். மார்க்சியத்தைத் தமிழுடன் இணைத்து மனதுக்கு நெருக்கமாக்குபவர். தத்துவம் சார்ந்த அவரது நோக்குகள் புரிதலுடன் மேற்கொள்ளவேண்டியனவாய் உள்ளன. இவ்இதழில் இலக்கியர் கோவைஞானியின் நேர்காணல் இடம்பெற்றுள்ளது.

சென்ற இதழின் 'கற்றது தமிழ்' பகுதி திருவாரூர் மோசஸ் நடுநிலைப்பள்ளியின் ஆசிரியர்களால் பிரதியெடுக்கப்பட்டு மாணவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. மொழி என்றும் நல்வழியில் பயணப்படுத்தும் என்பதற்கு இது மிக நல்ல சான்று. அகரம் கற்பித்த ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களின் அடித்தளமின்றியோ, வாசிப்பனுபவத்தை விரிவாக்கிய தமிழாசிரியர்களின் பங்களிப்பின்றியோ எவரும் தமிழுலகில் கோலோச்சிவிட முடியாது. எதிர்ப்பை மீறித் தமிழ்க் கற்று, அதன்வழி உயர்ந்தவர், தனது ஆசிரியர்களை அனுபவங்களை அடையாளப்படுத்திய அப்பகுதி தொடர்கிறது இவ்இதழிலும்.

வாழ்வின் தொடக்ககால நினைவுகளை எண்ணுதல் பகிர்தல் என்பன எவருக்கும் தித்தித்திருக்கும் செயல்கள். ஏனென்றால் அவை களங்கத்தின் நிழற்படாத ஆதி உணர்வுகள். சிறுபருவத்தில் உடனிருந்த மனிதர்களுக்கென்று தனி முகவரிகள் உண்டு. அப்பருவ இனிய உள்ளங்களைப் பேச்சு வழக்கில் அறிமுகப்படுத்தும் தொடராக 'சிலேட்டுக்குச்சி' எழுதப்படுகிறது.


பழம்பெரும் எழுத்தாளர்களின் சிறுகதைப்பகுதியான 'காலம் கடந்த காவியம்' இவ்இதழ் முதல் எழுத்தாளர்தம் எளிய சிறப்புக் குறிப்புகளுடன் வருகின்றது.

இதழை வாசியுங்கள்.. விமர்சனம் செய்யுங்கள்.. விவாதப்படுத்துங்கள்..

நன்றி.

**– ஆசிரியர்**

• கவிஜி



# "தமிழ் அறம்தான் வேறொரு வழியில தமிழ் மார்க்சியம்னு வருது..."

## கோவை ஞானி அவர்களுடன் ஒரு நேர்காணல்

கோவையின் அடையாளங்களில் ஒருவர் கோவை ஞானி. மிகச்சிறந்த திறனாய்வாளர், எழுத்தாளர் மற்றும் கவிஞர். கிட்டத்தட்ட 28 நூல்களைத் திறனாய்வு செய்தவர். ஆகச்சிறந்த இலக்கியவாதி. எப்போதுமே கேள்விகளோடு அலசி ஆராயும் குணம் கொண்டவர். எல்லாவற்றையும் ஆழமாகச் சென்று அறிந்து கொள்பவராக இருப்பவர். ஒரு காலைவேளையில் மார்க்சியம், பௌத்தம், அரசியல், ஆன்மா, உயிர், வாழ்வின் சாரம், முதலாளித்துவம், கார்ப்ரேட் உலகம் என்று பேசியதிலிருந்து.....

**இன்றைய காலகட்டத்துக்கு மார்க்சியத்தின் தேவை...?**

மார்க்சியம்ங்கிறது ஒரு தத்துவம். அது இன்னைக்கு ரொம்ப அவசியம். ஏன்னா இன்னைக்கெல்லாம் கார்ப்ரேட்டோட ஆதிக்கம் பயங்கரமா இருக்கு. இந்தியாவுல இருக்கிற தொழில் நிறுவனங்கள் எல்லாமே கார்ப்ரேட்டா மாறிட்டு இருக்கு. இன்னும் விளக்கமாச் சொன்னா முதலாளிங்க நல்லா இருக்கவேணும். அவுங்களச் சார்ந்தவங்க நல்லா இருக்கவேணும். மற்றவங்களைப் பத்திக் கவலை இல்ல. இந்தியால இந்த மாதிரி முதலாளிங்க அவுங்க சார்ந்தவங்கன்னு கணக்கு போட்டா ஒரு 15 சதவீதத்துக்கு மேல இல்ல. 85 சதவீதம் ஏழை மக்கள்தான். இல்லாத மக்கள்தான். அரைகுறையா இருக்கற மக்கள்தான். கார்ப்ரேட்டோட நலனை முக்கியமா வெச்சு இந்தியாவுல முதலாளிங்க வர்க்கத்தை ஊக்குவிச்சீங்கன்னு சொன்னா



85 சதவீத மக்களுக்கு வாழ்க்கை இல்ல. அவுங்க எல்லாத்தையும் இழந்தற வேண்டியதுதான். இந்த விஷயத்துல மார்க்சியம் அக்கறை எடுத்துக்குது. 85 சதவீத மக்களுக்கு உணவு உடை இருப்பிடம் அப்புறம் சுதந்திரம் இதெல்லாம் வேணும். இதையெல்லாம் அக்கறை எடுத்துக்கறதுதான் மார்க்சியம். ஆக மார்க்சியத்தின் தேவை இருக்கிறது.

**தமிழ் மார்க்சியம் குறித்து....?**

சங்க இலக்கியத்துல பார்த்தீங்கன்னா அறம்னு ஒன்னு கண்டுபிடிக்கலாம். இது பத்தி விரிவா உங்களுக்குச் சொல்லணும். சங்க இலக்கியத்துல கோப்பெருஞ்சோழன்னு ஒரு அரசன் இருந்தான். ஏழைகளுக்கு நிறையக் குடுத்தான். இப்படி அவன் குடுத்துட்டு இருக்கறத பார்த்த அவனோட ரெண்டு மக்களும்... இப்டியே போனா நாம ஆட்சிக்கு வர்றபோது எதுவும் இருக்காது அப்படினு ஒரு முடிவுக்கு வந்து அப்பா கோப் பெருஞ்சோழன் மீது படை எடுக்க முயற்சி பண்றாங்க. இது கோப்பெருஞ்சோழனுக்குத் தெரிய வருது. மக்களோட போர் புரியணுமான்னு யோசிக்கிறாரு. பல புலவர்களைக் கூப்ட்டு யோசன கேக்கறாரு. அதுல ஒரு புலவர் சொல்றார். இந்தப் போர்ல ஒருவேளை நீங்க தோத்துட்டா.... அதுவும் சரி இல்ல. பிள்ளைகள எதுத்து வெற்றி பெற்றாலும் அது தப்பாப் போயிடும்.. அப்படிங்கறாரு. சரி என்னதான் பண்ணலான்னு யோசிக்கும்போது, இதுக்கு ஒரே தீர்வு வடக்கிருந்து உயிர் நீக்கறதுதான்னு முடிவுக்கு வர்றாங்க. வடக்கிருத்தல் என்பது ஆற்றங்கரையில் உணவு நீர் என்று எந்த ஆகாரமும் உட்கொள்ளாமல் அமர்ந்து உயிர் விடுவது. கோப்பெருஞ்சோழன் இந்த முடிவுக்கு உடன்பட்டு உயிர் விட்டுவிடுகிறார். கூட, பல புலவர்கள் எல்லாம் வந்து சேர்றாங்க.

அதாவது கோப்பெருஞ்சோழனுக்கு முன்னால் இருந்த சமூகம் ஒன்னு. அதுக்குப் பின்னால் வர்ற சமூகம் இன்னொன்னு. முன்னால இருந்த சமூகத்துக்கு உடைமைக்கு மரியாதையே கிடையாது. ஆனா, பின்னால வர்ற சமூகத்துக்கு உடைமைதான் முக்கியம். அதிகாரம்தான் முக்கியம். ஆட்சிதான் முக்கியம். அது உடைமைச் சமூகம். பணத்துக்கு மரியாதை குடுக்கற சமூகம். முந்தைய சமூகத்துல இப்படியெல்லாம் கிடையாது. எல்லா மனுஷனும் சமம். பின்னால வர்ற சமூகத்துல ஏற்றத்தாழ்வு வந்துருச்சு. போருக்கான காரியங்கள் எல்லாம் வந்துருச்சு. இந்த இடத்துலதான் நான் என்ன முடிவுக்கு வர்றேன்னா....தமிழ் அறம்னு ஒன்னு இருக்கு. அதைத் தேடணும்னு சொல்றேன். உடைமைகள்தான் தொல்லை. அதுதான் எல்லாத் துன்பத்துக்கும் காரணமா இருக்கும். அப்போ, தமிழ் அறம் என்னன்னா உடைமைப் பற்று இல்லாமல் வாழ வேணும். ஏற்றத் தாழ்வுக்கோ போருக்கோ அவசியமே இல்லன்னு வாழ வேணும். இதத்தான் தமிழ் அறம்னு நான் சொல்றேன். இந்தத் தமிழ் அறம்தான் வேறொரு வழியில தமிழ் மார்க்சியம்னு வருது. இந்த மார்க்சியம் வள்ளுவருக்குள்ள இருக்கு. இளங்கோவடிகளுக்குள்ள இருக்கு. கம்பர்க்குள்ள இருக்கு. எல்லாரும் உழைக்கணும். பகிர்ந்துக் கணும். இன்னும் சுலபமாச் சொன்னா மார்க்சியம் என்பது ஏற்றத்தாழ்வுக்கு இடம் இல்லாதது. எல்லாம் ஒன்னுன்னு சொல்றதுதான் மார்க்சியம்.

**பகிர்தல் மனப்பான்மை இப்போது இருக்கிறது என்று நினைக்கிறீர்களா?**

அது இல்லாமப் போச்சு. ஒரு ஐயாயிரம் வருசமாகவே அது இல்ல. நாட்டுக்குள்ள அப்டிங்கிறதத் தாண்டி வீட்டுக்குள்ள கூட இந்தப் பகிர்தல் மனப்பான்மை இல்லாமப் போயிருச்சுனா இந்தச் சமூகம் ரொம்பவும் சீர் கெட்டுப் போய்டுச்சின்னு அர்த்தம். இதுக்கு மேல சீர் கெட முடியாதுங்கிற அளவுக்குச் சீர் கெடுதலின் அளவு மோசமாகிடுச்சு. இத மாத்த முடியுமான்னு கேட்டா யோசிச்சுப் பாக்க வேணும். மார்க்சியம்தான் இத மாத்தக்கூடிய ஒரே வழின்னு சொன்னாலும் அந்த மார்க்சியத்தைக் கடைபிடிக்கறவங்க பல வழிகள்ல இருக்கறாங்க. பல முரண்பாடுகளோடு இருக்கறாங்க. மார்க்சியம்னா சி பி ஐ ன்னு ஒன்னு இருக்கு... சி பி எம் ன்னு ஒன்னு இருக்கு... மாவோயிஸ்ட்டுனு ஒன்னு இருக்கு.

**எழுத்தாளர்களின் பாதுகாப்பு குறித்து....!**

ஆமா, எழுத்தாளர்களுக்குப் பாதுகாப்பில்ல. அடிக்கடி எழுத்தாளர்கள் கொல்லப்படறத

பாக்கறோம்... இல்லையா...! கொல்லப்பட்டவங்கள எல்லாம் எடுத்துக்கிட்டீங்கன்னா....அவுங்க பூரா ஏழைங்களப் பத்திப் பேசுனவங்கதான். பகுத்தறிவு வாதம் பற்றிப் பேசுனாங்க. பகுத்தறிவோடு இந்த இந்தியாவுல இருக்கற அத்தனை மக்களுக்கும் எப்படிச் சோறு போடறதுன்னு......! இந்த மாதிரி கேள்விங்கதான் அவுங்க கேட்டாங்க. அதாவது முதலாளிங்க நல்ல்ல்ல்ல்ல்.........லா இருந்தா ஏழைங்க நல்லா இருக்கமுடியாது. இந்த மாதிரி விஷயங்களைத்தான் அவுங்க பேசினாங்க. பகுத்தறிவுவாதிகள் வீறுகொண்டு செல்வாக்கோடு மேல எழும்போது இந்துத்துவவாதிங்களுக்குப் பிடிக்கல. ஆகவே அவுங்களக் கொன்னாங்க. கொன்னவங்களைக் கண்டுபிடிக்க முடியல. ஏன்னு சொன்னா அரசாங்கம் அவுங்களுடையது. ஆயுதங்கள் அவர்களுடையது.

**புத்த மதம் குறித்து....!**

புத்த மதம்ங்கிறது தோன்றி 2500 ஆண்டுகளுக்கு மேல ஆகுது. தொடக்க காலத்துல புத்த மதத்துக்குக் கிடைச்ச செல்வாக்குக்கு அளவு கிடையாது. அப்படிச் செல்வாக்கோடு இருந்த புத்த மதத்தை அழிச்சவங்க யாருன்னா இந்த இந்துத்துவாவாதிங்கன்னு சொல்லக்கூடியவங்க தான். ஒரு கட்டத்துல புத்தமதவாதிகள கொல்றதுன்னு ஆரம்பிச்சாங்க. லட்சக்கணக்குல கொன்னாங்கப்பா. கொஞ்ச நஞ்சமல்ல. அப்படிக் கொன்னுதான் அவுங்கள இந்தியாவை விட்டு விரட்டுனாங்க. உண்மையில் புத்த மதங்கிறது அறிவார்ந்த மதம். உலகத்துல இருக்கற எல்லா மனுசங்களுக்கும் ஏன் துன்பம் வருதுன்னு அது சம்பந்தமான ஆய்வுகளைச் செய்யக்கூடியது புத்த மதம். புத்த மதம் இங்கே நீடிச்சிருந்தா இப்போ நமக்கிருக்கற துன்பத்துக்குக் காரணம் என்ன... அப்படீங்கிறது நமக்குத் தெளிவாத் தெரிஞ்சிருக்கும். இப்போ புத்த மதம் அழிஞ்சுப் போனதுனால இந்துத்துவம்தான் மேலோங்கி இருக்கு.

**சித்தார்தன் புத்தனாக மாறுவதற்கு அவ்ளோ காலகட்டம் தேவையாக இருந்ததா...?**

அவருக்குத் தேவையாக இருந்தது.

**துன்பங்களுக்குக் காரணம் என்று எதை நினைக்கிறீர்கள்...?**

உலகத்தின் துன்பம் குறித்தான பார்வை சித்தார்தனை நிறைய சிந்திக்கச் செய்யுது. வீட்டைத் துறந்து காடுகள்ல அலைகிறாரு. நிறைய சன்னியாசிகளிடம் விவாதிக்கறாரு. ஆனாலும் ஒரு முடிவு கிடைக்கல. இந்த விஷயங்களை எல்லாம் மனசுக்குள்ள வெச்சிக் கிட்டுப் போதி மரத்துக்கு அடியில தவம் பண்றாரு. பல நாள் தவம். விடை கண்டு பிடிக்கறாரு. சித்தார்தன்ங்கிறவரு புத்தனா மார்றாரு. புத்தரா மார்றது ரெண்டாவது கட்டம். எங்கு பார்த்தாலும் துன்பம் மிகுந்து கிடக்குது. அதுக்கு விடைகள் தேடி அலைஞ்சாரு. இன்னைக்கு விடைகள் மிக எளிதாகக் கண்டு பிடிச்சிட்டோம். அன்னைக்குக் காலகட்டத்துல தெரியல அவுங்களுக்கு. ஆனா, பொதுவாப் பார்த்தா இன்னைக்கு இந்தியாவுக்கு வர்ற துன்பங்களுக்குப் பெரும்பகுதி காரணம் முதலாளிங்களும் அவுங்களச் சார்ந்தவங் களும்தான்.

**இந்தக் காலகட்டத்தில் திறனாய்வு எந்த அளவு அவசியம்...?**

திறனாய்வு எல்லாக் காலத்திலேயும் அவசியம் தான். வள்ளுவர் காலத்துல திறனாய்வு இல்லாம இல்ல. இளங்கோவடிகள் திறனாய்வு இல்லாம சிலப்பதிகாரம் செய்யல. கம்பருக்கு ஏகப்பட்ட திறனாய்வு இருந்துதான் கம்பராமாயணம் எழுதறாரு. திறனாய்வுங்கிறது ரொம்ப இயல்பான ஒரு விஷயம். ஏன் எப்படிங்கிற ஆராய்ச்சிதான் திறனாய்வு. ஏன் உலகம் இப்படி இருக்கு.. ஏன் மக்கள் இப்படி இருக்காங்க. ஏன் முதலாளிங்க இப்படிக் கொழுத்துப் போய்ட்டாங்க.. பணம் திரட்டுவதற்கு அளவு கிடையாதா....? ஆயிரம் கோடிகள்ல புழங்கறாங்க. இவ்ளோ பணத்தை வெச்சிக்கிட்டு என்ன செய்யமுடியும்னு தெரியல. இன்னும் சம்பாரிச் சிட்டு இருக்காங்க. அளவுக்கு அதிகமாப் பணம் தேடற முட்டாள் தனமான ஒரு சமூகமா இந்தச் சமூகம் இருக்கு. இது பத்தியெல்லாம் திறனாய்வு செய்ய வேண்டிதான் இருக்கு.

**உங்கள் திறனாய்வு குறித்து...!**

வழக்கமா என்னுடைய திறனாய்வு என்பது அந்தப் புத்தகம் என்ன சொல்லுது... உண்மையில



அந்த எழுத்தாளர் சரியாச் சொல்றாரா... எதைச் சொல்லி இருக்க வேணும்.... எதைச் சொல்லாம விட்டுட்டாரு... எதைச் சொன்னாச் சரியா இருக்கும்ங்கிற கேள்விகளை முன்வைக்கிறேன். அந்த வகையில பார்த்தீங்கன்னா நிகழ்காலப் பிரச்சனைகள ரொம்ப அக்கறையோடு நான் ஆராய்ச்சி பண்றேன். படைப்புகள்ங்கிறது நிகழ்காலத்தில் வரக்கூடியதுதான். நிகழ்காலப் பிரச்சனைகள் பற்றி வரக்கூடியதுதான். நிகழ்காலத்தில் வரக்கூடிய துன்பங்கள் கஷ்டங்கள் துயரங்களுக்குக் காரணம் ஓரளவுக்கு மார்க்சியவாதிகளுக்குத் தெரியும். மற்றவருக்குத் தெரியாது. அசலான மார்க்சியவாதிகளுக்குத் தெரியும். அப்போ அந்தக் கேள்விகளிலேயே என் மனசு ஊன்றி இருக்கறதுனால அந்தப் படைப்பைத் தாண்டி விமர்சனம் பண்றேன். என்னுடைய விமர்சனக் கட்டுரைகளைப் படிச்சிருந்தீங்கன்னாத் தெரியும். குறிப்பிட்ட எழுத்தாளர்களைத் தாண்டியும் உள்ள நான் போயிருக்கேன். விஷயங்களை எடுத்துப் பேசியிருக்கேன்.

**ஆன்மா என்று ஒன்று இருக்கா..?**

ஆன்மா இருக்குன்னு நான் நம்பல. ஆனா இந்துமதவாதிங்களுக்கு ஆன்மா ரொம்ப முக்கியம். புத்த மதத்துக்கு ஆன்மா கிடையாது. சமண மதத்துக்கு ஆன்மா உண்டு. ஆன்மாங்கிறத நம்பறவங்கதான் விளக்கம் கூற வேணும். உடம்புக்குள்ள உயிர் இருக்கு. உயிரைத்தான் ஆன்மான்னு பல சமயம் நினைக்கறாங்க. இறக்கற போது உடம்ப விட்டு உயிர் பிரியுது அப்படீங்கறாங்க. அதான் ஆன்மா பிரியுது அப்படீங்கறாங்க. உடம்பும் உயிரும் ஒன்னாத்தான் இருக்கு. பிரியறபோது எதுவும் வெளிய போயிர்றது இல்ல. ஆன்மா பிரிஞ்சு போய் வேற ஒரு உடம்புல புகுந்து அப்படியெல்லாம் சொல்றாங்கள்ல... நான் அப்படியெல்லாம் நினைக்கல. ஆன்மாவை விட்டுட்டா நல்லது. உடல் உயிர்தான். உயிர்ன்னு தனியா ஒன்னு இல்லப்பா... அத முதல்ல தெளிவு பண்ணிக்கணும். உடம்புக்குள்ள இருக்கற இதயம் நின்னு போயிடுது. மூளை செத்துப் போயிடுது. மனுஷன் இறந்தர்றான். அவ்ளோதான ஒழிய உயிர்ன்னு ஒன்னைக் கொண்டோ ஆன்மான்னு ஒன்னைக் கொண்டோ விளக்கிட்டு இருக்க வேண்டியதில்லை.

**சாமி...? / பேய்....!**

பேய் பிடித்தல் எல்லாமே கற்பனைதான். முட்டாள்தனமாச் சிலவற்றை நீங்க நம்புனீங்கனா அதுவும் செயல்படும். அத நீங்க கவனிக்கணும். கடவுள்னு நீங்க நம்பீட்டிங்கன்னா அது காரியங்களைச் செய்யும். அந்த நம்பிக்கை உங்களுக்குள்ள இருந்து சில தூண்டுதல்களைக் குடுத்துக்கிட்டே இருக்கும். பேய் இருக்குன்னு நீங்க நம்புனீங்கன்னா அதோட விளைவுகளை நீங்க பாக்க முடியும். இருட்டுல போகும்போது மரம் செடி கொடி ஆடறபோது பேய்ன்னு நீங்க நினைச்சுக்குவீங்க. அப்போ பேயினுடைய பாதிப்புக்கு நீங்க உள்ளாவீங்க. பேய் நம்பிக்கையை விட்டுட்டா அது ஒன்னும் பண்ணாது. எந்த நேரத்துல வேணாலும் தாராளமாப் போலாம் வரலாம். பேய் நம்பிக்கையை வெச்சிக்கிட்டுப் போனீங்கன்னு சொன்னா அது உங்களைத் துன்புறுத்தும். சாமியோ பேயோ எல்லாமே நமக்குள்ள இருக்கற நம்பிக்கைதான்.

**ஏன் முதலாளிங்கள திட்டிட்டே இருக்கோம்...!**

தொழிலாளியா இருக்கும்போது அவன் மனநிலை வேற மாதிரி இருக்கு. முதலாளி ஆகிட்ட பிறகு அவன் மனநிலை வேற மாதிரி மாறிருது. ஒரு நாளைக்குக் கோடிகளில் சம்பாதிக்கிறான்னா எங்கோ தப்பு இருக்குன்னுதான அர்த்தம். இன்னொருத்தன் உழைப்புலயும் திருடறான்னுதான அர்த்தம். முதலாளிங்களா இருங்க.. நான் வேண்டான்னு சொல்லல. ஆனா இங்க இருக்கற ஏழைங்களுக்கு உணவு உடை இருப்பிடம் மருத்துவம் படிப்பு வேலைவாய்ப்புன்னு எல்லாம் நல்லாச் செஞ்சுக் குடுத்துட்டு முதலாளிங்களா இருங்க. இந்த உலகமே வியாபாரிங்களாலதான் இயங்குது. அரசாங்கமே முதலாளிங்க தயவுல இயங்கும்போது ஏழைங்க புறந்தள்ளத்தான படுவாங்க. அப்போ முதலாளிங்க மேல கோபம் வரத்தான செய்யும்.

அரசாங்கத்தை நாமதான் அமைக்கறோம்னு நாம நினைச்சுக்கறோம். ஆனா அது அப்படி

இல்ல. ராணுவம், அதிகார வர்க்கம், நீதிமன்றம், சட்டங்கள் இதுக்கெல்லாம் பேருதான் அரசாங்கம். அரசியல்ல மாற்றம் வந்தாலும் ராணுவம் மாறப்போறது இல்ல. அதிகார வர்க்கத்தை மாத்த முடியுமா நீங்க? அரசுங்கிற பெரிய இயந்திரத்துக்குள்ள அஞ்சு வருசத்துக்கு ஒருமுறை தேர்வு செஞ்சு உள்ள போய்ச் சேர்றீங்க. ஆனா அந்தத் தேர்வு விளையாட்டை நிகழ்த்தறதே அதிகார வர்க்கம்தான். மந்திரிங்க எவ்ளோ வேணாலும் திட்டம் போடலாம். ஆனா அதை நிறைவேற்றக்கூடியது அதிகார வர்க்கம்தான். அதிகார வர்க்கத்துக்குத் தெரியும். எதை நிறைவேற்றலாம். எதை நிறைவேற்றக் கூடாதுன்னு. அதிகார வர்க்கம் சொல்றததான் அரசாங்கம் செய்யவேண்டி இருக்கு. அரசாங்கத்தையும் முதலாளிங்களையும் வேறுபடுத்திப் பார்க்கவேண்டாம். பார்க்கவும் முடியாது.

**கட்சி என்பது......!**

அடிப்படையில கருத்துக்களில் வித்தியாசம் இருக்கு. இந்தியாவுல கட்சிகள்ன்னு ஒன்ன ஒத்துக்கிட்டோம் இல்லையா...? கட்சிகள் இருக்கலாம் அப்படின்னு. நான் நினைக்கிறது, ஒத்துக்கிட்டிருக்கவேண்டிய அவசியம் இல்ல. ஆனா நாம ஒத்துக்கிட்டோம். இந்தியால ஏற்படுத்தப்பட்ட ஜனநாயகத்துல கட்சி வந்திருச்சு. கட்சி தான் அடிப்படை. அப்போ கட்சிகள்ன்னு வரும்போது ஏகப்பட்ட கட்சிகள் வந்திருச்சு. அவுங்கவுங்களுக்குத் தகுந்தமாதிரி கட்சி உருவாகிடுச்சு. காங்கிரஸ் கட்சில முதலாளி இருப்பான். மார்க்சிய கட்சில தொழிலாளி இருப்பான். மத்திய தர கட்சில ஒரு வர்க்கம் இருக்கும். கம்யூனிஸ்ட் ஒரு கட்சி. அதுலயும் பிளவு. இப்போ சிபிஐ, சிபிஎம் ல பெரிய வேறுபாடு இல்ல. ஆனா ஏன் ரெண்டும் ஒன்னாச் சேரலன்னு சொன்னா.. தலைமைப் பிரச்சினைதான். திராவிடக் கழகம்னு சொன்னாவே அதுலயே நாலு வகை இருக்கு. அப்படி இருக்கவேண்டிய அவசியமே இல்லையே. ஆக, கருத்தியல் என்ற வகையிலயும் வேறுபாடு இருக்கு. தலைமையும் அந்த வகையில வேறுபட்டு இருக்கு. தலைவர்கள் தொண்டர்களுடனே கூட ஒன்னு சேர ஒத்துக்கமாட்டாங்க. ஏன்னா.. தலைமைங்கிறது தனி உடைமைதான். அப்படித்தான் இங்க இருக்கு. எல்லாக் கட்சிகளும், தலைமைகளும் பெரும்பாலும் மக்கள் பிளவுபட்டு இருப்பதைத்தான் விரும்புகிறது. அதிகாரத்தை விட்டுக்கொடுக்க எந்தத் தலைவனும் தயாராக இல்லை.

**கம்யூனிஸ்டுகள் பற்றி...!**

வறுமையை ஒழிக்கணும். எல்லாரும் நல்ல வேலைக்குப் போகணும். தப்பு தவறு எதுவும் செய்துவிடக் கூடாது என்பதில் மிகக் கவனமாக இருப்பார்கள் கம்யூனிஸ்டுகள். எல்லாக் கட்சிகள்லயும் இருக்கும் வாரிசு அரசியல் கம்யூனிஸ்ட் கட்சியில் மட்டும் இருக்காது. முதலாளிகளின் குணம் கம்யூனிஸ்டுகளுக்கு வரவில்லை. காரில்தான் நான் பயணம் பண்ணுவேன் என்ற புத்தி இன்னும் வரல. ஓரளவுக்கு இந்த மாதிரி குணங்கள் இல்லாதவர்கள்தான் கம்யூனிஸ்டுகளாக இருக்கிறார்கள்.

**பெரியாரியம் அம்பேத்காரியம் கம்யூனிசம் மூன்றுமே ஏன் ஒற்றுமை இல்லாமல் இருக்கு....?**

அடிப்படையில் கொள்கை வேறுபாடு இருக்கு. கொள்கை வேறுபாட்டை இவர்கள் தீர்த்துக்க விரும்பல. தீர்த்துட்டா எல்லாம் ஒன்னாகிடும். தனித் தலைவர்களா அவுங்க மரியாதை போய்டும். அம்பேத்கார் தேர்தல் ஜனநாயக முறையைப் பெருசா நம்புனாரு. கம்யூனிஸ்டுகளுக்கு அந்த நம்பிக்கை இல்லவே இல்ல.

**எழுத்தாளன் மார்க்சியவாதியாகத்தான் இருக்கவேண்டுமா...?**

சமூக மாற்றத்தை ஏற்படுத்தறேன்னு வர்றவன் கட்சிக்காரன்தான். எழுத்தாளன் இல்ல. இந்தச் சமூகத்தை மாத்தியே ஆகணும், அதுக்குத்தான் நான் எழுத்துத்துறைக்கு வந்திருக்கேன்னு சொல்ற ஆள் ஒருத்தரும் இல்ல. ஆனா எழுதறவன் மார்க்சியவாதியாத்தான் இருக்கணும். சி பி ஐயா சி பி எம்மானு நான் கேக்கல.. இன்னும் பரந்த சிந்தனை உள்ளவனா இருக்கணும். சிந்தனையைக் குறுக்கிக்கறவன் எழுதமுடியாது. இந்தச் சமூகச் சூழல் ஒரு எழுத்தாளனை மார்க்சியவாதியாக்கி விடும். கடைசியாக அவன் வந்து நிற்கும் இடம்





மார்க்சியமாகவே இருக்கும். அதுதான் தீர்வு வைத்திருக்கிறது. எழுத்தாளன் தெரிந்தோ தெரியாமலோ சமம் தேடி அலைகிறான். அது அவனை மார்க்சியத்துக்குள் கொண்டுபோய் நிறுத்துகிறது. மார்க்சியச் சார்புதான் அவனை முழு எழுத்தாளனாகவே மாற்றுகிறது.




**தனிமனிதனாக நீங்கள்..?**

மார்க்சியவாதினாலேவே எல்லா இடத்திலும் ஒதுக்குவார்கள். நான் ஆசிரியராகப் பணி புரிகையில் அங்கிருந்த ஆசிரியர்களில் நான் ஒருவன்தான் மார்க்சியவாதி. மார்க்சியவாதி என்றாலே ஏதோ ஒரு அசிங்கமான பொருளைப் பார்ப்பது போலத்தான் பார்ப்பார்கள். அத்தனைப் பேர் எதிர்க்கையில் நான் என்ன நினைத்துக்கொள்வேன் என்றால் நான் சரியா இருக்கேன்.. என் வேலையைச் சரியாச் செய்யறேன்னு நினைச்சுக்குவேன். யாரையும் பொருட்படுத்த வேண்டியதில்லை. அந்த நிறைவு நமக்கு வேணும். எதிர்க் கருத்துக்கள் பலமாய் இருந்தாலும் நம் கருத்து மார்க்சியக் கருத்து என்பதால் தனியாகக் கூட எதிர்த்து நிற்கலாம். மேலோங்கிய கருத்துக்கள் எல்லாம் சரியான கருத்துக்களாக இருக்கும் என்று நம்ப வேண்டியதில்லை.




**திறனாய்வில் எந்த நூல் உங்களுக்கு மிகவும் திருப்தி தந்த நூல்...?**

மார்க்சியம் சம்பந்தமான நூல்கள் எல்லாமே எனக்குத் திருப்தி தந்த நூல்கள்தான்.




**இப்போ என்ன எழுதுகிறீர்கள்...?**

இப்போ இந்த ரெண்டாண்டுகளாக ஒன்னும் எழுதல.



**உங்களின் 'கடவுள் ஏன் இன்னும் சாகவில்லை' பற்றி...**

கடவுள் இல்லனு நம்மச் சமூகத்துல நம்பறவங்க தி.க., கம்யூனிஸ்ட். என்னதான் பிரச்சாரம் பண்ணினாலும் கடவுள் சாகல. என்ன பண்ணுனாலும் நம்மச் சமூகத்துல கடவுள் சாகல. ஏன் சாகல...? மார்க்ஸ் சொன்னபடி சொல்லணும்னா இந்தச் சமூகம் முரண்பட்ட சமூகம். வர்க்கப்போர் நடக்கக்கூடிய சமூகம். இதுல ஏழைகள் அதிகம். ஏழைகள் துன்பப் படறாங்க. துன்பத்துக்குக் காரணம் என்னன்னு அவுங்களுக்குப் புரியல. நெருக்கடிகள் ரொம்ப அதிகமா இருக்கு. இந்தச் சமயத்துல ஏதோ ஒரு ஆறுதல் வேணும். கடவுள் ஆறுதல் தர்றாரு. இப்போ கடவுள் இல்லனு நீங்க சொன்னீங்கன்னா அதுக்குக் காரணம் சொல்லணும். இந்த வாழ்க்கையை எப்படி அணுகறதுனு சொல்லணும். அப்படினா வர்க்கப் போராட்டம் குறித்து நீங்க பேசணும். நெருக்கடிகள் அதிகரிக்கிற அளவுக்குக் கடவுள் நம்பிக்கை அதிகரிக்கும். முந்தி இருந்ததுக்கு நம்மச் சமூகத்துல கடவுள் நம்பிக்கை குறைஞ்சிருச்சானா..... இல்லை. அதிகம்தான் ஆகியிருக்கு. சாமியார்களின் எண்ணிக்கை ரொம்ப அதிகமாகியிருக்கு. லட்சம் பேரை ஒரேநாளில் திரட்டக்கூடிய சாமியார்கள் வருகிறார்கள். நிறைய சுண்டைக்காய்ச் சாமியார்கள்லாம் வந்துட்டாங்க. இந்த மாதிரி மக்களுக்கு நெருக்கடி அதிகரிக்கிறபோது ஒரு நம்பிக்கை வேணும். அந்த நம்பிக்கைதான் இந்தக் கடவுள் இருக்கிறார்னு சொல்றது. இந்தச் சமூகம் முதலாளிச் சமூகம். இந்தச் சமூகத்தில் கடவுள் இருப்பார். முதலாளிகளும் கடவுளும் நெருக்கமாக இருப்பார்கள். அறிவியலையும் துணைக்கழைத்துக் கொண்டுதான் கடவுள் நம்பிக்கையைப் பலப்படுத்தி வைத்திருக்கிறார்கள் முதலாளிகள்.




**எழுதுபவனின் போராட்டம் பற்றி..?**

இப்போ நான் இருக்கேன்.. மார்க்சியம் பேசறேன். இப்போ என் மக்கள் ரெண்டு பேர் இருக்காங்க. அவுங்க மார்க்சியவாதிகள் அல்ல. அப்புறம் என் சொந்தக்காரங்கள்ல யாருமே மார்க்சியவாதிகள் அல்ல. அவுங்கெல்லாம் அப்படித்தான் இருக்கணும்னும் நான் சொல்லல. ஆனா அறத்துக்குப் புறம்பா யார் இருந்தாலும் நான் வெறுக்கிறேன். அவுங்க யாரா இருந்தாலும். என் சொந்தமா இருந்தாலும். அவுங்க மத்தியில நான் இப்படி இருக்கேன்னு என் மேலயே நான் ஒரு மரியாதை வெச்சிருக்கேன். எல்லா மூடத்தனத்துக்கும் எதிராக ஒற்றை ஆளாய் நிற்கும் சூழலும் புனிதமான காரியம் என்றுதான் நினைத்துக்கொள்ள வேண்டும். சுற்றி இருப்பவர்கள் குடும்பம் உள்பட உங்களை ஒதுக்குவார்கள். நம்பிக்கையோடு போராடித்தான் ஆகவேணும். ■

• கவி: கண்டராதித்தன்
சித்திரம் : கொ.வடிவேல்

# பிழை



கடவுளரின் மேலாளர் கணக்கு வழக்குகளைப்
பார்த்துக்கொண்டிருந்தபோது ஒரு ஞாபகத்தில்
உன் பிறந்த நாளை ஒரு வாரத்திற்கு
முன்பு இருக்கும்படி மாற்றி எழுதினார்
அதன்படி இப்போது
உன் மனைவியின் பெயர் உண்ணாமுலை
உனது ஊரின் பெயர் திருப்பாலப்பந்தல்
தகப்பனார் உழவர் உழைப்பாளர் கட்சியின் தொண்டர்
தாயார் பத்மாவதி சமீபத்தில்தான்
சிவலோகப் பதவியடைந்தார்
சகோதரன் கத்தாரிலும், தங்கை மைலி பக்கத்து
வீதியிலும் வசித்துவருகிறார்கள்
மேலாளருக்குத் தெரியாமல் நடந்த தவறு
இச்சமூகத்தில் யாருக்கும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை
பிழை கடவுளரின் மேலாளருடையதாக இருக்கிறது.
உனக்கொரு உறுத்தல் நம்வீட்டின் முன்பு
பிரைஸ் தி லார்ட் என்ற வாசகம் இல்லையேயென்று
நண்பன் லத்தீப்பின் கடைப்பெயரும் கார் வாசகமும்
ஞாபகத்திற்கு வருகிறது
ராயல் புட் வேர் மார்ட்
இறைவன் மிகப்பெரியவன்
நிரப்பப்படாத படிவம்-111 ஐ எடுத்து
நடந்த பிழையைச் சுட்டித்திருத்துமாறு
கடவுளுக்கு விண்ணப்பித்துவிடுகிறாய்
அவர் மேலாளரைப் பரிசீலிக்கும்படிக் கேட்டுக்கொள்கிறார்
படிவம்-111ஐக் கண்ட மேலாளர்
துணுக்குற்றுத் தன் பிழையைத் திருத்துகிறார்
இப்போது நீ மாட்சிமிகு வருவாய் கோட்டாட்சியர்
சமூகத்தின் முன்பு நிற்கிறாய்
'மனுதாரரின் பாட்டனார் கடந்த 1969 ஆண்டு
அறம்கண்ட நல்லூர் கிராமத்தில் இறந்ததாகவும்
அப்போது கவனக்குறைவாக இறப்பு விபரத்தை
எதிர் மனுதாரர்அலுவலகத்தில் பதியாமல்
விட்டதாகவுமிருக்கிறது' உன் கோரிக்கை மனு.
என்ன கோபாலன் எங்க இந்தப் பக்கம் என்றொரு குரல்
குரல் வந்த திசையை நோக்கிக் கண்களுக்கு மேலாக
சல்யூட் வைப்பது போலக் கண்களைக் குறுக்கிப்
பார்க்கிறாய் எதிரில் கடவுளின் மேலாளர்.
உனக்கிருந்த ஆத்திரத்தில் அவர் முகத்தில்
காறி உமிழ்ந்தாய் ஆனால் அதை
மாட்சிமிகு சமூகம் கவனிக்கவில்லை. ■

• மானசீகன்
ஓவியம் : அழ.ரஜினிகாந்தன்

# ஹீரோவான காந்தி

காந்தி எல்லா மனிதர்களையும் போல வரலாற்றுப் புத்தகம் வழியாகவே எனக்கும் அறிமுகம் ஆனார். போர்பந்தரில் புத்திலிபாய்க்குப் பிறந்து மது, மாமிசம் சாப்பிட மாட்டேன் என்று அம்மாவுக்குச் சத்தியம் செய்து கொடுத்துவிட்டுத் தென் ஆப்பிரிக்காவுக்குப் போய் நிறவெறியை ஒழித்துவிட்டு, உப்புக் காய்ச்சி, சட்டத்தை மறுத்து, வெளிநாட்டுத் துணிகளைத் தீ வைத்து எரித்து, வெள்ளையனை வெளியேறச் சொல்லிச் சுதந்திரம் வாங்கிக் கொடுத்த கையோடு கோட்சேவின் குண்டை வாங்கிக் கொண்ட காந்தியை ஆசிரியர்கள் அறிமுகப்படுத்தியிருந்தனர். மற்றபடி அவர் மீது பெரிய ஈர்ப்பெல்லாம் இல்லை. சட்டை போடாத அந்த முதியவரை ஒரு கமல் ரசிகனாயிருந்தும் என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. 'இவர் ஃபோட்டோவும், எக்ஸ்ரேவும் ஒரேமாதிரிதான் இருக்கும்' என்று கிண்டல் செய்திருக்கிறேன். காந்தி ஜெயந்தியன்று மட்டும் அவர் மீது மரியாதை வந்துவிடும். சிலநேரம் சனி, ஞாயிறுகளில் பிறந்துவிடுவார். அந்த மாதிரித் தருணங்களில் காலண்டரில் இருந்த அவர் படத்தை ஓங்கிக் குத்தியிருக்கிறேன். சத்திய சோதனை புத்தகத்தைப் பல பேச்சுப் போட்டிகளில் பரிசாகத் தந்தார்கள். எனக்கென்னவோ அந்த மொழிபெயர்ப்பு பிடிக்கவில்லை. காதிகிராப்ட் கடைகளுக்கே



எடுத்துப் போய் விற்க முனைந்திருக்கிறேன். கொல்லன் கடையில் ஊசி விற்பதற்கு நிகரான பழமொழியைக் கண்டுவிட்ட அதிர்ச்சியோடு அவர்கள் என்னைத் துரத்திவிட்டனர்.


ஏதோ ஒரு வாத்தியார் 'அகிம்சை' என்ற சொல்லைப் போகிறபோக்கில் காந்தியோடு இணைத்துப் பேச அது எனக்குப் பிடித்துப் போனது. அகிம்சை என்றால் என்னவென்று அந்த வாத்தியாரிடம் கேட்காமல் என் தாத்தாவிடம் கேட்டேன். 'இம்சைக்கு எதிர்ப்பதம்' என்று முடித்துவிட்டார். அவரும் வாத்யார்தான். எதுபற்றிக் கேட்டாலும் பதில் சொல்கிற 'ரஷ்யா ஹக்கிடம்' அவன் வீட்டு வாசலில் மடக்கி 'இம்சை' பற்றிக் கேட்டேன். காலையிலிருந்து கொல்லைக்குப் போகாமல் அவதிப்பட்டு வீட்டுக்கு வந்திருப்பவனை இப்படிக் கேட்பதே 'இம்சைதான்' என்று சொல்லிக்கொண்டே கக்கூஸ் கதவை அடைத்துவிட்டான்.

மாலையில் 'ரஷ்யா ஹக்கே' என்னைத் தேடி வந்தான். "'அகிம்சை' 'ஹிம்சை' எல்லாம் இருக்கட்டும். நீ எதுக்கு அத கேக்குற?"ன்னான். காந்தி பெயரைச் சொன்னேன். உடனே டென்ஷனாகிவிட்டான். காந்தி குறித்து அனைவரும் கேள்விப்படுகிற அவதூறுகளின் கதைச்சுருக்கத்தை அவனிடம்தான் முதன் முதலாய்க் கேட்டேன். நேதாஜிதான் பெரிய ஆளு என்று சொல்லிவிட்டுப் பல சுதந்திரப் போராட்டக் கதைகளை நேரில் பார்த்தது போல் சொன்னான். எனக்கு விஜயகாந்த் படம் பார்த்தது போல் ரொம்ப சுவாரஸ்யமாக இருந்தது. நேதாஜியை இன்னொரு விஜயகாந்தாகவே மனதில் பதித்துக்கொண்டேன். அன்றிலிருந்து நேதாஜி ஹீரோ. காந்தி வில்லன்.

அதற்குப் பிறகு நான் கேள்விப்பட்டதெல்லாம் பெரும்பாலும் காந்திக்கு எதிரான செய்திகளே. அவர் பொண்டாட்டியைக் கொடுமைப் படுத்தினார். பெண்களை நிர்வாணப்படுத்தித் தன்னோடு படுக்கவைத்தார். பகத்சிங்கைத் தூக்கில் போட்டபோது வெள்ளைக்காரர்களை ஆதரித்தார். மகன்களைக் கூட அவருக்கு வளர்க்கத் தெரியவில்லை. பாகிஸ்தானை ஆதரித்தார். ஜின்னாவை ஏமாற்றினார். அம்பேத்காரைப் பலவீனப்படுத்தினார். தீவிர இந்து விரோதி. சனாதன தர்மத்தில் ஆர்வம் கொண்ட சாதிப்பற்றாளர். அறிவியலுக்கு எதிரானவர். பழமைவாதி. வெள்ளையர்களின் கைக்கூலி. ஒவ்வொருவரைச் சந்திக்கும்போதும் புதிதுபுதிதாய் ஒரு செய்தி கிடைத்துக் கொண்டேயிருக்கும். கல்லூரிப் படிப்பை முடிப்பதற்குள் தீவிர காந்தி வெறுப்பாளராக மாறியிருந்தேன். இடையில் ஹேராம் படம் கொஞ்சம் அசைத்துப் பார்த்தது. ஆனால் அது 'இந்துத்துவப் படம்' என்று யாரோ தீர்ப்பு எழுதிவிட்டதால் என் மன அசைவை நானே தீவிரமாக மறுத்தேன். அந்த நேரம் ஓஷோவின் தீவிர ரசிகனாக இருந்ததால் காந்தி ஒரு மேசோசிஸ்ட் (சுய ஒறுப்பாளன்) என்கிற முத்திரைக்குள் அவர் ஆளுமையை அடைத்து விட்டேன்.

கடந்த 8 ஆண்டுகளுக்கு முன்பு வரை இதே நிலைதான். அதற்குப் பிறகு படித்த பல புத்தகங்கள் என்னை மாற்றின. 'அட்டன் பரோவின் காந்தியை' அழுதுகொண்டேதான் பார்த்தேன். இப்போது உலக வரலாற்றில் காந்தி அளவுக்கு என்னைப் பாதித்திருக்கிற பிறிதோர் ஆளுமை யாருமில்லை.

இப்போது யோசித்துப் பார்த்தால் ஆச்சர்யமாய் இருக்கிறது. ஒரே ஒரு மனிதன் இத்தனைத் தரப்பை ஏமாற்றிக்கொண்டே வாழும் காலத்தில் கோடிக்கணக்கான மக்களால் ஆராதிக்கப்பட்ட தேசத் தந்தையாக எப்படி இருந்திருக்க முடியும்? வாழ்ந்த காலத்தில் மட்டுமல்ல. இப்போதும் உலகின் பல விடுதலைப் போராளிகளுக்கும், சுற்றுச்சூழல் ஆர்வலர் களுக்கும், நுகர்வு வெறி எதிர்ப்பாளர்களுக்கும் அவரே ஆதர்ஸம். அவரைப் பற்றி அறிந்து கொண்ட பலருக்கும் இதே நிலைதான். உலகின் வேறெந்தத் தலைவருக்கும் இல்லாமல் காந்திக்கு



மட்டும் ஏனிந்த நிலை? எங்கள் ஊரில் உள்ள ஒரு காந்தியவாதியிடம் இதுபற்றிக் கேட்டேன். அவர் ரொம்ப எளிமையாகச் சொன்னார் 'ஆடு கோழி, மாடெல்லாம் மனுஷனுக்கு வேணும். சிங்கம், புலியெல்லாம் சர்க்கஸ்க்காவது வேணும். ஆனால் ராஜாளினால என்ன யூஸ்? மனுஷப் பயலுக்கு அது தேவையில்லை ல. அதான் நம்மாளு பூராம் காந்தியக் கைவிட்டுட்டான்' என்றார்.

உண்மைதான்; அவர் ஒரு மதவாதியோ, சாதியத் தலைவரோ, மொழிப்பற்றாளரோ, இனம் சார்ந்த அடையாள அரசியலை முன்னெடுத்த வரோ கிடையாது. ஏன் தேசியத்தின் மீது கூட அவருக்கு நம்பிக்கை கிடையாது. அதனால்தான் நமக்கு எதிராக ஆயுதம் வாங்குவதற்குத்தான் அது பயன்படும் என்று நேருவும், படேலும் வலியுறுத்திக் கூறினாலும் அதை ஏற்றுக் கொள்ளாமல் பாகிஸ்தானுக்கு உரிய பணத்தைத் தர வலியுறுத்திக்கொண்டேயிருந்தார். அவர் எதற்குள்ளும் அடைபடாத ஓர் அராஜகவாதி. பெரியாரும் அப்படித்தான். ஆனால் அவருக்காவது 'பிராமணியம்' என்கிற எதிரி இருந்தது. அந்த எதிர்மை அவர் இருப்பைத் தக்கவைத்திருக்கிறது. காந்திக்கு எதிரிகளே கிடையாது. வெள்ளைக்காரனும் அவருக்கு உரையாடல் தரப்பின் இன்னொரு முனை மட்டுமே. பகத்சிங்கின் உயிரைப் போலவே அவருக்கு வெள்ளைக்காரப் போலிஸின் உயிரும் முக்கியம்தான்.

அவர் மீது நீங்களும், நானும் நிறைய விமர்சனங்களை வைக்கலாம். ஆனால் அதற்கான முதற்படி அவர் மீது சுமத்தப் பட்டிருக்கும் அவதூறுகளின் பாசி விலக்கி அவரைப் படிப்பது மட்டும்தான். காந்தியைத் தேசத்தந்தை என்றழைப்பதை அவரே விரும்ப மாட்டார். அவர் மனித குல விடுதலை பேசிய மானுடவியலாளர். வரம்பு மீறிய நேசத்திலும், அறியாமையால் விளைந்த வெறுப்பிலும் அவர் மீது சுமத்தப்பட்ட சிலுவைகளிலிருந்து அவரை விடுதலை செய்வோம். ■

• முனைவர் ஹாஜாகனி

# உயர்த்தியது தமிழ்! – 2



பன்னிரண்டாம் வகுப்பு முடித்து ஓராண்டு இடைவெளிக்குப் பின் அடுத்து அதிராம் பட்டினம் காதிர் முகைதீன் கல்லூரியில் இணைந்தேன். அந்தக் கல்லூரிக்கு என்னைப் பரிந்துரைத்தவர் மறைந்த தமிழறிஞர் பன்னூலாசிரியர் பேரா.மு.அப்துல்கரீம். அப்போது கல்லூரி முதல்வராக வீற்றிருந்தவர் அவரது மாணவரான எம்.ஏ.அப்துல்காதர். சிரமங்களோடுதான் சேரமுடிந்தது. இளம் வணிக ஆட்சியியல் துறையில் இணைந்த எனக்கு ஒரு புதிய உலகம் அமைந்தது. அதில் நல்ல இதயங்களே நிறைந்திருந்தன.

கல்லூரியில் இணைந்த ஒரு மாதத்தில் கல்லூரியில் நடந்த இலக்கியப் போட்டிகள் அனைத்திலும் முதல் பரிசு. குறிப்பாக ‘வீரம்’ என்ற தலைப்பில் நடந்த கவிதைப் போட்டியில் நான் வாசித்த அறுசீர் விருத்தத்தை நானே எழுதியதாக நம்பிட நடுவர்கள் சிரமப்பட்டனர்.

1995ஆம் ஆண்டு சகிப்புத்தன்மை ஆண்டாகக் கொண்டாடப்பட்டது. அதற்காக, மாநில அளவிலான கவிதைப் போட்டியைக் காந்திய இளைஞர் மன்றம் அறிவித்திருந்தது. வெற்றி பெற்றோருக்குத் தமிழக ஆளுநர் பரிசு வழங்குவார் என்பது கூடுதல் செய்தி. இந்த அறிவிப்பைக் கவிதை அனுப்புவதற்கான கடைசி நாளின் மதியப்பொழுதில்தான் அறிகிறேன். உடனே ஒரு கவிதை எழுதி, தமிழ்த்துறைக்கு எடுத்துச்சென்றால் அங்கு யாருமில்லை. மாலைக்குள் கவிதையை அனுப்பவேண்டும். இப்போது திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் பணியாற்றும் பேரா. இம்தாதுல்லாஹ் அப்போது தமிழ்த்துறையில் தற்காலிகப் பணியிடத்தில் இணைந்திருந்தார். அவரிடம் சான்றுக்கடிதம் பெற்று அனுப்பிவைத்தேன்.

சில நாள்களில் மாநில அளவில் இரண்டாம் பரிசு என அறிவிக்கப்பட்டு அக்.2 காந்தி ஜெயந்தி

அன்று பரிசளிப்பு விழாவுக்காகச் சென்னைக்கு வர அழைப்போலை வந்தது. அண்ணாசாலை காதிகிராமோத்யோக் பவனில் அன்றைய ஆளுநர் சென்னாரெட்டி, இந்தியன் வங்கி கோபாலகிருஷ்ணன் ஆகியோரிடம் பரிசுகள் பெற்றேன்.

அக்டோபர் 2 எனக்கும் பிறந்தநாள். அந்நாளில் கிடைத்த இந்த அங்கீகாரம் மனதில் நம்பிக்கை விதைத்தது. எனது பொருளாதாரச் சூழல் அறிந்து காதிர் முகைதீன் கல்லூரியின் அன்றைய செயலாளர் மற்றும் தாளாளர் நினைவில் வாழும் ஏ.எம். ஷம்சுதீன் அவர்கள் எனக்கு விடுதிக் கட்டணத்தில் விலக்களித்தார். அக்காலத்தில் அது ஒரு பெரும் உதவியாக இருந்தது.

அனைத்துக் கல்லூரிப் பேச்சுப்போட்டி, கவிதைப்போட்டிகளில் அதிராம்பட்டினம் காதிர் முகைதீன் கல்லூரி சார்பில் கலந்துகொண்ட நான் வெறுங்கையோடு திரும்பாதவகையில் இறையருள் உதவியது. பாரதிதாசன் பல்கலைக்கழகக் கலைவிழாவின் (BARDFEST) பேச்சுப்போட்டியில் பெற்ற பரிசு, ஈரோடு கேசவலால் காளிதாஸ் சேட் சுழற்கோப்பை, பேராசிரியர்களும் மாணவர்களும் பொதுமக்களும் ஒருசேர கலந்துகொண்ட மண்டல அளவிலான சமூக நீதி நேற்று இன்று நாளை என்ற பேச்சுப்போட்டியில் முதல் பரிசு, பட்டுக்கோட்டை, மயிலாடுதுறை, திருவாரூர் ஆகிய ஊர்களில் நடந்த விசுவின் அரட்டை அரங்க நிகழ்வில் கிடைத்த பெரும்வரவேற்பு, தஞ்சையில் ஒரு பேச்சுப் போட்டியில் நான் பேசியதைக் கேட்டு அன்று மாலையே இன்னர்வீல் பெண்கள் சங்கத்தின் சிறப்பு விருந்தினராக ஓரியண்டல் டவர் விடுதியில் உரையாற்றியது.. இப்படி ஏராள நினைவுகள் இதயத்தில் எழுகின்றன.

கல்லூரி நூலகத்தில் ஒரு கூட்டுப்புழு போலக் குடியிருக்கத் தொடங்கினேன். பொங்குகடல் தாகத்தோடு புத்தகத்தேன் பருகினேன்.

அக்காலத்தில் புதுக்கோட்டை வெண்மணி பதிப்பகம் நடத்திய குறுங்காவியம் போட்டிக்குப் பொற்கொடி என்ற வெண்பாக் குறுங்காவியம் எழுதி அனுப்பினேன். புதுக்கோட்டைக்கு அழைக்கப்பட்டு உவமைக்கவிஞர் சுரதா முன்னிலையில் நான் கொண்டாடப்பட்ட தித்திப்புத் தருணங்கள் மறக்கமுடியாதவை.

கு.மாரிமுத்து, இளங்கோவன், ஏம்பல் தஜம்மல் முகம்மது, சந்தப்பா வேந்தர் யா.வென்னரசு, குளத்தூர் ச.ம.உ.கவிதைப்பித்தன் என ஓர் இலக்கியப் பெரும்படையே இனிய அன்பைப் பொழிந்தது.

“கூவநதிகள் குதித்தோடும் இலக்கியத்தில்

ஜீவநதியாய்ச் சிலிர்ப்பவனே நீ வாழ்க” என்று எழுதிக் கையொப்பமிட்டிருந்தார் கவிதைப்பித்தன்.

எனது கவிதைகளைத் தொகுத்துச் ‘சிறகு முளைத்த விரல்கள்’ என்ற கவிதை நூலைக் கல்லூரியில் பயின்றபோதே வெளியிட்டேன். நெஞ்சிற்கினிய நண்பர் மறைந்த சுந்தர சுகனின் டெடில் அச்சகத்தில் இந்நூலை அச்சிட, தஞ்சை சென்று வந்த பயணங்களும், கவிப்பேரரசு வைரமுத்து, மு.மேத்தா, ஆரூர் தமிழ்நாடன் ஆகியோர் தந்த அணிந்துரைகளும் அவர்கள் பொழிந்துவரும் அன்பும் மறக்கமுடியாதவை. எனது நூல் வெளியீட்டுக்கு மறுநாள் சென்னையில் நண்பர் நா.முத்துக்குமாரின் ‘பட்டாம்பூச்சி விற்பவன்’ வெளிவந்தது.

இளம்வணிக ஆட்சியியல் பயின்றபோது, ஒரு பாடத்தில் கூட வெற்றிபெறத் தவறியதில்லை. ஆங்கிலவழியில்தான் பாடங்களும் கற்பிக்கப் பட்டன. வகுப்பில் பேராசிரியர்களாகவும் வெளியில் ரசிகர்களாகவும் அமைந்த ஆசிரிய உள்ளங்களை இன்றும் நெகிழ்வோடு நினைத்துப் பார்க்கிறேன்.

அக்காலத்தில், சன் டி.வி.யில் கவிக்கோ அப்துல்ரகுமான் நடத்திய ‘கவிராத்திரி’ நிகழ்வில் புதுமையான தலைப்பு தந்து வாசகர்களைச் சில வரிகளில் கவிதை அனுப்பச்செய்து பரிசளிப்பார். ‘மெழுகுவர்த்தி ஏன் அழுகிறது’ என்ற தலைப்புக்கு நான் எழுதி அனுப்பிய கவிதைக்குப் பரிசளித்ததோடு சில நாள்களில் என்னையும் சிறப்பு விருந்தினராக அழைத்து, ‘வானத்து நட்சத்திரங்களும், சினிமா நட்சத்திரங்களும் சந்தித்துப் பேசினால்’ என்ற தலைப்பில் கவிபாட வைத்தார். வாழ்வின் இறுதிவரை, ஒரு தந்தை போல் இலக்கியத்தில் என்னை வழிநடத்திய கவிக்கோ அப்துல்ரகுமானை நான் என் கவிதைகளாலேயே கண்டடைந்தேன்.

அதிராம்பட்டினத்தில் படித்தபோது, நான் எழுதிய கடிதத்தை, சுமார் இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பின், எனக்குத் தொலைபேசியில் வாசித்துக்காட்டி, வியப்பின் விளிம்புக்கு அழைத்துச்சென்ற கவிக்கோ அப்துல்ரகுமான்,

'"எனது தூக்கத்தை நீங்களும் கலைத்துள்ளீர்கள்" என்று, உம் விகுதி போட்டுள்ளீரே, வேறு யார் கல்லூரிப் பருவத்தில் உமது தூக்கத்தைக் கலைத்தது?' என்று கேலி செய்தது இன்னும் நினைவில் நிற்கிறது.

படிக்கும் காலத்திலேயே அடிக்கடி சென்னைக்குப் படையெடுப்பதும், பின்னாளில் நிலைகொள்ளப்போகும் மாநகரின் நிலவரங்களை அறிவதுமாக இருந்தேன்.

கவிஞர் அண்ணாகண்ணனும், நானும் சென்னையில் மிதிவண்டியில் அலைந்த கதைகள் வியப்புக்குரியவை. நினைத்தாலே இனிப்பவை. கவிப்பேரரசு வைரமுத்து, கவிவேந்தர் மு.மேத்தா, கவிக்கோ அப்துல்ரகுமான், எழுத்தாளர் பாலகுமாரன் என ஏராளமான ஆளுமைகளின் வீட்டிற்கு நானும் அண்ணாகண்ணனும் முதலில் மிதிவண்டியில்தான் சென்றுள்ளோம்.

'நீங்கள் வானில் மிதிவண்டி ஓட்டியிருந்தால்
ஆர்ம்ஸ்ட்ராங் தோற்றிருப்பான்
கடலில் மிதிவண்டி ஓட்டியிருந்தால்
கொலம்பஸ் தோற்றிருப்பான்'

என்பேன். இதை எழுதிக்கொடுங்கள் என்பார் வெள்ளந்தியாக.

உவமைக்கவிஞர் சுரதா அந்நாள்களில் பொழிந்த அன்பு அலாதியானது. தி.நகர் ரங்கநாதன் தெருவில் உள்ள 'அன்னம்மாள் பில்டிங்' என்ற பழங்காலக் கட்டிடத்தின் பின்னறையில் இன்றைய பல நட்சத்திரங்களும் அன்று தங்கியிருந்தனர்.

மானா பாஸ்கரன் (இப்போது தி இந்து துணை ஆசிரியர்), ஆரூர் தமிழ்நாடன் (இப்போது நக்கீரன் துணை ஆசிரியர்) தங்கியிருந்த அறைக்கு உவமைக்கவிஞர் சுரதா, மது.ச.விமலானந்தன், எழுத்தாளர் ராஜகுரு உள்ளிட்ட ஆளுமைகளோடு நாங்களும் சங்கமிப்போம்.

அங்கிருந்து திருவல்லிக்கேணிக்கு உவமைக் கவிஞர் சுரதாவுடன் மாநகரப் பேருந்தில் பயணித்ததும், 'சாயபு கூர்மையான பையன், அவன் கவிதைகளைப் புத்தகமாகப் போடுங்கள்' என்று ஒரு பதிப்பகத்தில் அவர் என்னைப் பரிந்துரைத்ததும் இனிப்பான நிகழ்வுகள்.

கல்லூரி இளமைப்பருவம், கவிதை, பேச்சு, பட்டிமன்றம் என இலக்கியப் பொழுதாகவும், சமுதாய உரிமைக்கான களங்களில் போராட்டப்



பொழுதாகவும் கழிந்தது. இளம் வணிக ஆட்சியியல் முடித்ததும் எம்.சி.ஏ. அல்லது எம்.பி.ஏ. படிக்கப் பலரும் வற்புறுத்தினர். அக்காலத்தில் இப்படிப்பு படித்தோர்க்கு வெளிநாடுகளில் நல்ல வாய்ப்புகள் இருந்தன. இந்நிலையில் அதிராம்பட்டினம் கல்லூரியிலேயே எம்.சி.ஏ. படிக்கப் பலரும் அறிவுரை கூறினர். ஆயினும் என்னைத் தமிழ் தன் திசைக்கு இழுத்துக்கொண்டிருந்தது.

சென்னையில் காதிர் முகைதீன் கல்லூரித் தாளாளர் ஷம்சுதீன் சாஹிப், ஊழியர்களுக்கான ஊதியப்படிவத்தில் (pay bill) கையொப்பமிட்டு, முதலில் இதை அதிராம்பட்டினம் கல்லூரியில் கொடுத்துவிட்டு, பிறகு திருவாரூர் போக வேண்டும் என்றார்.

கம்பன் விரைவு ரயில் முதலில் திருவாரூர் வந்தது. இறங்கி, வீட்டிற்குச் சென்று தயாராகி, மதியம் போய் இதைக் கொடுத்தால் என்ன? என்ற மனமயக்கம். சொந்த ஊரில் இறங்கிவிட்டேன்.

பத்து மணிக்கு ஊதியப் படிவம் வராததால் கல்லூரியிலிருந்து தாளாளருக்குத் தொலைபேசி போக, ஓர் ஊழியர் வீட்டிற்கே வந்து அந்தப் படிவத்தை வாங்கிச் சென்றார். அது போனால்தான் ஊதியம் வரும் என்ற முக்கியத்துவம் அப்போது தெரியாது. ஊழியர்களுக்கு ஒருநாள் ஊதியம் தாமதமானாலும் அது தனக்குக் கௌரவப் பிரச்சினை என்ற கருத்து ஷம்சுதீன் ஹாஜியாருக்கு.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து, ஏற்கனவே சில காழ்ப்புகளில் இருந்த ஓர் ஆசாமி, ஷம்சுதீன் ஹாஜியாரிடம் என்னைப் பற்றித் தூபம் போட்டுவிட, அவர் என்னிடம் கோபம் காட்டிவிட, எம்.சி.ஏ. படிக்காமல் நான் தப்பிக்கநேர்ந்தது.

– தொடருகிறது சுவடு ■


காலம் கடந்த காவியம்

சிறுகதை

• ந.பிச்சமூர்த்தி
ஓவியங்கள் : அழ.ரஜினிகாந்தன்

# ஞானப்பால்

**ந**.பிச்சமூர்த்தி, தமிழ்ப் புதுக்கவிதையின் தந்தை என அழைக்கப்படுகிறார். கும்பகோணத்தில் பிறந்த இவர் வழக்கறிஞராகவும் அறநிலையத்துறை அதிகாரியாகவும் பணிபுரிந்தவர். தத்துவம் கற்றவர்.. தத்துவார்த்த முறையில் கதை சொன்னவர். பிக்ஷு, ரேவதி என்னும் புனைபெயர்களில் எழுதியவர். ஹனுமான், நவஇந்தியா என்னும் பத்திரிக்கைகளில் பணிபுரிந்தவர். தொடக்கத்தில் ஆங்கிலத்தில்தான் எழுதிவந்தார். 1932இல் கலைமகளில் வெளியான ‘ஸயன்ஸுக்குப் பலி’ என்பதே இவரது முதல் சிறுகதை. ‘எழுதுவது ஒரு கலைஞனுக்கு இயல்பானது... மல்லிகை பூப்பது போல, விதைகள் விழுந்து மரமாவது போல... அறிவுக்குப் புலப்படாத பாலுணர்வின் தூண்டுதல் போல...’ என்று கூறியவர்.




லிங்கங் கட்டி சத்திரத்துக்கு வந்து ஒரு வருஷமாகிவிட்டது.

அவன் வந்தது தனக்கடித்த அதிருஷ்டம் என்றுதான் தவசிப்பிள்ளை நினைத்துக்கொண்டான். எப்பொழுதுமே தனக்கு அதிருஷ்டம்தான் என்ற நினைப்பு அவன் நெஞ்சில் தடித்தே இருந்தது. ‘அ’னா ‘ஆ’வன்னா தெரியாத கரிக்கட்டைக்குப் பதினைந்து ரூபாய் சம்பளமும், சாப்பாடும், தினம் ஆறுபேருக்குச் சாப்பாடு போட்டுச் சமாளிக்கும் அதிகாரமும் எல்லாருக்கும் இலேசில் கிடைத்துவிடுமா என்ன? பிள்ளை குட்டி இருந்திருந்தாலாவது துரதிர்ஷ்டத்தைப் பற்றி நினைக்க வேண்டி

இருக்கும்; சத்திரத்து முதலியாரை வையவேண்டி இருக்கும்.

தவசிப்பிள்ளையின் அதிருஷ்டம், அவன் ஒண்டிக்கட்டை. முதலெடுப்பிலேயே முதலியாரை வாழ்த்திடும் வாய்ப்பாகவே அந்த வேலை அமைந்துவிட்டது. அதைத் தவிர, வாழ்த்துவதற்கு அதில் இன்னும் பல வாய்ப்புகள் இருந்தன. போகப்போகத்தான் தெரிந்தது. சத்திரத்துக்கு வேண்டிய கறிகாய் சாமான்கள் வாங்குகிற பொறுப்பு அவனைச் சேர்ந்ததுதானே? அவன் முதலில் யோக்கியனாகத்தான் இருந்தான். இருந்தாலும் கைக்கு உறையைப் போட்டுக் கொண்டு தேன் எடுக்க முடியுமா? கையில் ஒட்டிக்கொள்வதை நக்காமல்தான் இருக்க முடியுமா? அவனுக்குத் தெரியாவிட்டாலும் சொல்லிக்கொடுக்க வதங்கிய கத்திரிக்காயும், தேசல் படிக்கல்லும், தக்கைப் போட்ட எண்ணெய்ச் செம்பும், கறிகாய் கடைக்காரியும், மளிகை மாணிக்கம் செட்டியாரும் இருக்கும் பொழுது அவனால் என்ன செய்துவிட முடியும்? முதலாளியை வாழ்த்துவதற்கான ஆதாரங்கள் இதில் எல்லாம் ஏராளமாக இருந்தன.

சத்திரத்துக்குத் தவசிப்பிள்ளைதான் சர்வாதிகாரி. ஆகையால் சட்டமும் இல்லை, நெறிகளும் இல்லை. தானம் கொடுத்த மாட்டைப் பல்லைப் பிடித்துப் பார்ப்பார்களா? அங்கே வேலை செய்துகொண்டிருந்த ஆளுக்குத் தவசிப்பிள்ளை ஒருநாள் சீட்டைக் கிழித்து விட்டான். ஆனால் பாவம்! தவசிப்பிள்ளை பேரில் மட்டும் குற்றம் சொல்லக்கூடாது. அதிருஷ்டம் வந்து பிடரியில் குந்திக்கொண்டு கட்டளையிட்டால் நிறைவேற்ற வேண்டியது தானே!

ஒருநாள் எங்கிருந்தோ ஒரு லிங்கங் கட்டி அங்கு வந்து சேர்ந்தான்.

வந்தவனைத் தவசிப்பிள்ளை ஒன்றும் கேட்கவில்லை. சத்திரத்துக்கு வந்த பிறகு பெற்ற அனுபவத்தால் தவசிப்பிள்ளைக்கு 'எக்ஸ்ரே' பார்வை அந்துவிட்டது. ஆனால் அதன் உதவி இல்லாமலேயே தவசிப்பிள்ளையால் லிங்கங் கட்டியை எடை போட்டுவிட முடிந்துவிட்டது.

மழுக்கிய தலை, கழுத்திலே வெள்ளிப்பெட்டி மூடிய லிங்கம், இடுப்பில் பழுப்பேறிய வேஷ்டி நாலுமுழ நீளம், இருபத்தி நாலு அங்குல அகலம்.

லிங்கங் கட்டி தலையைத் தடவிக்கொண்டு நின்றானேயொழிய எதுவும் பேசவில்லை.

ஆனால் தவசிப்பிள்ளை பதில் சொல்லி விட்டான்.

"சமையல் ஆன பிறகு சாப்பிடலாம். இப்போது எங்கே இருந்து எங்கே போறீங்க?"

"பண்டாரத்துக்கு ஊரேது, பேரேது, போக்கிடமேது? சோறு கண்டால் சொர்க்கம். ஒரு கவளம் சோறு இங்கே நெதம் கிடைச்சா இதுதான் போக்கிடம். அதை இதைச் செஞ்சிக்கிட்டுக் கிடந்துடுவேன்"

தவசிப்பிள்ளைக்கு ஒரே யோசனை. ஆளைப்பார்த்தால் சுமைதாங்கி மாதிரி இருக்கிறான். எந்த வேலை வைத்தாலும் தாங்குவான்! சமையல் பாத்திரம் விளக்குகிற காத்தானோடு தினம் போராட முடிகிறதா? அஞ்சு ரூபாய் சம்பளமும், மிச்சம் மீதம் தினம் சோறு கிடைக்கிறதே அது போதாதாம்! தினம் அடித்துக்கொள்கிறான்! சோறு கொடுத்தால் குழம்பில்லையா என்கிறான்: குழம்பு கொடுத்தால் கறியில்லையா என்கிறான்: சோறு குழம்பு கறி கொடுத்தால், இவ்வளவுதானோ என்கிறான்! இவன் வம்பே இல்லாமல் ஒழித்துவிட்டால்? சுமைதாங்கிதான் வந்திருக்கிறான்! ஒரு கவளம் சோறு செலவு! ஐந்து ரூபாய் மிச்சம்!

மறுநாள் காத்தான் சீட்டு முன்னறிவிப்பின்றிக் கிழிக்கப்பட்டது. லிங்கங் கட்டிக்கு அந்தப் பதவி அளிக்கப்பட்டதென்ற விசயம் தெரியவே தெரியாது. சோற்றுக்காகத் தினம் ஊர்ஊராய் அலையவேண்டாம்! ஒரு மணி நேரம் பாத்திரம் தேய்த்துப் பண்டம் கழுவிக் கொடுத்தால் புண்ணியம்! நாவுக்கரசர் உழவாரப்படை வைத்திருக்கவில்லையா? பெரிய அதிருஷ்டம் அடித்துவிட்டதாக லிங்கங் கட்டிக்கு அதிக மகிழ்ச்சி. தவசிப்பிள்ளையும் தனக்கு அதிருஷ்டம் அடித்ததென்று நினைத்துக்கொண்டான்.

வந்த புதிதில் எல்லாமே நன்றாக இருந்தன. ஒரு கவளம் கேட்ட ஆளுக்கு இரண்டு வேளையும் மூன்று கவளமும் கிடைத்துவிட்டால் மனம் துள்ளாதா? பாத்திரங்கள் கரி போகத்

தேய்க்கப்பெற்றுப் பளபளப்பாக இருந்தன. முனகாத நல்ல ஆள்கிடைப்பது ஒரு வாய்ப்புத்தான்.

“சத்திரத்து வேலைக்குத்தான் புணையாம்! காத்தான் சாமான் தூக்கும் கூலிக்காரனல்லவாம்!” என்ன லூட்டி அடித்துக்கொண்டிருந்தான்! அப்பாடா என்றிருந்த தவசிப்பிள்ளைக்குத் தினம் சாப்பிட்டுவிட்டுச் சத்திரத்துத் திண்ணையில் லிங்கங் கட்டி படுத்துக்கொண்டபோது , ஆயாடீ என்று சொல்லிக்கொண்டே ஆறுதலாகப் படுத்துக்கொண்டான் தவசிப்பிள்ளை.

அதோடு விசயம் போய்விடவில்லை. சத்திரத்தில் வந்து போகிறவர்கள் லிங்கங் கட்டியைப் பாராட்டாமல் போவதில்லை.

“நல்ல ஆளு! பக்திமான்! நாள் தவறாமல், மணி பிசகாமல் திருக்குளத்தில் பல்லைத் தேய்த்துத் துணி துவைத்துக் குளித்துவிட்டுப் பட்டையாய்த் திருநீறிட்டுக்கொண்டு கிழக்கே சூரியனைப் பார்த்துத் தவறாமல் செய்கிறாரே, அது ஒண்ணே போதும்! இந்த மாதிரி ஆளைப் பார்க்கறதே அபூர்வமாயிடுத்தே!” என்று வியப்படைவார்கள்.

ஆமாம்! இந்தக் கிரியைகளை லிங்கங் கட்டி அலட்சியப்படுத்துவதில்லை. அதற்கு மேல் படிப்பு கிடிப்பு என்று லிங்கக் கட்டி தொந்தரவெதுவும் பட்டுக்கொள்வதில்லை. “ஒருகால் சிவசிதம்பரம் என்று சொன்னால் இருக்காது ஊழ்வினையே” என்று மட்டும், பேச்சு நடுவில் புகுத்துவான். அதை நம்பினானா இல்லையா என்று கேட்டால் அவனுக்கே சொல்லத்தெரியாது. லிங்கங் கட்டி வெள்ளை வேட்டிப் பண்டாரமானபோது சமய அறிவு ஒன்றையும் சம்பாதித்துக் கொள்ளவில்லை.

லிங்கத்தைக் கயிற்றில் கட்டிக் கழுத்தில் மாட்டிக்கொண்டு செய்யவேண்டிய காரியங்களை எல்லாம் சொல்லிக்கொடுத்துவிட்டு, பசுபதியும் பரந்த உலகமும் இருக்குமட்டும் கவலையில்லை, கிழக்கே போ என்றார்கள்.அன்று முதல் சொன்னபடி செய்துகொண்டு வந்தானே ஒழிய, தன் கிரியைகளையும் மனத்தையும் பிணைக்க வேண்டுமென்று அவனுக்குத் தோன்றியதில்லை. இரண்டும் ஒன்றிய செயல்நெறி காணவேண்டும் என்று துடித்ததில்லை.

எனவே சத்திரத்துக்கு வந்து போகிறவர்களில் யாராவது இரண்டணா நாலணா கொடுத்தால், அதை மறுப்பதில்லை. மறுக்க வேண்டும் என்று தோன்றியதில்லை. அதற்கு மாறாகக் காசு தேவையாக இருந்தால் கொஞ்சம் புதுக் காசாகக் கொடுங்கள் என்று வாங்கிக்கொண்டு கெட்டியாக இடுப்பில் சொருகிக்கொள்வான்.

வந்த எட்டு ஒன்பது மாதங்களுக்குள் புது விளக்குமாறு தேய ஆரம்பித்துவிட்டது. லிங்கங் கட்டியின் பேரில் எவ்வித வஞ்சனையுமில்லை. தவசிப்பிள்ளையோ பெரிய பேர்வழி! நாளாக ஆக லிங்கங் கட்டியின் உணவில் ஒரு கவளம் இரண்டு கவளம் குறைய ஆரம்பித்தது. சிலநாள், கறியோ குழம்போ கூட இருக்காது. சத்திரத்துக்கு வந்தவர்கள் அதிகமாகச் சாப்பிட்டுவிட்டார்கள் போல் இருக்கிறது என்று நினைத்துக் கொண்டான்.

அவனுக்கு ஆட்சேபனை இல்லை என்றாலும் அவன் வயிறு புகார் செய்தது. இரண்டொரு நாள் பல்லைக் கடித்துக்கொண்டிருந்தான். புண்யவான் தருமம் பண்ணியிருக்கிறான்! ஒரு கவளம் குறைந்து போனால் என்ன பிரமாதம் என்று ஒரு நாள் இரண்டு நாள் நினைத்துக்கொண்டான் முடியவில்லை. மூன்றாவது தினம் முதல் சத்திரத்துச் சாப்பாட்டுக்குப் பிறகு கருமாதி, கல்யாணம், மகேசுவர பூஜை என்று கேள்விப் பட்டால், தவறாமல் அங்கும் போய்ச் சாப்பிடுவதென்று வழக்கப்படுத்திக்கொண்டான். கொள்ளுத் தண்ணி ஊத்துவதாகக் கேள்விப் பட்டால் கூட அங்கு போய் வாசனையாவது பார்த்துவிட்டு வந்தான்! அங்கெல்லாம் கூட இரண்டணா ஓரணா கிடைத்தது.

லிங்கங் கட்டிக்குக் காசு கிடைக்கிறது என்று தெரிந்தவுடன்தான் தவசிப்பிள்ளை தேய்பிறை மரபை உணவில் புகுத்த ஆரம்பித்தான். சத்திரத்தில் பண்டாரத்துக்கு விருந்தா வைப்பார்கள்? ஏதோ புண்ணிய காரியத்தில் அப்படி இப்படித்தான் இருக்கும் என்று சொல்லும்பொழுது லிங்கங் கட்டிக்கூட சகஜம் தான் என்று ஒத்து ஊதிவிடுவான். “வேண்டு மானால் ஏதாவது ஓட்டலில் வாங்கிச் சாப்பிடு சாமியாரே!” என்று உபதேசம் செய்வான் தவசிப்பிள்ளை.

லிங்கங் கட்டிக்குக் காசு சேர்ந்துபோய் விட்டதென்று எப்படியோ தவசிப்பிள்ளை கணக்குப் பண்ணிவிட்டான். அதை எப்படியாவது கரைத்துவிட வேண்டுமென்ற விஷம எண்ணம் அவனுக்கு வந்துவிட்டது.

தவசிப்பிள்ளையினிடத்தில் பணத்தை வைத்திரு என்று லிங்கங் கட்டி கொடுத்திருந்தால் இந்த விசம எண்ணம் தோன்றியிருக்குமா என்பது ரசமான கேள்வி. ஆனால் விடை எளிது. நிச்சயமாகத் தோன்றியே இருக்காது. இதில் வந்த கஷ்டமென்னவென்றால் பாலுக்குப் பூனையைக் காவல் வைக்கமுடியாது என்பதுதான்.

லிங்கங் கட்டி எதோ குருட்டுச் சாமர்த்தியத்துடன் சில்லறை அடகு பிடித்து வந்த கிழவியிடம் இந்தப் பணத்தைக் கொடுத்து வைத்திருந்தான். கடவுள் பொய்யாகப் போனால் கூட அந்தக் கிழவி பொய்யாகப் போகமாட்டாள் என்று அந்த வட்டாரத்திலே அவளுக்கு நல்ல பேர்.

ஆனால் இந்த இரகசியம் தவசிபிள்ளைக்குத் தெரியாது. திருட்டுப் பயல் என்று கறுவிக் கொண்டே எப்போதும் போல் அரை வயிற்றுச் சோறு போட்டு முழு வேலையையும் வாங்கிக்கொண்டிருந்தான்.

தவசிப்பிள்ளைக்கு ஒரு யோசனை தோன்றிற்று.

"என்ன லிங்கங் கட்டி! உனக்குத்தான் பெண்டாட்டி இல்லியே!"

"பண்டாரமாச்சே!"

"அப்படின்னா, தொடுப்புக்கூட?"

"அதென்னங்க, நாக்கு அழுகிப்போயிடாது"

"கோவிச்சுக்காதே. ஒம் பணத்தைப் பின்னே என்ன செய்யறே?"

"பத்திரமா இருக்குங்க"

"நீ நின்னா நெடுஞ்சுவரு, விழுந்தா குட்டிச்சுவர். பெண்ணா பிள்ளையா பெண்டாட்டியா? ஒண்ணும்தான் இல்லை. காலணாவுக்குக் காராபூந்தி கூட வாங்கிச் சாப்பிடமாட்டே. பணத்தைப் பத்திரமா வைச்சுட்டு என்ன பண்ணுவே?"

உள்ளபடியே லிங்கக் கட்டிக்குத் திகைப்பாய்ப் போய்விட்டது. ஆமாம், பணத்தை வைத்துக் கொண்டு என்ன பண்ணுகிறது?

"பின்னே எறிஞ்சிடலாமா?"

"அதுக்குச் சொல்லவில்லை. ஒரு நல்ல காரியம் சொல்றேன், யோசிச்சுப்பாரு".

"ஓ!"

"கழுத்து லிங்கம் இருக்கில்லே?"

"ஆமாம்"

"இதைக் கவுத்தாலே கட்டிப் போட்டுக்கிட்டுக் கிடக்கிறியே! இருக்கிற பணத்துக்குப் பவுனைக் கிவுனை வாங்கிச் செயின் பண்ணி லிங்கத்தை அதில் கோத்துப்பிடேன். கழுத்துக்கும் அழகாயிருக்கும். லிங்கமும் பார்வையாயிருக்கும். திருக்குளத்திலே திருநீறும் தங்கச் செயின் லிங்கமுமாகக் கிழக்கே சூரியனைப் பார்த்துக் கொண்டு நிக்கறதைப் பார்த்தால் அசல் சிவப்பழம்பாங்க. நல்லா இருக்குமே?"

"என் கழுத்துக்கு என்னாத்துக்குங்க?"

"ஒன் கழுத்துக்கா செயின்? இல்லை இல்லை லிங்கத்துக்குச் செயின் செய்யச் சொல்றேன். செயின் போட்ட லிங்கத்தை மடியிலே கட்டிக்கிறியா?"

"இல்லை, இல்லே".

"அப்படின்னா கழுத்திலேதானே போட்டுக் கணும்?"

"செஞ்சால் பாத்துக்குவோம்" என்று லிங்கங் கட்டி சொல்லிப் பேச்சை வெட்டி விட்டுவிட்டான். தவசிப்பிள்ளையும் அதோடு போய்விட்டான்.

தென்னம் நெற்று சீக்கிரமாக முளைத்து விடாது. கொஞ்சம் காலம் பிடிக்கும்.

அதுமாதிரி லிங்கங் கட்டி மனத்திலே போட்ட தென்னம் நெற்றும் மெதுவாக முளைக்க ஆரம்பித்தது. கிழவி நல்லவள்தான். ஆனால் வயசாயிடுச்சே! ஒரு சமயத்தைப் போல ஒரு சமயம் இருக்குமா? ஆள் யாரும் தெரியவில்லையே!

தவசிப்பிள்ளை சொல்றது நல்ல யோசனை தான். லிங்கத்துக்குச் செயின் பண்ணினால் நல்லாத்தான் இருக்கும் என்றெல்லாம் யோசனை செய்துகொண்டே இருந்தான்.

இதற்குள் வயது ஒரு வருஷம் கூடிவிட்டது. புகையிலையைப் போலக் காய்ந்து வந்த லிங்கங் கட்டி வெள்ளரிப்பழம் மாதிரி ஆகிவிட்டான்.

ஒருநாள் திடீரென்று ஆசாரியிடம் போய்த் தனக்குச் செயின் செய்ய எவ்வளவு பவுன் வேண்டுமென்று கேட்டான். ஆசாரிக்குச் சிரிப்புத் தாங்கவில்லை. "இந்த வயதிலா கலியாணம் செய்துகொள்ளப்போகிற?" என்று கிண்டலாகக் கேட்டான்.

"இல்லை, இந்த லிங்கத்துக்கு'' என்று காட்டினதும் வியாபார ரீதியில் ஆசாரி பேசத் தொடங்கிவிட்டான்.

"முக்கால்பவுனிலேருந்து செய்யலாம்."

"அதுக்குக் குறைஞ்சி?"

"கூலி?"

"உனக்காகப் பதினைஞ்சு ரூபாய்."

"என்னய்யா, முக்கால் பவுனுக்கு..."

"அதானய்யா சின்னச் செயினுக்குப் பெரிய கூலி, பெரிய செயினுக்குச் சின்னக்கூலி. பெரிய செயினாவே லிங்கத்துக்குப் பண்ணிக் கட்டிக்கியேன்?"

"ஏதோப் பாத்துக் கூலி வாங்கிக்கோ அய்யா, பவுன் வாங்கியாறேன்" என்று திரும்பிவிட்டான்.

பதினைந்து நாள் கழித்துத் திருக்குளத்தில் நீராடிவிட்டுத் திருநீறணிந்து தங்கச் செயினும் லிங்கமும் துலங்க, லிங்கக் கட்டி சத்திரத்துக்குத் திரும்பி வந்தான்.

தவசிப்பிள்ளை திண்ணையில் ஏதோ சில்லறை வியாபாரம் பண்ணிக் கொண்டிருந் தான். லிங்கங் கட்டியைப் பார்த்ததும் புதுமையாக இருந்தது. இன்னதென்று ஒரு நிமிசம் விளங்கவில்லை. பிறகுதான் தெரிந்தது. "சபாஷ்! சபாஷ்! ரகசியமா செஞ்சிட்டியே!" என்றான் சந்தோஷம் பொங்க.

"என்ன பிரமாத காரியம்! ஏதோ ஆண்டவனுக்கு உவப்பாயிருக்கேன்னு.."

"நல்ல காரியம், நல்ல காரியம்" என்றான் தவசிப்பிள்ளை.

கண்ணிலே படாத காசாக வைத்துக் கொள்வதை விட்டுத் திருட்டுப் பயலை வருத்தி அழைப்பது போன்ற காரியத்தைச் செய்து விட்டானே இந்த ஆள் என்று நினைத்துக் கொண்டான். ஏன் இந்த யோசனை சொன்னோமென்ற கழிவிரக்கத்தின் சாயல் கூடப் படர்ந்துவிட்டது.

செயின் போட்ட லிங்கங் கட்டி ஆகிவிட்டதற்காக அவன் ஒன்றும் மாறிவிட வில்லை. வழக்கம் போலச் சத்திரத்துக் காரியங்களைப் பார்த்துக் கொண்டான். கழிவிரக்கம் காட்டிய தவசிப்பிள்ளையும் மாறவில்லை. பண்டாரத்துக்குக் கொடுக்கிற கவளத்தில் ஏற்றம் ஒன்றும் ஏற்படவில்லை.

இதற்குப் பிறகு நான்கு மாதம் இருக்கலாம். லிங்கக் கட்டிக்குத் திடீரென்று ஒரு நினைப்பு வந்தது. "தம்பி! திருமுலைப்பால் உத்சவத்துக்குப் போகனுமின்னு தோணுது. போயிட்டு ஒரு வாரத்திலே வந்திடறேன்" என்றான் தவசிப் பிள்ளையிடம்.

"குடுத்து வச்சிருக்கணும். போயிட்டுவா".

"பாத்திரம் எல்லாம் விளக்கணுமே?"

"யாரையாவது வச்சுப் பார்த்துக்கிடறேன்."

மறுநாள் சீர்காழிக்கு லிங்கங் கட்டி புறப்பட்டுவிட்டான். ஒரு வாரம் லிங்கங் கட்டியில்லாமல் பொழுதை ஓட்ட வேண்டுமே என்ற கவலைகொண்ட தவசிப்பிள்ளை படுக்கப் போகுமுன் ஒரு நாளாச்சு என்ற கணக்கிட்டுக் கொண்டு படுத்தான். ஒவ்வொரு தினமும் ரப்பர் மிட்டாய் மாதிரி நீண்டது.

நான்காம் நாள் காலை தவசிப்பிள்ளை காய்கறி நறுக்கிக்கொண்டிருந்தான்.

முற்றிலும் எதிர்பாராமல் லிங்கங் கட்டி எதிரே வந்து நின்றான்.

தவசிப்பிள்ளைக்குக் கனவா என்று கூடத் தோன்றிவிட்டது.

"என்ன, லிங்கங் கட்டியா?"

"பின்னே?"

"அதுக்குள்ளார வந்துட்டியே?'' என்று கேட்டுக்கொண்டே லிங்கங் கட்டியை மேலும் கீழும் பார்த்தான். கைம்பெண் கழுத்துப் போலிருந்தது.

"என்ன பண்டாரம், லிங்கம் சங்கிலி ஒண்ணையும் காணோமே?"

"ஆமாம்"

"எங்கே?"

"ஏமாந்து போயிட்டேன்"

"எப்படிப் போச்சு?"

"அதாங்க ஞானப்பால்"

"விளக்கமாகச் சொன்னா அல்ல தெரியும்?"

"திருவிழா பாத்தூட்டு முந்தா நாள் ராத்திரி சத்திரத்து வாசல்லே குந்திக்கிட்டு இருந்தேன். வேறு யாராரோ திண்ணையிலே வாழைத் தோலைச் சீவிப்போட்டாமாதிரி தலைமாடு கால்மாடா விழுந்து கிடந்தாங்க. திண்ணையிலே யாரோ ரெண்டு ஆள் என்னவோ பதி பசு பாசம் இன்னு சத்தம் போட்டுப் பேசிக்கிட்டு இருந்தாங்க. நடுவிலே அதிலே ஒரு ஆள் பாடினாரு. கொஞ்சநேரத்துக்கெலாம் பேச்சு அடங்கிப்போய், பாட்டாப் பாட ஆரம்பிச் சுட்டாரு. ரொம்ப நல்லாக் குயில் கணக்காப் பாடினாரு. அப்படியே சாஞ்சுக்கிட்டிருந்தவன் அதிலே சொக்கிப் போயிட்டேன்..

"மாங்காய்ப்பாலுண்டு
மலைமேலிருப்போர்க்குத்
தேங்காய்ப்பால் ஏதுக்கடீ குதம்பாய்"

இன்னு ஒரு பாட்டு பாடினாரு. அப்படியே மெய்மறந்தே போயிட்டேன். பொறவு, பாட்டே காதில் விழல்லை.

"அப்புறம் நெனைப்பு வந்தப்பொ கண்ணைத் துறந்து பார்த்தேன். கிழக்கு வெளுத்துக் கிட்டிருந்தது. திருவிழா அலுப்பும் அந்தப்பாட்டும் என்னை அப்படி அமட்டிவிட்டது. நல்ல தூக்கம்ன்னு நினைத்துக்கிட்டபோது ஒரு திகில் பிறந்தது. கழுத்தென்னவோ லேசாக இருந்தது. தொட்டுத் தடவிப்பார்த்தேன். லிங்கமா செயினா ஒண்ணையும் காணோம். யாரோ தூங்கிக் கொண்டிருந்தபொழுது அடிச்சிக்கிட்டுப் பொயிட்டார்கள்! சத்திரத்துத் திண்ணையில் இருந்தவர்களை ஒவ்வொருவராகப் பார்த்தேன். திருடி இருப்பார்கள் என்று அவர்களைப் பார்த்தால் தோணவில்லை.

"என்ன பாக்குறீங்க பண்டாரம்'' என்று திண்ணையில் இருந்தவர்கள் விசாரித்தார்கள்.



நான் நடந்ததைச் சொன்னேன். அவர்கள் சிரித்தார்கள்.

"சாமி எடுத்துக்கிட்டுப் போயிருக்கும். ஞானப்பால் குடுக்க வேணாம்?" என்றார்கள்.

எனக்குச் சுருக்கென்று பட்டது. 'லிங்கத்துக்குப் போய் மட்டி மாதிரி தங்கச் சங்கிலி செஞ்சேனே? பைத்தியக்காரத்தனம்!' என்று நினைத்துக் கொண்டே ஊருக்குத் திரும்பி வந்துவிட்டேன்."

"ஞானப்பால் கிடைச்சுப் போச்சு"

"அப்புறம்?"

"நான் போறேன்"

"எங்கே?"

"இப்படியே நீளமா"


"பின்னே ஏன் வந்தே?"

"சம்பளங் கொடுத்து வேறு ஆள் பாத்து வச்சுக்குங்கன்னு சொல்ல வந்தேன்".

"அடப்பாவி! நெசமாகவே ஞானப்பால் கிடைச்சிட்டுதா?"

லிங்கங் கட்டி பதில் சொல்லவில்லை. மழுங்கிய தலையைத் தடவிக்கொண்டே தெருவில் இறங்கிவிட்டான். ■


• கவி: கார்த்திக் திலகன்
சித்திரம் : கொ.வடிவேல்



நினைவில் இருந்து
என்னைத் தூக்கி எறிந்துவிட்டாய்.
நல்ல வேளை!
நான் விழுந்த இடம் நடுக்கடல்.
என்னோடு சேர்ந்து
ஐந்தாறு கப்பல்கள் அங்கே
நீந்திக் கொண்டிருந்தன.
உள்ளே மீன்கள் மாலுமிகளைப் பற்றிய
பாடலைப் பாடியபடி,
சொல்லின் குடுவைகளை
நீர்க் குமிழ்களாக உதடுகளில்
ஏந்திச் சென்றன.
என் அருகே நீந்தும்
கப்பல்களும் உலோக மீன்கள்தான்
என்கிற உண்மையை நான்தான்
கடலுக்குச் சொன்னேன்.
கடலோ தனது நீர் மூலக்கூறு
வாய்ப்பாட்டை அடிக்கடி மறந்துவிட்டு
ஆவியாகிவிடுகிறது.
நானதைக் கடலுக்கு
நினைவூட்டிக்கொண்டே நீந்தினேன்.
பிறகு,
கடலுக்கு அடியில் இருக்கும்
கடற்கன்னியின் வீட்டுக்குச்
சாமியார் மீன்களிடம் வழிகேட்டுப்
போனேன்.
அழைப்பு மணியை அழுத்திவிட்டுக்
காத்திருந்தேன்.
கதவைத் திறந்து வெளியேவந்த
கடற்கன்னிக்கு,
அச்சுஅசலாக உன்முகம்....

• துரை.நந்தகுமார்


# சமூகக் காயத்திற்கான களிம்பு




நூல் : **பாகன் திரும்பும் வரை**

ஆசிரியர் : கவிஞர் **வலங்கைமான் நூர்தீன்**

இந்தச் சமூகத்திற்கான இத்தருணத்தில் எது தேவையென என் கவலை தோய்ந்த கண்முன் பளீரெனத் தோன்றியது கவிஞர் வலங்கைமான் நூர்தீன் எழுதிய "பாகன் திரும்பும்வரை" என்ற கவிதைத் தொகுப்பு. தட்டுத்தடுமாறி இருளில் பயணித்தவனுக்குப் பாதை காட்டிய நம்பிக்கை வெளிச்சமே இத்தொகுப்பு. எழுதவேண்டும் என்று எழுதாது எழுதியே தீரவேண்டும் என்ற கட்டாய காலத்தில் கனன்று வெளியே வந்துள்ளது இந்நெருப்புத் தொகுப்பு. முகப்பு அட்டைத் தொடங்கிப் பின் அட்டை வரை அற்புதம்.




தொகுப்புக்குள் நுழைகிறேன்.. ஆகச் சிறந்த கவிதைகளால் நிரம்பி இருக்கிறது முழுத் தொகுப்பும்.

திட்டமிடல், செய்நேர்த்தி, சொல்லாடலில் செதுக்கி இருக்கிறார் வலங்கைமான் நூர்தீன். நம்மைக் கடந்துசெல்லும் அன்றாட நிகழ்வையே பாடுபொருளாகப் பதித்துள்ளார். வார்த்தை அலங்காரம் தவிர்த்து மனிதநேயம் ஒன்றே குறிக்கோளாய்க் கொண்டு இயல்பாய் அமைந்த கவிதைகள். ஒவ்வொரு கவிதை முடிப்புக்குப் பிறகு நெஞ்சில் வைத்துப் புத்தகத்தை இறைப்பாறினேன். வாழ்ந்தோம் மறைந்தோம் என்றில்லாது இந்தச் சமூகத்தில் நாமும் ஏதோ ஒன்றைச் செய்தோம் என்ற மனநிறைவில் நண்பன் நூர் செய்துள்ளார்.

கற்பனையோ அதீத புனைவோ வாய்ப்பற்றதாகவோ சாத்தியமற்றதாகவோ இருந்தாலும்.. எப்போதெல்லாம் இம்மண்ணில் அநீதி நடக்கிறதோ அப்போதெல்லாம் நான் அவதாரம் எடுப்பேன் என்பது, தவித்த நாவிற்கு ஒரு மிடறு நீர் போதுமானதும், இதமானதும், அடுத்து இன்னொரு நிமிடம் வாழ்வின் ஆயுளை நீட்டிப்பிற்கும் ஏற்றதே. அப்படியான மானுட நாட்களின் நீட்டிப்பே இந்தப் பாகன் திரும்பும் வரை.

தொகுப்பு முழுக்க நல்ல கவிதைகள் பலவிதப் பாடுபொருளாய் இடம்பெற்றிருந்தாலும் ஒரு சில நம் பார்வைக்கு... அது கணக்கில் சற்றே கூடுதலாய் இருந்தாலும் பெற்றவளுக்கு ஒவ்வொரு குழந்தையும் சிறப்பே.

ஒரு ஞாயிற்றுக்கிழமை
என்ன தந்து விடப்போகிறது?
.......... ......... ........
ஒவ்வொரு சனியிரவும் முழுப் புணர்ச்சிக்குக்
காத்திருப்பவளின்
தொடையிடுக்கில் திணிக்கப்பட்டிருக்கும்
தலையணையின் காய்ந்த கறைகளில்
அழும் யோனியின் கண்கள்....

என்ன நண்பர்களே முதல் கவிதையே அதிர்கிறதல்லவா...

நானும் அதிர்ந்தேன்.

ஒரு நல்ல கவிதை அடுத்த கவிதைக்கு நம்மை நகர்த்தாது...

ஐந்து நிமிட இடைவெளிக்குப் பிறகு...
ஜீன்ஸ் பேண்டை நாபியின் கீழ்
சரி செய்து கொண்டே...
........ ........ .......
அவளுதிர்த்துவிட்டுப் போனது
என் கண்களில் உறைகிறது.
செவ்வக வடிவ பிளாஸ்டிக்வில்லை.
கர்ப்பம் பரிசோதிக்கும் கருவி.
..... ........ ......
ஒரு இளஞ்சிவப்புக் கோடும்
உறுதிப்படுத்தியது அவள் தாயானதை.

....கவிதை இறுதியில் நெடியாய் இடியாய் முடிக்கிறார் கவிஞன். நடிகையாக இருந்தாலும் அவளும் ஒரு தாய் ஈன்ற மகள்தானே என்ற அதீத அக்கறையான கவிதை. கடந்து போகக்கூடாத இடங்களில் கடந்துபோகாமல் நின்று நுண் பார்வையில் விழுந்த கவிதைகளே இத்தொகுப்பு முழுக்க விரவிக் கிடக்கிறது.

துடிக்கத் தொடங்கியிருக்கும் உயிர்
இன்றோ நாளையோ ஏதோவொரு
தனியார் மருத்துவமனையின்
கழிவுத் தொட்டியில்
சிதறிக் கிடக்கலாம்
கலைக்கப்பட்ட சிவப்புக்கோடுகளாய்

நண்பர்களே கவனித்தீர்களா ரிக்டர் அளவில் நூர்தீனின் அதிர்வை.

"சுதந்திரத்திற்கு முன்னாலான பின்னரசியல்" என்ற தலைப்பில் நீண்ட கவிதையின் இறுதியில் நூர்....

அருகிலமர்ந்து தும்மிக்கொண்டிருக்கும் மகன்
நான் புரட்டிக் கொண்டிருக்கும்
ஒன்றுமே எழுதப்படாத பழுப்பேறிய
டைரியின் பக்கங்களில்
வாசித்துக்கொண்டிருக்கிறான்
சுதந்திரத்திற்கு முன்னாலான
பின்னரசியல் கவிதைகளை.

இந்தச் சிறப்பான வரிகளால் பின் அட்டையில் இருந்த நூரிடம் நூறு பேசினேன்.

ஒரு கவிதை என்ன செய்ய வேண்டும்... அதற்கான பதில் நண்பன் நூரின்... "இலவசமாய் மரணங்கள்" என்ற தலைப்பிட்ட கவிதையில்.....

ஓட்டு கேட்க வரும்போது

இலவச வாக்குறுதிகளில் உறுதி செய்து விடுங்கள்

விவசாயிகளின் துர்மரணங்களையும் ...

என இருக்கிறது.

ஆணவக்கொலையின் பிணத்தின் நிணவாடையாக அமைகிறது இந்தக் கவிதை. அதற்காகத்தான் தலைப்பில்லாமல் படைத்திருக்கிறான் கவிஞன்.

நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது
பெற்றோருடன் செல்ல
விருப்பம் தெரிவித்தவளை
ஆச்சர்யமாகப் பார்த்தவனை
கண்களால் கொன்றுவிட்டு சென்றார்
தண்டவாளத்தில் செத்துக்கிடக்கிறான்.

அவனைக் கொலை செய்து விடுவோம் என்ற மிரட்டல் பயத்தில் சம்மதித்த காதலி.... அது பயனற்றுப் போனதான காட்சிப் பதிவில் மிளிர்கிறான் கவிஞன்.

முழுத்தொகுப்பை உங்கள் பார்வைக்கு வைத்துவிட்டால் நீங்கள் வாசிப்பதும்... நீங்கள் வாசிக்கும் தருணங்களில் அவரவர் மனநிலையில் ஏற்படும் வேறுவிதமான உன்னத ஆழ்நிலை உணர்வுகள் வேறுவிதமாய்த் தோன்றிவிடும் ஆபத்திருப்பதால் உங்களிடம் இத்தொகுப்பை விட்டுவிடுகிறேன்.

அப்படியும் விட்டுவிட மனமின்றி இன்னொரு அற்புதத்தைக் காண்பிக்கிறேன்.. அது அன்னை ஊட்டும் சோறாய் இன்னொரு கவிதை.

ஃபைஹாவும் நானும்
கொல்லையில் நடுவதற்காக
செடிகளும், மரக்கன்றுகளும்
வாங்கி வரக் கிளம்புகிறோம்.
அவள் அம்மாவிடம்
சொல்லிவிட்டு வருகிறாள்
மழை வாங்கப்போவதாக.

அற்புதமான தொகுப்பை இன்னும் பேசுவேன் வேறு பல தளங்களில். அதுவரை வாழ்த்துக்கள் கவிஞர் வலங்கைமான் நூர்தீனுக்கு...

அதே சமகலவையில் ஓவியா பதிப்பகத்து அன்பு அண்ணன் கவிஞர் வதிலைபிரபா அவர்களுக்கும், அழகான கவிதைக்கு அற்புத அணிந்துரை நல்கிய பாசத்திற்குரிய அண்ணன் கவிஞர் பழநிபாரதி அவர்களுக்கும் வாழ்த்துக்கள். ■

• நிருபர்குழு



# சாகித்ய விருது பெற்ற 'படைப்பு'க் கவிஞர்

**2018**ஆம் ஆண்டுக்கான கொடகே சாகித்ய விருது 2017இல் வெளிவந்த ஜே.பிரோஸ்கானின் 'நாக்கு'என்ற நவீனக் கவிதை நூலுக்காக வழங்கப்பட்டுள்ளது. இவ் விருதாக, 50,000 ரூபா பணப்பரிசுடன் பாராட்டுப்பத்திரமும் கேடயமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது.இந்த நூலைப் பேனா பதிப்பகம் பதிப்பு செய்திருந்தது.

கொடகே அமைப்பு தேசிய சாகித்ய விருதை இலங்கையில் மூன்று மொழி இலக்கியங்களை மேம்படுத்தவும், எழுத்தாளர்களை உற்சாகப் படுத்தவும், இலக்கியச் செயற்பாடுகளை ஒருங்கிணைக்கவும் 2005ஆம் ஆண்டு தொடங்கி வழங்கிவருகிறது. தலைநகர் கொழும்பைத் தலைமையிடமாகக் கொண்டு செயற்படும் இந்த நிறுவனம் தன்னாட்சி உரிமை பெற்றது.

விருது பெற்ற ஜே.பிரோஸ்கானின் தந்தை முகம்மது அனீபா ஜமால்தீன் ஒரு சாதாரண மீன்பிடியாளர். தமது வறுமை நிலையிலும் அவர் தனது பிள்ளையின் திறமைகளைத் தடுக்காமல், திறமையின் பாதையில் பயணிக்கக் கைகொடுத்தவர்.

எழுத்தாளர் ஜே.பிரோஸ்கான் உயர்தரம் வரை கல்வி கற்றவர். தற்போது வாகன சாரதியாகப் பணியாற்றி வருகின்றார். தனது இலக்கியப் பயணத்தைச் சிரமம் பல தாண்டிக் கடந்த இருபது வருடங்களாகக் கவிதை, சிறுகதை, நாவல், கட்டுரை, குறுந்திரைப்படம், இலக்கிய சஞ்சிகை, இலக்கிய அமைப்பு, செய்திப்பத்திரிக்கையெனப் பயணித்துக்கொண்டிருக்கிறார். இதுவரை 10 நூல்களை வெளியீடு செய்துள்ளார்.

பேனா பதிப்பகத்தைத் தொடங்கி அதன் பதிப்பாளராக நாற்பத்தைந்துக்கும் மேற்பட்ட நூல்களைப் பதிப்பு செய்துள்ளார். பேனா இலக்கியப் பேரவை என்ற ஒரு அமைப்பையும் தொடங்கி அதனூடாகப் பல்வேறுபட்ட இலக்கிய நிகழ்வுகளையும் போட்டிகளையும் பயிற்சிப்பட்டறைகளையும் ஒழுங்குபடுத்தி வருகின்றார்.

ஜே.பிரோஸ்கான் படைப்புக் குழுமத்தில் தீவிரமாக இயங்கிவருபவர். மாதாந்திரச் சிறந்த கவிஞருக்கான பரிசைப் பெற்றுள்ளார். பரிசு பெற்ற அக்கவிதை..

**நட்சத்திரத்தில் உறங்கிய பறவை**

பறந்துவிடுவதற்கான முன் ஆயத்தம்
சிறகைத் தூசி தட்டி நிமிர்ந்து
சோம்பல் முறித்து எழுகிறது பறவை
வானின் நீண்டவெளியில்
பூமியின் தூரத்தை மெஞ்சிய
அந்தப் பறவை
ஒரு சொல்லொன்றை ஆகாயத்திலிருந்து
உதிர்த்துவிடுகிறது
அது மேகங்களில் மறைந்து
தாமதமாகக் கீழிறங்குகிறது
பெரும்மலைகளில் மோதுண்டும்
பெரும்மரங்களில் மோதுண்டும்
நதிகளில் விழுந்து நனைந்தும்
பூமிக்கு இறங்குகிறது
அது உதிர்த்த சொல்லில் வடிந்த
குருதித் துளிகளின் தடயம்
கம்பளிப்பூச்சி வரைந்த கோடுகளைப் போல
ஓவியமானது
தாமதத்தின் வெறுப்பைப் பறவை
ஒரு சகாராவின் சூட்டைச் சுமக்கச் சொல்லி
அந்தச் சொல்லுக்குக் கட்டளையிடுகிறது
மறுத்து விடுகிற சொல்லை
ஆகாயத்துக்குப் புறப்படச் சொல்கிறது
சொல் கடந்த தூரத்தைப் பறவை ஒத்திருந்தது
இரவு சொல்லையும் பறவையையும்
பிடித்துக்கொள்கிறது
நட்சத்திரம் உறங்க அழைக்கிறது
பறவை சொல்லோடு தஞ்சம் புகுந்துகொள்கிறது
இப்போது பறவை தன் தூக்கத்தில்
அந்த சொல்லைப் பிரதி செய்கிறது
இயலாமையென. ■

• பொ.முத்துவேல்

# நல்லாசிரியர் சுகன்



சுகன் என்றால் இலக்கிய உலகில் எல்லோருக்கும் தெரிந்திருந்தாலும் பள்ளிக் கூடத்தில் சுந்தர்சார் என்றால்தான் எல்லோருக்கும் தெரியும். அவருடைய வகுப்பறையில் நான் நேரடி மாணவன் ஆகையினால் என்னுடைய ஆசிரியரைப் பற்றி நான்தான் சொல்லமுடியும். அவரை மாணவர்களாகிய நாங்கள் கொண்டாடி யதைப் பற்றியெல்லாம் நான்மட்டும்தான் சொல்லமுடியும். நான் அவரது மாணவன். மாணவனாக இருந்து என் ஆசிரியராகவும் அவர் காலத்திலேயே ஆசிரியராகப் பணியில்சேர்ந்து ஆசிரியராகவும் அவரைப் பார்த்தவன்.

என் வாழ்வின் ஒளி அவர்தான். எனக்குள் இப்போதும் இருந்துகொண்டு என்னை வழிநடத்துபவர் அவர்தான். ஒரு ஆசிரியர் மட்டும் நினைத்துவிட்டால் அவரது வகுப்பறை யில் பயிலும் மாணவனது வாழ்க்கையையே மாற்றமுடியும் என்பதைச் சத்தமின்றிச் செய்துகாட்டியவர். அவரைப் பற்றி எழுதத் தொடங்கினால் முண்டியடித்துக்கொண்டு வரும் நினைவுகளைப் புறந்தள்ளவே படாதபாடு படவேண்டியிருக்கிறது.

நான் ஐந்தாம் வகுப்பில் சேர்ந்த அன்று ஜெயா டீச்சர் முதல் பாடவேளைக்கு வந்தார். அடுத்ததாக, சுகன் சார் வந்தார். 'யாருடா அது தொப்பி?' அவர் என்னைத்தான் கேட்டார். நான் தொப்பி போட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தேன். பேரைக் கேட்டார். 'எந்தப் பள்ளிக்கூடத்தில் படிச்ச?' ராமகிருஷ்ண வித்யாலயா கணபதிநகர் என்று என் அம்மாச்சி வீட்டில் இருந்துகொண்டு நான்காவதுவரை நான் படித்த இடத்தைச் சொன்னேன். 'நானும் அங்கதாண்டா படிச்சேன்'. அவர் உரையாடலைத் தொடங்கிவிடுவது இப்படித்தான்.

மாணவர்களிடம் கிண்டலடித்துப் பேசுவது அவர் வழக்கம். எல்லோரையும் வம்பிழுத்துச் சிரிக்கச்சிரிக்கப் பேசுவார். எல்லோருக்கும் பட்டப்பெயர் வைத்துதான் கூப்பிடுவார். கொஞ்சிப் பேசிக்கொண்டிருக்கும் அவரிடம் பிள்ளைகள் சொக்கிவிடுவார்கள். கருத்துக்களைப் பகிர அவரது வகுப்பில் வாய்ப்புகள் இருக்கும், ஏதாவது கேட்கவேண்டுமானால் அவரிடம் கேட்கலாம். சரியானதாக இருந்தால் பாராட்டு கிடைக்கும். தவறானதாக இருந்தால் நகைச் சுவையாக மாறிவிடும். அவர் குரலை மாற்றி முகத்தை மாற்றிப் பேசும்போது சிரிசிரியென்று சிரித்துவிடுவோம். அவரது நகைச்சுவை கலந்த உரையாடல் மிக முக்கியமானது.

அவர் எளிமையாக முழுக்கத் தமிழிலேயே பேசுவார். ஆங்கிலம் கலக்காமல் பேசுவதைப் பார்த்து நாங்கள் அதற்கு என்ன இதற்கு என்ன என்று கேட்போம். சொல்லித் தருவார். 'ஏன்டா பேருந்து வரல' என்றும் 'வருகைப்பதிவேட்ட எடுத்துட்டு வா' என்றும் அவர் பேசுவது அழகாக இருக்கும். அந்த சொற்களையே நாங்களும் பேசத்தொடங்கினோம். அவர் முன்பு மாற்றிக்கொள்ளாமல் நாங்கள் பேசிய ஆங்கிலச்சொல் சார் என்பதுதான்.

வகுப்பறையில் நுழைந்ததும் அங்கே சாப்பிடாதவர்கள் யாரும் இருக்கிறார்களா? என்பதைக் கேட்டுவிட்டுப் பக்கத்திலிருந்த டீக்கடையில் டீயும் பன்னும் வாங்கிவரச் சொல்லி சாப்பிடவைப்பார். அவர் காலையில் செல்கிற வகுப்பில் இது வாடிக்கை. நான் பலமுறை டீயும் பன்னும் சாப்பிட்டிருக்கிறேன்.

அந்தப் பள்ளியில் படித்த மாணவிகள் அவர் மீது அதிக அன்பை வைத்திருந்தார்கள். என்னப்பா அப்டியாப்பா என்று அவர் பெண் பிள்ளைகளிடம் அன்பாகப் பேசுவார். மகேஸ்வரி என்ற மாணவி என்னை எங்கே பார்த்தாலும் ‘சார் நல்லாருக்காரா?’ என்று விசாரிப்பது வழக்கம். சார் அப்பள்ளியிலிருந்து மாறுதலடைந்தபிறகும் மகேஸ்வரி தொடர்ந்து சாருக்குப் பொங்கல் வாழ்த்து அனுப்பிவிடுவார்.

சிறு பிள்ளைகள் என்றெல்லாம் எண்ண மாட்டார். மதிப்பார். அவர் தனியாக உட்கார்ந்திருக்கும்போது எட்டிப்பார்த்தால் போதும்.. கூப்பிட்டு அருகில் கிடக்கும் நாற்காலியில் உட்காரவைத்துதான் பேசச் சொல்வார். பாடம் தொடர்பாக இல்லாத எதையும் அவரிடம் கேட்கலாம்.. பேசலாம். மற்ற ஆசிரியர்களுக்கு அடங்காத பயல்களை எல்லாம் அவரிடம்தான் அனுப்புவார்கள். அவரிடம் பேசிவிட்டு வந்தால் மாற்றம் இருக்கும்.

பாடம் நடத்தும்போதும் அவருடைய நகைச்சுவை வெளிப்படும். எதுவாக இருந்தாலும் சரி மாணவர்களுக்குப் புரியும் வகையில் விளக்கம் இருக்கும். நினைவில் நிறுத்தவேண்டியவை இருந்தால் பாடலாகப் பாடி நடனமும் ஆடச்சொல்வார். ஐந்தாம் வகுப்பில் கணக்கு எடுத்தார். ஆயிரம் மீட்டர் ஒரு கிலோ மீட்டர் என்ற வரியை அவர் பாடிக்கொண்டு இடுப்பை ஆட்டி ஆடிக்காட்ட நாங்கள் எல்லோரும் சிரித்துக்கொண்டே ஆடியது அப்படியே நினைவில் இருக்கிறது இன்னமும்.

அந்த வகுப்பறையில் இரண்டாண்டுகள் படிப்பை விட்டதால் நான்தான் மூத்தவன். என்னைப்போலவே இன்னொருத்தன் முருகானந்தம். அவர் சில நேரங்களில் ஆளுக்கொரு கதை சொல்லச் சொல்வார். அந்த மாதிரி வாய்ப்புகளில் நான் சொன்ன பாம்புக் கதையைக் கேட்டுவிட்டு உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தவர், ‘முத்து பாம்பக்கடிக்க விட்றாதடா’ என்று பாவமாய் மூஞ்சை வைத்துக்கொண்டு சொன்னதைப் பார்த்து நான் சொன்னேன், ‘அது கடிக்காது சார். நல்ல பாம்பு’ என்று. அடிக்கடி என்னை வம்பிழுக்க, ‘முத்து பாக்கெட்ல பாம்ப எடுத்துக்கிட்டு வருவேன்னு மிரட்டுறான்’ என்பார் பயந்தமாதிரி. எளிதில் கோபப்பட்டுவிடும் முருகானந்தத்தைப் பார்த்துச் சொல்வார். ‘டேய் அவன்ட்ட வச்சுக்காதீங்கடா.. எருமமாட்டுப்பால குடிச்சிப்பிட்டுப் பய அப்டி இருக்றான் அடிச்சா தாங்கமாட்டீங்க’.

ஒருமுறை இப்படித்தான் அவர் முன்பு வேலைபார்த்த நண்டம்பட்டி பள்ளியிலிருந்து அவரது மாணவர்கள் அவரைப் பார்ப்பதற்காக இராயமுண்டான்பட்டிக்கு மிதிவண்டியிலேயே வந்திருந்தார்கள்.

ஐந்தாம் வகுப்பில் ஒருமுறை ராமாயணம் கதை சொல்லிக்கொண்டிருந்தார். தசரதனுக்கு முனிவர் யாகம் நடத்தி அதிலிருந்து பாயசம் வந்தது என்று சொல்லிக்கொண்டிருந்தார். சிறுவர்மலர், சிறுவர்மணி போன்ற வார இதழ்களில் படித்ததை வைத்துக்கொண்டு நான் ‘சார்.. தப்பாச் சொல்றீங்க. பழம்தான் கொடுப்பார். அதைப் பிச்சித் தின்பாங்க’ என்றேன். அவர் கோபப்படவில்லை. ‘நிறைய ராமாயணம் இருக்குடா இது ஒன்னு’ என்றார். சிலநாள்கள் கழித்து அதை எடுத்து வந்தும் காண்பித்தார்.

அவரிடம் ஆறாம் வகுப்பில் சமூகஅறிவியல் பாடம் கேட்டதின் வினை இன்னமும் தொல்லியல் இடங்களைத் தேடித்தேடி ஓடிக் கொண்டிருக்கிறேன். மௌரியப்பேரரசு பாடம் நடத்தும்போது அழுக்குப்படிந்த கிழிந்த ஆடையோடு குள்ள உருவத்தோடு தனநந்தனின் விருந்துக்குச் சென்ற சாணக்கியனின் கதை இப்போதும் கேட்டுக்கொண்டேயிருக்கிறது.

பாடம் முடிந்ததும் வினாக்கள் கேட்பார். ஒருநாள் தேர்வு வைப்பதாகச் சொல்வார். அவர் சொல்லிவிட்டார் என்றால் மாற்றம் இருக்காது. அன்றைக்குத் தேர்வு இருக்கும். அவர் நடத்தும் தேர்வுகளின் சிறப்பு என்ன என்றால் முதல் மதிப்பெண் வாங்குபவர்களுக்குக் கட்டாயம் பரிசு இருக்கும். நல்ல நூல்கள் கிடைக்கும்.

மதியம் சாப்பிட்டுவிட்டுப் படுத்திருப்பார். நாங்கள் அருகில் உட்கார்ந்திருப்போம் பேசிக்கொண்டே. சாப்பிட்டு முடித்தவுடன் பக்கத்திலிருந்த கடையில் ஒரு ரூபாய்க்குக் கடலையும் ரெண்டு வெத்தலை ஒரு நிஜாம் பாக்கும் வாங்கிக்கொண்டு வந்து தருவேன். அவர் கொண்டுவந்திருக்கும் இதழ்களையும் நூல் களையும் அப்போது கொடுத்துப் படிக்கச் சொல்வார். அவர் மதிய இடைவேளைகளில் தீவிரமாகப் படித்துக்கொண்டிருந்தாலோ

எழுதிக்கொண்டிருந்தாலோ இருவாசல் கொண்டிருந்த அந்தக் கட்டிடத்தில் நானும் வேறு யாராவது ஒருவரும் யாரையும் உள்ளே விடாமல் காவல் நிற்போம். சாரிடம் கையடக்கமாக ஒரு வானொலிப்பெட்டி இருந்தது. அதில் கேசட் போட்டும் பாட்டு கேட்டுக்கொண்டிருப்பார். கிரிக்கெட் செய்திகளைக் கேட்பார். சத்தமே வெளியில் வராமல் அவர்பாட்டுக்குத் தலை யாட்டி ரசித்துக்கொண்டிருக்கும்போது அவர் காதில் மாட்டியிருக்கிற ஒயரை நாங்கள் வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருப்போம். அவர் வராத நாள்கள் எனக்குக் கடுப்பாய் இருக்கும்.

மதியத்தில் நானும் அவரோடு உட்கார்ந்து சாப்பிடுவேன். அப்போது அவர் கொண்டு வந்திருக்கும் குழம்பு தொட்டுக்க எண்ணெய் மிதக்கும் ரசம் என்று கொடுப்பார். அப்போதே எனக்கு முனிசிபல் காலனியின் அம்மா வீட்டுச் சாப்பாடு அறிமுகமாகிவிட்டது.

பாரதியார் பாரதிதாசன் பாடல்களை அவர்தான் அறிமுகப்படுத்தினார். மாணவர்கள் நூலகம் செல்ல ஊக்கப்படுத்தினார். இராயமுண்டான்பட்டி நடுநிலைப்பள்ளியில் பாரதிதாசன் நூலகத்தை அமைத்தார். மாணவர்களோடு கலந்துவிடுவார். நிறைய போட்டிகள் அவர் முயற்சியில் நடக்கும். ஓவியப்போட்டி நடனப்போட்டி என்றெல்லாம் இருக்கும். தென்னகப்பண்பாட்டு மையம் நடத்தும் போட்டி, கிரிக்கெட் போட்டி என்று களைகட்டும். எங்கள் பள்ளி மாணவர்களுக்கு அவர்தான் பயிற்சியாளர். மாலை 6 மணிவரை சொரக்குடிப்பட்டி குளத்திற்குள் விளையாட்டுப் பயிற்சி நடக்கும். எனக்குக் கிரிக்கெட் விளையாடத் தெரியாது. சிலபேர் நன்றாக விளையாடுவார்கள். எங்கள் பள்ளி மாணவர்களையே இரண்டு அணியாகப் பிரித்துத் தினமும் போட்டி நடக்கும். ஒன்றும் ஆடத்தெரியாத நான் அவரது அணியில் பேருக்கு இருப்பேன். பெரும்பாலும் என் ஆட்டநேரம் ஒரு ஓவரைத் தாண்டாது. முதல் பந்திலேயே ஸ்டெம்ப் பறந்துவிடும். இல்லாவிட்டால் சரியாகப் போடப்பட்ட பந்தை வைடு என்று சொல்லிக்கொண்டு அடிக்காமல் சுற்றிக்கொண்டிருப்பேன். தப்பித்தவறி எதை யாவது அடித்துவிட்டால் எவனாவது பிடித்துவிடுவான். சார் பேட்டிங் செய்யும்போது அவருடைய பணம் பேனா எல்லாவற்றையும் நான்தான் வைத்திருப்பேன். ஒருமுறை விளையாட்டில் சண்டை வந்துவிட்டது. சொரக்குடிப்பட்டியைச் சேர்ந்த எட்டாம்வகுப்பு மாணவன் கலியமூர்த்தி பேட் செய்தான். அவுட் ஆனதை ஒத்துக்கொள்ளாமல் பேட்டைத் தூக்கி எறிந்துவிட்டான். சார் கோபமாகிவிட்டார். ‘கிரவுண்ட் பக்கம் இனி வரமாட்டேன்’ என்று சொல்லிவிட்டுக் கிளம்பிவிட்டார். பயலுகள் எல்லாரும் கலியனைக் காய்ச்சு காய்ச்சு என்று காய்ச்சிவிட்டார்கள். கலியமூர்த்திக்கும் வருத்த மாய்ப்போய்விட்டது. மறுநாள் காலையிலேயே எட்டாம் வகுப்பு ஏழாம் வகுப்பு மாணவர்கள் என வகுப்பறைக்கு வந்து குழுமிவிட்டார்கள். சாரை சமாதானம் செய்யவேண்டும் என்று முடிவெடுத்துக்கொண்டோம். கலியமூர்த்தி அவர் வந்ததும் ஓடிப்போய் வணக்கம் சொல்லிவிட்டு மன்னிப்புக்கேட்டான். அவர் அவனிடம் பேசினார். ஆனால் விளையாடமட்டும் வரமாட்டேன் என்று சொல்லிவிட்டார். நான் அடிக்கடி அவரைப் பார்த்துச் சிரித்துவிட்டு வந்துகொண்டிருந்தேன். எதுவும் பேசாமல் அவரருகில் நின்றுகொண்டேயிருந்தேன். விரட்டுவார். கொஞ்சநேரம் கழித்து மீண்டும் படையெடுப்பேன். நாங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து அவரிடம் சென்றோம். ‘மன்னித்து விடுங்கள் சார்.. ஒழுக்கத்தோடு எல்லோரும் இருப்போம், கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொள்வோம்’ என்று நான் சொன்னேன். எல்லோரும் கெஞ்ச ஆரம்பித்துவிட்டார்கள். அன்றைக்குச் சாயுங்காலம் ஆட்டம் களைகட்டியது.

சில நாள் பயிற்சிக்குப் பின் பள்ளியில் நன்றாக விளையாடுபவர்களைப் பொறுக்கி எடுத்து ஒரு அணியாக மாற்றி பள்ளியின் கிரிக்கெட் அணி அமைக்கப்பட்டது. இன்னொரு நடுநிலைப் பள்ளியிலிருந்து மாணவர்கள் வாகனத்தில் வந்து விளையாடினார்கள். நாள் முழுக்க போட்டி நடந்தது. எங்கள் பள்ளிதான் வெற்றி பெற்றது. வந்தவர்கள் அனைவருக்கும் சுவையான சாப்பாடு பரிமாறினார்கள்.

அடிக்கடி திருக்குறளைச் சொல்லிக்கொண்டே இருப்பார். என்னை அனைத்துத் திருக்குறளையும் மனனம் செய்வதற்கு உற்சாகப்படுத்தினார். ஐந்து அதிகாரம் கடந்தபிறகு ஒருகுறளை நான் கடகடவென்று சொல்ல ‘நிறுத்திச் சொல்லு’ என்று சொல்லிப்பார்த்தார். எனக்கு வேகமாகத்தான் வந்தது. ‘உனக்கு வரல விடுடா’ என்று அனுப்பிவிட்டார். பிறகுதான் நான் திருக்குறளை மனனம் செய்யாமல் படித்த குறளுக்கு விளக்கம் கேட்கத் தொடங்கினேன்.

**– தொடரும்**

சிறுகதை

• பிறைமதி
ஓவியங்கள் : அழ.ரஜினிகாந்தன்

# குள்ளப்பொண்ணு



சர்ரெனப் பெய்துகொண்டிருந்தது மழை. இத்தனை நாள் இல்லாத மழையிது. இன்று மட்டும் இப்படிக் கொட்டித் தீர்க்கிறது. ஓட்டை விழுந்த கீத்துக் கொட்டாயில் மாடும் கன்னுக்குட்டியும் நனைந்தபடியே இரவிலிருந்து காலைவரை நின்றுகொண்டிருப்பதைப் பார்த்த பரக்காவட்டிக்குப் பழைய சோறு நெஞ்சு தாண்டி வயித்துக்குப் போகவே இல்ல.

மழை வராது என்றுதான் நினைத்திருந்தான். இவ்வளவு நாள் மழை பெய்தபோதெல்லாம் வீட்டு ஆலடியில்தான் கட்டியிருக்கும். நேற்று இரவு பெய்த மழையிலும் காற்றிலும் பக்கத்தில் இருந்த முருங்கைமரம் முறிந்து விழுந்ததில் நொறுங்கிய வீட்டின் முன் கூரை வழியே இப்போது மழை கொட்டுகிறது.

வேறு வழியில்லாமல்தான் பழைய கொட்டாயில் மாட்டைக் கட்டினான்.

பழைய கொட்டாய் என்றால் வேறொன்றும் இல்லை.. குண்டும் குழியுமாக இருக்கும். கீத்து மாற்றாமல் இருந்ததால் வெயில் பட்டு ஓட்டையாகி, மழை பெய்தால் நன்றாகவே ஒழுகும் கொட்டகையாக இருந்தது. எனவே மழை வரும் நேரங்களில் வீட்டின் ஆலடியில் கட்டிப்போட்டு வந்தார்கள்.

மாட்டிற்கும் பரக்காவட்டிக்குமான உறவு என்பது அப்பனுக்கும் மகளுக்குமான உறவு. மொத்தம் இரண்டு மாடு ஒரு கன்று.. மூன்றுமே உறவுமுறைதான். பெரிய மாடுதான் தாய். அடுத்த மாடு மகள். அதற்கும் அடுத்தது முதல் மாட்டின் இரண்டாவது குழந்தை.

ஒரு பெண் இன்னொரு பெண்ணைப் பெற்றால் கவலைக்கொள்ளும் இதே சமூகம் ஒரு ஆடு அல்லது மாடு, ஒரு பெண் ஆட்டுக்குட்டியையோ அல்லது பெண் கன்றையோ ஈன்றால் சந்தோசப்படும்.. இதுதான் கிராமம். இதுதான் அவர்களின் பெருமை.

முதல் மாட்டின் பெயர் லட்சுமி. அடுத்த மாட்டின் பெயர் சரசு. கடைசிக் கன்றின் பெயர்

ராணி. பரக்காவட்டி, குழந்தைகளைப் பெயர் சொல்லி அழைப்பதை விட மாடுகளின் பெயர் சொல்லி அழைப்பதைத்தான் விரும்புவான்.

காலை எழுந்தவுடன் மாடுகளை அவிழ்த்துத் தண்ணீர் காட்டி மேய்ச்சலுக்கு அழைத்துச் செல்வது மட்டும் அவனின் வேலை அல்ல. பக்கத்து ஊரு பாயோட வயலைப் பார்த்துக்கணும். தண்ணி பாய்க்கணும். எரு போடணும். களை எடுக்க ஆள் பிடிக்கணும். கடைசியா அருப்புக்கு ஆள் அமர்த்துவது வரை எல்லா வேலைகளையும் பரக்காவட்டிதான் செய்வான். இதற்கு மாதாமாதம் ஒரு சம்பளம் அவனுக்குக் கொடுக்கப்பட்டது. அது அரிசியாகவோ நெல்லாகவோ அல்லது வேறு பொருளாகவோ அல்லது பணமாகக் கூட இருக்கும்.

"அப்பா.. சாப்பிடாம என்னத்த பண்ற"

தனது மகள் இப்படிக் கேட்டதும்தான், தான் சாப்பிட்டுக்கொண்டிருக்கிறோம் என்பதே அவனுக்கு நினைவுக்கு வந்தது. கையில் ஒரு உருண்டை பிடித்து, அதைப் பிழிந்தான். அந்த உருண்டையில் ஒரு ஓட்டை போட்டுக் கருவாட்டுக் குழம்பை ஊற்றி வாயில் வைத்தான். அது இரவு ஆக்கப்பட்ட சாப்பாடு. பரக்காவட்டியின் வீட்டில் மட்டுமல்ல அங்குள்ள எல்லோருக்கும் அப்படித்தான் இருக்கும் உணவுமுறை. இரவு சாப்பாடுதான் இரவுக்கும் மற்றும் அடுத்தநாள் முழுவதும். அது மழை நாளாக இருந்தாலும் கூட அதே உணவுமுறைதான். இதில் எந்த மாற்றமும் இல்லை.

பரக்காவட்டியைப் பெரிய மாடு பார்த்தது. அதன் கண்களில் ஏக்கம் இருந்தது. அது குழந்தையின் பால்யத்தை அவனுக்கு நினைவுபடுத்தியது. ஒரு குழந்தையைத் தாய் தூக்கிக்கொண்டு மறு குழந்தையை நடக்கவைத்து அழைத்துச்செல்லும்போது, நடந்துவரும் குழந்தை தாயை ஒருவித ஏக்கத்துடன் பார்க்குமே அந்தப் பார்வை அது. அதன் கண்களில் ஈக்கள் மொய்த்துக்கொண்டிருந்தன. கால்களில் கொசுக்கள் சுற்றிச்சுற்றிக் கடித்துக் கொண்டிருந்தன. கால்களை அந்தச் சகதியில் மாற்றிமாற்றி வைத்துக்கொண்டிருந்தது. மற்ற இரண்டு மாடுகளும் அதே சகதியில் வால்களை அங்கும் இங்கும் ஆட்டிக்கொண்டு தலையைத் தூக்கிக்கொண்டு படுத்துக் கிடந்தன. பெரிய மாடு படுப்பதற்கு இடமில்லை.

ஆலடியில் மட்டும் கூரையில் மரம் விழாமல் இருந்திருந்தால், மூன்று மாடுகளும் அங்குதான் படுத்துக் கிடக்கும். உடைந்த கூரைக்கு அருகில் உள் பக்கத்திலிருந்து பரக்காவட்டி பெரிய மாட்டை வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்தான். அதன் கண்களில் நீர் சுரந்துகொண்டிருந்தது.

மனைவி இறந்தபோது பெரியமாட்டின் தாயை விற்றுத்தான் மனைவியின் சடலத்தை அடக்கம் செய்தான். அதற்கு முன் அவன் மனைவிதான் மாடு மேய்ப்பாள். காலை எழுந்து வேலைகளை முடித்து மகனையும் மகளையும் பள்ளிக்கு அனுப்பிவிட்டு, பரக்காவட்டிக்கு நீராகாரம் கொடுத்து, ஒரு வாளியில் மதியத்திற்குத் தேவையான பழைய சாதமும் பச்சை மிளகாயும் போட்டு, வாளியின் மூடிக்கு மேலுள்ள ஓட்டையில் உப்பை ஒரு பேப்பரில் சுருட்டி வைத்து அனுப்பி வைப்பாள். அதற்குப் பிறகு இவளும் கொஞ்சம் நீராகாரம் குடித்துவிட்டு மாட்டுக்குத் தண்ணீர் காண்பித்துப் பக்கத்தில் உள்ள ஆசுபத்திரிக்குப் பின்னாடி மாட்டை விட்டு அது வயலில் இறங்காமல் பார்த்துக்கொள்வாள். அறுந்துபோன ஊக்கு போட்ட செருப்பு ஒன்று காலில் போட்டிருப்பாள். அதுதான் அவளை முள் குத்தாமல் பார்த்துக்கொள்ளும். மாட்டை மேய்த்துக்கொண்டே ஆஸ்பத்திரி பின்னாடி உள்ள கருவைக் காட்டில் காய்ந்த விறகுகளைப் பொறுக்குவாள். மதியம் ஆனதும் ஒரு சத்தம்,

"ஏ......... குள்ளப்பொண்ணு"

என்றால் போதும், எங்கிருந்தாலும்

"ம்......மா"

என்று கிட்டே வந்துவிடும். வேறு யார் பெயர் சொல்லிக் கூப்பிட்டாலும் கிட்ட வராது. அதே போலக் காலை ஐந்து மணிக்குப் பால்காரன் வரும்போது கூட இவள் பால் கறந்தால் மட்டும்தான் பால் கொடுக்கும். வேறு யார் கறந்தாலும் பால் கொடுக்காது. எட்டி உதைத்துத் தள்ளும். அப்படியும் மீறிக் கறந்தால் பாலை உள்ளே இழுத்துக்கொள்ளும்.

குள்ளப்பொண்ணுக்குக் காளைக்கன்று பிறந்திருந்தது. மகள் வயதுக்கு வந்துவிட்டாள்

என்பதால் அதைச் சந்தையில் விற்றுவிட்டார்கள். காளைக்கன்று என்றாலும் பாசம் வைக்காமல் இல்லை. அதை விற்றபிறகு இரண்டு நாள் அன்ன ஆகாரம் இல்லாமல் இருந்தாள். எப்படியோ ஒருவழியாகப் பரக்காவட்டியும் குழந்தைகளும் தேற்றிச் சாப்பிட வைத்துவிட்டனர். அதற்குப் பிறகு சில நாட்கள் பால் கொடுத்தாள் குள்ளப்பொண்ணு. பிறகு பால் நின்றுவிட்டது.

* * *

குள்ளப்பொண்ணு சினைன்னு டாக்டர் சொன்னபோது, வீடே திருவிழாவா இருந்துச்சு. ஒரு மாசத்துக்கு முன்னாடி காளைக்குக் கட்டினான் பரக்காவட்டி. அந்த நேரம் வெயில் காலம். பொதுவாவே வெயில் காலங்களில் என்னதான் காளைக்குக் கட்டினாலும் ஊத்திடும். ஆனா அது ஊத்தாம இருக்க எப்போதும் மாட்டைக் குளிப்பாட்டி, பின் பக்கத்துல நேரம் கிடைக்கும்போதெல்லாம் தண்ணி ஊத்தணும். அந்தக் குளிர்ச்சி ஊத்தாமப் பாத்துக்கும். மாடு சினைன்னு தெரிஞ்சதும் ஊர்ல உள்ள பேச்சாயி அம்மனுக்கு விளக்கு போட்டாள். திருநீறை அள்ளி நெத்தியில் அப்பிக்கொண்டு வேண்டினாள்.

"ஆத்தா, பேச்சாயி .... உம் புண்ணியத்துல குள்ளபொண்ணு மாசமா இருக்கா. நீதாந்த்தா புள்ளையப் பாத்துக்கணும். காத்து, கருப்பு அண்டாம, பூச்சிப் பட்டு கடிக்காம கூடவே இருந்து உம்புள்ளையாட்டம் பார்த்துக்க ஆத்தா"

கண்ணை மூடி மெதுவாக வாயசைத்து வாங்கிக்கொண்டாள்.

அடுத்தநாள் கறி வாங்கி வந்தான் பரக்காவட்டி. வீடு முழுக்கக் கறிக் குழம்பு வாசம். எப்போதாவதுதான் கவுச்சி சமைப்பார்கள். அன்று தனது மாடு சினையாக இருப்பதன் கொண்டாட்ட நாள்.

இன்னும் கண்ணும்கருத்துமாக மாட்டைப் பார்த்துக்கொண்டாள். காலையில் எழுந்தவுடன் குள்ளப்பொண்ணு முகத்தில்தான் முழிப்பாள். சாணி எடுத்துக் கரைத்து வாசல் தெளித்து வேலையைச் செய்யும்போதெல்லாம் ஒரு கண்ணால் குள்ளப்பொண்ணையே பார்த்துக் கொண்டிருப்பாள்.

* * *

குள்ளப்பொண்ணு இப்போது ஒன்பது மாதச் சினை. இன்னும் கவனமாகப் பார்த்துக் கொண்டாள். சொல்லப்போனால் கணவன் மற்றும் குழந்தைகளைக் கூட அப்படிப் பார்த்துக்கொள்ளவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

அன்றும் எப்போதும் போல வீட்டு வேலையை முடித்து, குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பி, கணவனை வேலைக்கு அனுப்பிவைத்து, மாட்டுக்கும் எப்போதும் போலக் கழனித் தண்ணி காமித்து ஆசுபத்திரிப் பக்கம் ஓட்டிச் சென்றாள். மதிய நேரமாயிற்று. வெயில் மண்டையை உடைத்து, தலையில் போட்டிருந்த முந்தானையைத் தாண்டி ஊடுருவிச் சென்றுகொண்டிருந்தது. பள்ளிக்கூடம் சென்ற குழந்தைகள் வீட்டுக்கு வர இன்னும் மூன்று மணி நேரம் இருந்தது. பள்ளிக்கூடம் போவதற்கு முன்னதாகவே,

'நொய் உப்புமா திங்கணும் போல இருக்கும்மா' என்று சொல்லிவிட்டுச் சென்றிருந்தாள் மகள். காலையிலேயே நொய்யை ஊற வைத்துவிட்டு வந்திருந்தாள். அருகில் பொறுக்கிய கருவேலச் சுள்ளிகள் இருந்தன. இப்போ போனாதான் கொஞ்ச நேரம் படுத்து அசதியைப் போக்கிவிட்டு உப்புமா சமைத்து வைக்கமுடியும் என்று நினைத்துக்கொண்டாள். அதற்குத் தகுந்தாற்போல் ஒரு பக்கம் வெயில். உடம்பெல்லாம் வேர்த்துக்கொட்டியது. பக்கத்தில் மாடு மேய்த்துக் கொண்டிருந்த சின்னத்துரை சொன்னான்,

"ஆச்சி, வெயிலு இந்தப் பொள பொளக்குது. சீக்கிரம் வீட்டுக்குப் போ. நான் வேணும்னா மாட்ட ஓட்டிட்டு வரேன்" என்றான்.

"வேணாண்ணா, நான் தும்ப புடிச்சாதான் கூட வரும். நீ ஓட்டினாக்கூட மதிக்காம எங்கயாவது போய்டும். நேரமும் ஆயிக்கிட்டே போகுது. நானே ஓட்டிக்கிட்டுப் போறேண்ணா" சொல்லிக்கொண்டே அருகிலிருந்த விறகைக் கருவைப் பட்டையைக் கொண்டு கட்டிக்கொண்டிருந்தாள்.

சின்னத்துரை வெற்று உடம்புடன் சிவப்பு நிறத் துண்டைத் தலையில் போட்டுக்கொண்டு மூங்கிக் குத்துக்குப் பக்கத்தில் நிழலில் நின்றுகொண்டிருந்தான்.

"ம்ம்ம்... நானுந்தான் மாட்டை ஓட்டணும். உன் மாடு போல இது இல்லையே. கொஞ்சம் ஏமாந்தாப் போதும் வய பக்கமாப் பச்சையத் தின்ன ஓடிடும். எந்நேரமும் கிட்டயே நின்னுல்ல மேக்கணும். பச்சையில வாய் வச்சிட்டுன்னாத் தலையாரி ஓட்டிட்டுப் போயிடுவான். எவன் அவனுக்கு அஞ்சி ரூவா கொடுத்துத் திருப்பி ஓட்டி வரது. வேலை இல்லாத நேரத்துல எவன்கிட்டாச்சி பணம் இருக்கு"

தனது புலம்பலை மூங்கில் காட்டுப் பக்கம் திரும்பிப் புலம்பிக்கொண்டிருந்தான் சின்னத்துரை. அதற்குள் விறகுகளை முடிந்துவிட்டாள். தூக்கித் தலையில் வைத்துக்கொண்டு கூப்பிட்டாள்.

"ஏ....... குள்ளப்பொண்ணு"

காடு அமைதியாய் இருந்தது. வெட்டுக்கிளி சத்தமும் கருவேலப் பூச்சி சத்தமும் கொஞ்ச தூரத்தில் வயலில் பாய்ந்துகொண்டிருக்கும் தண்ணீரின் சத்தமும் மட்டும்தான் கேட்டது.

"ஏ...... குள்ளப்பொண்ணு"

இன்னும் சத்தமாகக் கத்தினாள். அதே காடு. அதே அமைதி. அதே தண்ணீர் சத்தம்.

"என்னாச்சி. எங்க போயிட்டு மாடு"

என்றான் சின்னத்துரை. அவன் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்ல அவளுக்குத் தோன்றவில்லை.

எங்கிருந்தோ "ம்மா..." என்ற முனகல் சத்தம் இவளுக்கு மெல்லியதாய்க் காதுக்குள் புகுந்து இதயத்தைப் பிளந்து உள்ளே சென்று ஈரலைச் சிதறச் செய்தது. திடீரென ஏதோ நினைவு வந்தவளாய் ஓடினாள். கை கால்களில் முள் கீறியது. முந்தானையை இறுக்கிச் சொருகிக்கொண்டே ஓடிக்கொண்டிருந்தாள்.

"குள்ளப்பொண்ணு" மூச்சு வாங்கக் கத்திக்கொண்டே ஓடினாள். அவள் நினைத்தது போலவே நடந்திருந்தது. சரியாக மூடப்படாமல் இருந்த கிணற்றுக்குள் விழுந்துகிடந்தாள் அந்த எட்டு மாதக் கர்ப்பிணி குள்ளப்பொண்ணு. செய்வதறியாது திகைத்து நின்றாள். நெஞ்செல்லாம் படபடவென அடித்துக்கொண்டது.

"யாராவது வாங்க. யாராவது வாங்க கிணத்துல என் மாடு மாட்டிக்கிச்சு " என்று உடம்பிலுள்ள




ஆவியெல்லாம் திரட்டிக் கத்திக்கொண்டே புடவையை வாரிச் சுருட்டிக்கொண்டு உள்ளே இறங்கினாள்.

இவளைப் பார்த்ததும் "ம்ம்ம்மாஆ...." என்று கத்தியது. மூச்சு முட்டியது. வயிறு ஒருமாதிரி வேகமாக உப்பிஉப்பிச் சுருங்கியது. பயந்து போனாள். ஒருவளாக எதுவும் செய்யமுடியாது என்று தெரிந்தும் மாட்டின் காலைத் தூக்கினாள். சேறும் சகதியுமாக அந்தக் கிணறு அவளைச் சற்று உள்ளிழுத்தது. அதற்குள் சின்னத்துரை வந்து சேர்ந்தான். அதற்குள் மாடு இவளை வாயிலும் வயிற்றிலும் என நிறைய உதை உதைத்து மேலே வந்திருந்தது. சின்னத்துரையும் கத்தினான். அந்த மதிய வேளையில் அவ்வளவாக யாரும் நடந்து செல்லாத சாலை என்பதால் யாருமே வரவில்லை.

மாட்டின் தும்பையும் மூக்கணாங்கயிறையும் பிடித்து இழுத்தான். மாடு மேலே வந்தது. இவள் கிணற்றுக்குள் கிடக்கும் சேற்றில் மயக்கமுற்றுக் கிடந்தாள். மெதுவாகத் தூக்கிப் பக்கத்தில் இருந்த மூங்கில் குத்தின் நிழலில் கிடத்தினான். கொஞ்ச தூரம் நடந்து சென்றான். இப்போதும் கத்தினான். மருத்துவமனையில் நின்று கொண்டிருந்த சிலர் ஓடி வந்தனர். அழைத்துக்கொண்டு ஓடி வந்தான்.

* * *

மாடு உதைத்ததிலும் உடம்பெல்லாம் அடிபட்டதிலும் சேறு மூக்கிலும் வாயிலும் புகுந்ததிலும் மூன்று நாட்கள் மருத்துவமனையில் இருந்தாள் பரக்காவட்டியின் மனைவி. அந்த மூன்று நாளும் மயக்கத்திலேயே இருந்தாள். மூன்றாம் நாள் இரவு இறந்துபோனாள்.



பரக்காவட்டி முன் கூரை ஆலடியில் உடைந்து சிதறிய மண் பானையைப் போல் அலங்கோலமாகக் கிடந்தான். அவனைச் சுற்றி ஊர் மக்கள் நின்றுகொண்டிருந்தனர்.

அவளை அடக்கம் செய்யக் கையில் பணம் இல்லை. மகனும் மகளும் அம்மாவின் உடலுக்கு முன்னால் அழுதுகொண்டிருந்தனர். சொந்த பந்தங்களுக்கு ஆள் அனுப்பி இருந்தார்கள். ஒவ்வொருவராக வந்துகொண்டிருந்தனர். நெருங்கிய சொந்தங்கள் டிராக்டர் பிடித்துக் கூட்டத்துடன் வந்து சேர்ந்தனர். ஒரே அழுகுரலாக இருந்தது. பரக்காவட்டியின் மாமியார் ரோட்டிலேயே உழுந்து புரண்டு கொண்டிருந்தாள். மாமனார் பேரனையும் பேத்தியையும் கட்டிப்பிடித்துக் கதறிக் கொண்டிருந்தார்.

மாமனாரிடம் வாய் திறந்து பணம் கேட்க மனதில்லை. ஊர் மக்கள் எல்லாரும் சொன்னார்கள். மாட்டை விற்றுவிடு என்று. 'உன் மாடு இவளைச் சாகடிக்கவில்லை. மாட்டைக் காப்பாத்தப் போயித்தான் உயிரை விட்டாள். வாயில்லாத ஜீவன் என்ன பண்ணும். அதுக்கு என்ன தெரியப் போகுது. அந்த மாட்டைப் பார்க்கும்போதெல்லாம் உன் பொண்டாட்டி நியாபகம்தான் வரும். வேண்டாம் வித்துடு' என்றனர். வந்த விலைக்கு உடனே தரகரைக் கூப்பிட்டு விலை பேசி விற்றான்.

ஒரு சின்ன குட்டியானை லாரி வந்து நின்றது. குள்ளப்பொண்ணை ஏற்றினர்.

"ம்ம்மாஆ........" என்று ஆழமாகக் கத்தியது. இப்போது குள்ளப்பொண்ணு என்று அவள் கூப்பிடவே இல்லை. அந்தக் கத்தலில் அம்மாவின் தேடல் இருந்தது. இவ்வளவு நேரமாகியும் 'குள்ளப்பொண்ணு' என்று அவள் கூப்பிட வில்லையே என்ற ஏக்கம் இருந்தது. யாரோ எங்கேயோ என்னைக் கூட்டிச் செல்கிறார்கள். நீ எங்கே சென்று விட்டாய் என்ற கேள்வி இருந்தது. வீட்டு வாசலையே வெறிக்கப் பார்த்தபடி வண்டியில் ஏறியது. இப்போதும் அவள் வந்து அருகில் தனது கழுத்தைத் தடவி விடுவாள் என்று நம்பியது. அவள் அமைதி நிலையில் இருப்பது குள்ளப்பொண்ணிற்குத் தெரிந்திருக்கவில்லை.

மாட்டை ஏற்றிக் கதவடைத்து வண்டி நகர்ந்தது. மகனும் மகளும் அழுது கொண்டிருந்தனர். குள்ளப்பொண்ணு சாலை வளைவில் மறைந்துபோனாள். விழியோரம் இன்னும் நிறைய நீர் திவலைகள் நிறைந்திருந்தது பரக்காவட்டிக்கு.

* * *

மனைவி இறந்தபிறகு மகனையும் மகளையும் பார்த்துக்கொண்டு, மகள் சமைத்துப் போடும் சாப்பாட்டை உண்டு உறங்கிப் பணம் சேர்த்து ஒரு மாடு வாங்கினான். அதன் மேல் மனைவி வைத்த பாசத்தைப் போலவே இவனும் பாசம் வைத்தான். அது ஒரு கன்று ஈன்றது. மீண்டும் இரண்டு வருடம் கழித்து இன்னொரு கன்றை ஈன்றது. மூன்றுக்கும் மனைவி வைத்தது போலவே பெயர் வைத்தான். அந்த மாடுகள்தான் இப்போது நனைந்துகொண்டிருக்கின்றன.

மழை விட்டது. முதல் வேலையாக பாய் வீட்டிற்குச் சென்றான். பணம் வாங்கினான். வீட்டையும் மாட்டுக் கொட்டகையையும் சரி செய்தான். இப்போது வீடும் மாட்டுக் கொட்டகையும் புதியதாய் இருந்தன. மகள் சுவற்றில் கரிக்கட்டையால் எதையோ கிறுக்கிக் கொண்டிருந்தாள்.

'சின்னப்பொண்ணு - குள்ளப்பொண்ணு இல்லம்' என்று தனது அம்மாவின் பெயரையும் அம்மா வளர்த்த மாட்டின் பெயரையும் இணைத்து எழுதியிருந்தாள். கண்ணீர் மல்கக் கட்டி அணைத்துக்கொண்டான் மகளை.

• கவி: கயல்
சித்திரம் : கொ.வடிவேல்



என்னிடமொரு தழல் இருந்தது
பக்குவமாய்ப் பேசி வாடைக்குப் புகைக்கச்
சுருட்டுக்காகக் கொஞ்சம் பெற்றாய்.
வேட்டையாடிய காட்டுப் பன்றியை வாட்டக்
குவித்த மரக்கிளைகளின் தலை வைக்கச்
சிறிது கேட்டாய்.
பிறை வெளிச்சம் போதாதென
உண்ணும்வரை மட்டுமாகவுன்
தீப்பந்தத்திற்காயொரு கங்கு வேண்டினாய்.
செவிப்பூச்சி கும்பிடுபூச்சி வண்டுகளிடம்
தப்பியுறங்க நெருப்புக்காய்ப் பொறி
யாசித்தாய்.
யாமத்தில் உட்புகுந்து ஓநாயின்
குரூரத்துடன் புசித்துச் சாட்சிகளற்றென்
வீட்டைக் கொளுத்திப் போனாய்.
அன்பின் சொற் கலயத்துடன் நீ அடுத்த
வனம் புகுவதை விசும்பியுலகிற்கு
அறிவிக்கும் ஆரண்யம்
நான்.

• தனபால்பவானி

# மதிப்புறு முனைவர் அகன்!



படைப்புக் குழுவின் இலக்கியத் தேர்வுக் குழுவில் அயராது உழைக்கும் அகன் என்று எல்லோராலும் அழைக்கப்படும் திரு.அமிர்த கணேசன், தன் இளம் வயதிலேயே மேதகு பக்ரூதீன் அகமது அவர்களால் குடியரசுத் தலைவர் விருது பெற்றவர்.

பிரான்ஸ் நாட்டு 'எக்கோல் சுப்ரியோல் ராபர்ட் தி சர்பன் பல்கலைக்கழகம்' ஆண்டுதோறும் வழங்கும் மதிப்புறு முனைவர் பட்டத்தை இந்த ஆண்டு இவருக்கு வழங்கியிருக்கிறது. இந்தப் பட்டமானது தனிப்பட்ட மனிதர்களின் சாதனைகள், அர்ப்பணிப்பு, உழைப்பு, முன்னேறத் துடிப்பவர்களுக்கான உதவிபுரிதல், திறமைகளை வெளிக்கொணர்தல், மேலும் திறமைகளை வளர்த்துக்கொள்ள ஊக்குவித்தல் போன்ற பல்வேறு செயல்களுக்காக வழங்கப்படுவது. இவர் குறித்து இருபது பேர் கொண்ட குழுவொன்று ஆராய்ந்து இந்த உயரிய விருதை இவருக்குக் கொடுத்துச் சிறப்பித்துள்ளது.

குழந்தைகளின் படைப்பாற்றலை மேம்படுத்துதல், இலக்கியப் பங்களிப்பு, தமிழ் மீதான அதீத ஆர்வம், மொழி ஆளுமை போன்ற பல்வேறு காரணங்களுக்காக வழங்கப்பட்ட இந்த விருதை பிரான்ஸ் நாட்டுக்குச் சென்று பெற்றுக்கொள்ள முடியாத சூழலில் டில்லியில் வெகுவிமரிசையாக நடைபெற்ற விழாவில், மேனாள் முதல்வர், வெளிநாட்டுத் தூதுவர்கள், இந்திய அயலகப்பணி முன்னாள் செயலர், பல படைப்பாளிகள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் மத்தியில் அப்பல்கலைக்கழகத் தலைவரிடமிருந்து பெற்றிருக்கிறார்.

குழந்தைகளின் படைப்பாற்றலை உயர்த்துவதற்காக அளிக்கும் பால்ஸ்ரீ விருதை ஆறு சிறுவர் சிறுமியர் பெற இவர் காரணமாக இருந்திருக்கிறார். 6000 அடி ஓவியத்தை உலக அமைதி எனும் தலைப்பில் துணியில் உருவாக்கி ஊர்வலமாக எடுத்துச்சென்று உலக சாதனை படைத்திருக்கிறார். ஒரே மேடையில் 700 குழந்தைகளை இணைத்து மழைநீர் சேகரிப்பு எனும் தலைப்பில் பரதநாட்டியம், வாய்ப்பாட்டு, வீணை, வயலின், மிருதங்கம் போன்றவற்றை நிகழ்த்தியுள்ளார். 5000 பேர் இசைக்க ஒருமைப்பாடு மீதான சேர்ந்திசை நிகழ்த்தியுள்ளார். கிராமப்புற ஏழைக் குழந்தைகள் இலவச அரங்கேற்றம் முடித்திட உதவி செய்திருக்கிறார்.

தன் பயணத்தைக் குழந்தைகளோடு மட்டும் நிறுத்தாமல் மகாகவி ஈரோடு தமிழன்பன் அவர்களின் படைப்புகளை வெளிக்கொணர்வது, அவர் பெயரில் விருதுகள் கொடுப்பது, புதிய படைப்பாளிகளின் புத்தகங்கள் வெளியிட உதவிசெய்வது எனத் தமிழின் மீதும் தீராப்பிரியங்களோடு தொடர்ந்து உழைக்கிறார். வாழும் கவிஞரின், ஈரோடு தமிழன்பனின், 2000 கவிதைகளை அமெரிக்க மண்ணில் ஒரே நாளில் வாசிக்கவைத்தவர் இவர்.

முனைவர் பட்டத்தோடு இன்னும் இரண்டு விருதுகளையும் சேர்த்துப் பெற்றிருக்கிறார்.

1. அப்துல்கலாம் சல்மான் புரஸ்கார் விருது
2. நெல்சன் மண்டேலாவின் அமைதிக்கான விருது.

இந்தியாவில் முதல்முறையாக அப்துல்கலாமின் உரைநடைகளுக்கு மெட்டமைத்து, நடனம் அமைத்து அவருக்கு முன்னால் 'கராத்தியம்' என்ற பெயரில் ஒரு கலைநிகழ்ச்சி நடத்தியிருக்கிறார். அப்துல்கலாம் அவர்களோடு ராஷ்டிரபதி இல்லத்தில் குழந்தைகளோடு ஒருநாள் இருக்கும் வாய்ப்பும் கிடைத்திருக்கின்றது. "தன்னிலும் பெரிது தேசம்" என்னும் தலைப்பில் திரு அப்துல்கலாம் அவர்களின் படைப்புகளைப் பாடல்களாக்கி அவருக்கு அனுப்பியிருக்கிறார். இவை போன்ற பங்களிப்புகளுக்காக டில்லியில் "அப்துல்கலாம் சல்மான் புரஸ்கார்" விருது வழங்கிச் சிறப்பிக்கப்பட்டுள்ளார்.

பல மாநிலத்துக் குழந்தைகளை ஒன்றிணைத்து அவரவர் மாநிலங்களில் உள்ள நீர், மண், விதைகள் ஆகியவற்றைக் கொணரவைத்தார். அவற்றிலிருந்து ஒரு பகுதியை எடுத்து புதுச்சேரி அரசின் அரசாங்க மரமான நாகலிங்க மரத்திற்கு முன்னாள் குடியரசுத் தலைவர் பிரதிபாபாட்டில் மூலம் நீரூற்ற வைத்திருக்கிறார். இந்த நிகழ்வுக்கு "நீர் அர்ப்பணம்" அதாவது "ஜல் சமர்ப்பண்" என்று பெயர் வைத்திருக்கிறார். அந்த மணல் வகைகளைக் கொட்டி ஒரு "ஒருமைப்பாட்டுத் தூணையும்" உருவாக்கிவைத்திருக்கிறார். இந்தியாவின் பல மாநிலத்து மண்ணால் செய்த ஒருமைப்பாட்டுத் தூண் புதுச்சேரியில் மட்டும்தான் இருக்கிறது.


உலகம் முழுமைக்கும் கடவுச்சீட்டு இல்லாமல் மனிதர்கள் சென்று வர வேண்டும், வாழ வேண்டும், ஒன்றாக இணைந்திருக்க வேண்டும் என்கின்ற அமைதிக் கோட்பாட்டின் அடிப்படையில் இவருடைய சேவைகளுக்காக நெல்சன் மண்டேலாவின் அமைதி விருதும் அளித்துக் கௌரவப்படுத்தியிருக்கிறார்கள். ■

அகழ்வும் நிகழ்வும்

தொடர் - 6

• முகம்மது பாட்சா

# பாஷோவின் பழைய குளம்



### இக்யூ

ஹைக்கூவைப் பற்றி நாம் சொல்லும்போது பாஷோவிற்கு முன் வாழ்ந்த இக்யூ என்ற டங்கா கவிஞரைப் பற்றிச் சொல்லாமல் நகரமுடியாது. இவரொரு ஜென் துறவி என்றாலும் பௌத்த மடங்களால் அதிகம் வெறுக்கப்பட்டவரும் இவர்தான். அதே நேரம் பாஷோவின் மனதை அதிகம் பாதித்தவரென்றும் இவரைச் சொல்லுவார்கள்.

இவர் ஜப்பானில் கியோட்டோ என்ற நகரில் 1394ஆம் ஆண்டு பிறந்தார். சிறு வயதிலேயே கல்வியின் தேடலும் கவிதையின் தேடலும் இவரிடம் அதிகம் இருந்தன. பௌத்த மடாலயங்களையும் பௌத்தத் துறவிகளையும் அதிகமாகச் சாடியவர் இவராகத்தான் இருக்கமுடியும். துறவிகளுக்கு ஆசை பசி அதிகம் என்றும், அவர்கள் இரட்டை வேடம் போடுவதாகவும் நேரிடையாகக் குற்றம் சாட்டினார். ஒருசமயம் இக்யூ இடுப்பில் வாளோடு செல்லும்போது அதிகாரிகளால் தடுத்து நிறுத்தப்பட்டுத் 'துறவிகள் வாள் வைத்துக்கொள்ளக்கூடாது என்பது தெரியாதா?' என்று கேட்டதற்குத் தான் இடுப்பில் சொருகிவைத்திருந்த அட்டைக் கத்தியைக் காண்பித்துப் 'பிக்குகள் இப்படிதான் எதற்கும் புண்ணியமில்லாமல் இருக்கிறார்கள்' என்றார்.

பெண்களையும் குடியையும் அதிகம் புகழ்ந்த கவிஞரும் இவர்தான். அதனாலேயே இவரைப் பௌத்தத் துறவிகள் 'மோசமான கவிஞர்' (Dirty Zen Poet) என்றழைத்தார்கள். அடிக்கடி மடாலயங்களில் அழைக்கப்பட்டுக் கண்டிக்கப் பட்டார். ஆனாலும் அவர் அதைப் பற்றியெல்லாம் கவலைப்பட்டதில்லை.

கடைசிக் காலத்தில் குருட்டுப் பாடகி மோரி என்பவரைக் காதலித்து மணந்து கொண்டதாக அறியமுடிகிறது. இவர் மறைந்த ஆண்டு 1481.

**இவரது சில கவிதைகள் :**

**மனம் இல்லாமல் இருக்கிறாள்**
**விலைமகள்**
**வாடிக்கையாளன்**
**மனதோடு வாழ்கிறான்**

விலைமகள் மட்டும்தான் எந்த உடல் இச்சையும் இல்லாமல் தவ நிலையில் வாழ்வதாகச் சொல்கிறார்.



மழை பெய்ய நினைத்தால்
பெய்யட்டும் – காற்று
வீச நினைத்தால் வீசட்டும்!

இயற்கையை அதன் போக்கில் அனுமதிப்பது மட்டுமே தர்மத்தின் வழி என்று சொல்லும் கவிஞர், ஞானம் அடைவதற்கான வழிகள் பல என்றாலும் சேருமிடம் ஒன்றுதான் என்பதை,

மலை முகட்டிற்கு
நிறையப் பாதைகள் – ஆனால்
காண்பது ஒரே நிலவு!

– என்கிறார்.

கல்புத்தன்
பறவைகளின் எச்சங்களைப்
பெற்றுக்கொள்ளட்டும் – நான்
என் கைகளை அலைய விடுகிறேன்
தென்றலில் ஆடும்
மலர்களைப் போல்!

கல்புத்தன் வெறும் சிலை மட்டும்தான். அவன் மீது விழும் பறவைகளின் எச்சங்களுக்காக நான் ஏன் கவலைப்படவேண்டும், என்று சொல்லும் இக்யூ, வாழ்க்கை என்பதே,

உண்கிறோம் கழிக்கிறோம்
உறங்குகிறோம் விழிக்கிறோம்
மிச்சமிருப்பதெல்லாம்
சாவது மட்டுமே

என்று யதார்த்தத்தின் போக்கில் சொல்லி நம்மை அசத்துகிறார்.

**ஷிகி**

தத்தி நடக்கும் சிட்டுக்குருவி
தாழ்வாரத்தினோரம்
ஈரத் தடங்கள் – ஷிகி

பாஷோவை அதிகம் விமர்சித்தவராகப் பலரால் சொல்லப்பட்டாலும் பாஷோவின் கவிதைகளால் தன்னை முழுமையாகச் செதுக்கிக் கொண்டவர் மாஷோகா ஷிகி.

14.10.1867இல் மாட்சுயமா நகரில் பிறந்த ஷிகியின் தந்தை ஒரு குடிகாரர், இவரது ஐந்தாவது வயதில் இறந்துவிடுகிறார். சராசரி மாணவராக அறியப்பட்ட ஷிகியின் தாயார் யே என்பவர் கன்பூசியஸ் தத்துவவியல் அறிஞர் ஒருவரின் மகளாவார். ஷிகி, ஐந்தாம் வகுப்பு படிக்கும்போதே கவிதைகளை எழுதத் தொடங்கிவிட்டார். நவீன ஹைக்கூ கவிதைகளின் பிதாமகன் இவர்தான் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இருக்கமுடியாது.

டோக்கியோவில் இம்பீரியல் பல்கலைக் கழகத்தில் உயர்கல்வியில் இணைந்த ஷிகி, ஹைக்கூ எழுதுவதில் தன் கால நேரத்தைச் செலவிட்டுக் கல்வியில் தோல்வியைச் சந்தித்து வெளியேற்றப்பட்டார். இல்லையென்றாலும் நமக்கு இப்படியொரு மகா கலைஞன் கிடைத்திருக்க வாய்ப்பில்லை.

ஹைக்கூவைச் சட்டபூர்வமான இலக்கிய வடிவம் என்ற நிலைக்கு உயர்த்திய பெருமை ஷிகியையே சேரும். 5 - 7 - 5 என்ற அசைகளுக்கு ஆட்படாமல் ஹைக்கூ அமைவதையும் வரவேற்றார்.

நிலவொளியின் தாழே..
இரத்த இருமலுடன்
குயில் ஒன்று அழுகிறது!
எனக்கும், கேட்கிறது...
என் பழைய நகரம்,
என் பழைய வீடுகளின்
நினைவுகளை மீட்டி!

இது ஷிகி ஐந்தாம் வகுப்பு படிக்கும்போது எழுதிய கவிதையாகும். இஃது அவரது கடைசிக் காலத்தில் அவருக்கே பொருந்திப்போனது பெரும்வியப்பாகும்.

கவிதைகளையும், அரசியலையும் பற்றித் திறனாய்வாக, நிறைய கட்டுரைகள் எழுதியுள்ளார். ஹைக்கூ என்ற பெயரில் கவிதையின், சீர்திருத்த முன்னெடுப்பையும் மேற்கொண்டார்.

"கால இடைவெளியை உடைக்கக்கூடியவன் கவிஞன்தான்" என்று வாதிட்டவர் ஷிகி.

பள்ளிக் காலத்திலேயே, சொல் விளையாட்டுகள் விளையாடித் தன்னை மேம்படுத்திக்கொண்டார். இவர் ஒரு பேஸ்பால் விளையாட்டு வீரரும் கூட.

மதிப்பில்லை!
கண்ணாடியில் தெரியும்
முகத்திற்கு

– என்று யதார்த்தம் பேசினவர்.

புதிதாக ஹைக்கூ எழுதுபவர்களுக்கு, ஷிகி, சில அறிவுரைகளை வழங்கினார்.

- பழைய இலக்கண விதிமுறைகளைப் பற்றிக் கவலைப்படவேண்டாம். மாற்றங்களோடு பயணிக்கிறவன்தான் கவிஞன்.
- 5-7-5 அசைமுறைகள் கட்டாயமில்லை. ஆனால், அதற்காக 2 வரி, 4 வரி என்று சுருக்குவதோ அல்லது நீட்டுவதோ ஹைக்கூவின் தன்மையைக் கெடுத்துவிடும்.



• செயற்கை முறையில், எழுத முயற்சிக்காதீர்கள். கவிதையை, இயற்கையான முறையில் அணுகுங்கள்.

• தேவையற்ற வார்த்தைகளைச் சொருகாதீர்கள்.

• முடிந்த அளவு வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொற்களைத் தவிர்த்தல் நல்லது.

• ஹைக்கூ நூல்களை அதிகம் படியுங்கள். விமர்சனத்திற்கு உட்படுத்துங்கள், உங்களுக்குத் தெளிவு பிறக்கும்.

• பிறர் பாணியைத் தொடராதீர்கள். உங்களுக்கென்று, தனிப் பாணியை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

• புதிய கருத்துக்களை எழுதுங்கள். துப்பாக்கி வந்துவிட்ட காலத்தில், கத்தியைப் பற்றி எழுதாதீர்கள். ஒரே கருத்தை மாற்றி மாற்றி எழுதுவதை, ஷிகி வெறுத்தார்.

1894இல் மேற்கத்திய பாணி ஓவியரான நாகமுரா புஸெட்ஸூ (NAKAMURA FUSETSU) என்பவரின் மூலமாக வாழ்வின் பல பரிமாணங்களைக் கற்ற ஷிகி, காச நோயின் மிகுந்த பாதிப்பால் நலிவுற்றார்.

ஷிகி என்று அனைவராலும் அழைக்கப்பட்ட, MASAOKI SHIKI என்ற ஹைக்கூ பறவை, குறைந்த காலமே வாழ்ந்து, 19.09.1902இல் தனது, உடலின் உலக உறவை முடித்துக்கொண்டது. இன்னமும் ஷிகி ஹைக்கூ உலகத்தின், சிறந்த நிர்வாகியாகவே பயணிக்கிறார்.

**கோடைக்கால ஆறு**
**பாலமிருந்தும் என் குதிரை**
**நீரில் நடக்கிறது.**
**...**
**இரயில் தண்டவாளங்களின் மேல்**
**கூட்டமாய்க் காட்டு வாத்துகள்**
**நிலா வெளிச்சத்தில்.**

ஹைக்கூ என்ற கவிதையின் கலை ஜப்பானைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்தாலும் இன்று உலகம் முழுவதும் பலபல பரிசோதனைகளுக்கு ஆட்பட்டுத் தன்னைத் தகவமைத்துக்கொண்டே வந்துகொண்டிருக்கிறது. கவிதையின் சில தன்மைகளைச் சிதைக்காமல் காலத்திற்கேற்ப அதனை நகர்த்திச்செல்வதும் அந்தக் கலைக்கு நாம் செய்யும் கௌரவம்தான். பாஷோவின் காலத்திலிருந்த கடுமை ஷிகியின் காலத்திலிருந்தே தளர்ந்துவந்துள்ளதை நாம் காணமுடிகிறது. கவிஞர்கள் ஒன்று மட்டும் தெளிவில் கொள்ளவேண்டும். கவிதையென்பது யார் கற்றுக் கொடுத்தும் வருவதில்லை. எனவே தயவுசெய்து ஆசானைத் தேடாதீர்கள். ஹைக்கூ வந்த பிறகு டங்கா வடிவம் முற்றிலும் ஒழிந்துவிட்டதென்றும் சொல்லமுடியவில்லை. அந்த வடிவத்தில் கவிதை எழுதுபவர்களை ஜப்பான் இப்போதும் தக்க வைத்திருக்கிறது. 1878இல் பிறந்த யோசனோ அக்கிகோ என்ற பெண் கவிஞர் தன் கருத்துக்களைக் கொண்டுசேர்க்க டங்காதான் சிறந்த வடிவம் என்கிறார்.

**வசந்தகால சன்னலோரத்தில் இளம்பெண்**
**இளம் யோகியை எழுப்ப அழைப்புகள்**
**அவன் மனிதன் மட்டுமே**
**அவனது மந்திரங்கள் கவிழ்க்கப்பட்டன**
**அவள் தொங்கும் கயிறு மூலமாக!**

இவரது கவிதைகள் டங்காவை நவீனப் படுத்திக்கொண்டது. இவரது இந்தக் கவிதைத் தொகுப்பின் பெயர் 'சிக்கலாகும் முடி' (மிடரேகாமி) என்பதாகும். அந்தக் காலகட்டத்தில் யாரும் பேசத் துணியாத பாலுணர்வுகளைப் பெண்ணாகிய இவர் பேசுவதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்தன.

**– அகமும் பணி அடுத்த இதழில் முடியும்** ■





# படைப்புக் குழுமம் இரண்டாமாண்டு விழா புகைப்படங்கள்

## சிறந்த பங்களிப்பாளர்கள் விருது...































• பிரேமபிரபா

# பாபிலோனியாவின் தொங்கு தோட்டம்





ஈராக் தேசத்தின் தலைநகரமான பாக்தாத்திலிருந்து 85 கிலோமீட்டர் தொலைவில் இருக்கிறது எல்ஹிலா என்ற இடம். இங்குதான் கிறிஸ்து பிறப்பதற்குப் பல வருடங்களுக்கு முன்பு இரண்டாம் நெபுசந்னேஸ்வர் என்ற அரசர் ஆட்சி புரிந்து வந்தார். பிறந்த வீட்டு ஞாபகத்தில் சோகமாக இருந்த அரசரின் இளம் மனைவி அமிட்டீஸ்ஸை மகிழ்விக்கத் தொங்கு தோட்டத்தை நிர்மாணித்தவர் இந்த மன்னர்தான்.

தொங்கு தோட்டம் என்றாலே அனைவர் மனதிலும் உடனே தோன்றுவது வழிந்து கீழ்வரை படர்ந்த பூங்கொடிகள் மட்டும்தான். 80 அடி உயரமான அரண்மனைத் தாழ்வாரங்களில் மரங்களும், செடிகளும் வளர்க்கப்பட்டிருந்தன. பட்டாம்பூச்சிகள், புல்தரைகள், காய்கனிகள், மலர்கள், பறவைகளென அந்த அரண்மனையே ஒரு சொர்க்க பூமியாக இருந்தது. தாவரங்களுக்கு விடும் நீர் வடிந்து கட்டிடத்தைப் பாதிக்காமல் இருக்க, ஒவ்வொரு தளங்களிலும் கற்பலகைகளை வைத்து, அதன் மேல் ஈயத் தகட்டினைப் பதித்து, பெரிய உருளைகளில் மண் நிரப்பி மரங்களையும், செடிகளையும் வளர்த்தார்கள்.

பாலைவனப் பிரதேசமான பாபிலோனாவில் தொங்கு தோட்டத்திற்கான பாசன வசதி அருகில் இருக்கும் டைகிரிஸ் நதியிலிருந்தே பெறப்பட்டது. நதிக் கரையிலிருந்து 80 அடி உயரமான அரண்மனை மாடிகளுக்குச் சிறுசிறு வாளிகள் இணைக்கப்பட்ட உலோக உருளைகளைச் சுழற்றுவதின் மூலமே நீர் இறைக்கப்பட்டது. அரண்மனைக்கு வருபவர்கள் எவரும் அடிமைகள் நீர் இறைப்பதைக் காணவோ அல்லது நீர் உருளைகளின் சப்தத்தைக் கேட்கவோ முடியாதபடிக்கு மறைவான பாதாள அறைகளில் நீர் இறைக்கும் பணி இரவு பகல் பாராமல் நடந்துகொண்டிருந்தது.

பாபிலோனாவில் தொங்கு தோட்டம் உண்மையாகவே இருந்ததா அல்லது அதீத கற்பனையினால் உருவேறிய ஒன்றாவென்ற சர்ச்சைகள் இன்றும் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன. அகழ்வாராய்ச்சியின்போது அங்கு தோண்டி எடுக்கப்பட்ட ஏராளமான களிமண் படிவ ஏடுகளில் அப்படியொரு தொங்கு தோட்டம் இருந்ததிற்கான எந்தப் பதிவுகளும் இல்லை. ஒரு காலத்தில் பாபிலோனாவைக் கடந்து போன அலெக்ஸாண்டரின் படை வீரர்கள் தாங்கள் கண்ட அரண்மனையைக் கேட்பவர்களின் ஆர்வத்தைத் தூண்ட மேலும் உருவகப்படுத்தி அவர்கள் நாட்டில் போய்க்

கூறியிருக்கலாம். அந்த நாட்டுச் சரித்திர ஆசிரியர்களும் கவிஞர்களும் எஞ்சியுள்ள இடைவெளிகளை ரசிப்பான புனைவுகளாக மேலும் மெருகேற்றி இது போன்ற தொங்கு தோட்டத்தை மக்கள் மனதில் பதியவைத்திருக்கலாம்.

சூரிய ஒளி முற்றிலும் தடை செய்யப்பட்ட இடம். உயர்ந்த சுவற்றின் மேல் இருக்கும் சிறிய துளைகள்தான் அங்கிருக்கும் அடிமைகளின் சுவாசத்திற்கான ஒரே வழி. மற்றபடி எப்போதும் சங்கிலிகள் புரளும் சப்தமும், நீர் இரைக்கும் தொடர் சலசலப்பும் கேட்டுக்கொண்டே இருக்கும். குரல் உயர்த்திப் பேசினால் மாபெரும் குற்றம். சகடையின் நடுத்தண்டில் பதித்த கைப்பிடியினைச் சுழற்றாமல் சுவற்றின் மூலையில் சாய்ந்தான் நெபூலா. சுவற்றின் உயரேயுள்ள துளைகளை உற்றுப் பார்த்துக்கொண்டே இருந்தவன், களைப்பின் மிகுதியால் நின்றபடியே சுவற்றில் சாய்ந்து கண் மூடினான். “என்ன நெபூலா, உடம்பிற்கென்ன?'' என்று கேட்டுக்கொண்டே அவன் அருகில் வந்து நெற்றியைத் தொட்டுப் பார்த்தான் டைரஸ். “உடம்பிற்கென்ன கேடு.. மனதுதான் சரியில்லை. இன்று ஏனோ என் மனைவி சமீராவின் ஞாபகமாகவே இருக்கிறது” என்றான் நெபூலா.

நெபூலாவிற்கும் சமீராவிற்கும் பெற்றோர்களால் திருமண ஒப்பந்தம் நிச்சயிக்கப்பட்டது. சமீராவை வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டே இருந்த நெபூலாவைக் கண்ட உறவினர்கள் அவனைக் கேலி பேசிச் சிரித்தார்கள். நொடியில் தன்னைச் சமாளித்துக்கொண்டு எங்கேயோ பார்ப்பதாக அபிநயித்தான் நெபூலா. மாமனாருக்கு முறைப்படி கொடுக்க வேண்டிய சீர் பணத்துடன் பரிசுப் பொட்டலத்தையும் மிகவும் மரியாதையுடன் கொடுத்து அவரை வணங்கினான். “கடவுள் உன்னை ஆசீர்வதிப்பாராக” என்று மனதார வாழ்த்துக் கூறி, ஈரமான களிமண் பலகையில் திருமண ஒப்பந்தத்தை எழுத ஆரம்பித்தார் சமீராவின் தந்தையார். பிறகு நெபூலாவை அழைத்து ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போடச் சொல்ல, மீண்டும் சமீராவையே பார்த்துக்கொண்டு வந்தவன் கால் இடறித் தன் உள்ளங்கை முழுவதையும் அந்தக் களிமண் பலகையில் பதித்தான். “என்ன நெபூலா, எங்கு மிதந்துகொண்டு இருக்கிறாய்?'' என்று அபூசாச்சா கேட்க, கூடியிருந்த பெண்கள் அனைவரும் கொல்லென்று சிரித்தார்கள்.

ஒரு சில மாதங்களுக்கு மேல் நீடிக்கவில்லை அவர்களின் இல்வாழ்க்கை. ஒரு நள்ளிரவில் அரசாங்கக் காவலர்கள் சந்தேகத்தின் பேரில் நெபூலாவை இழுத்துக்கொண்டு போனார்கள். செய்யாத குற்றத்திற்குத் தண்டிக்கப்பட, ஆத்திரத்தில் சிறைக்காவலர்களை அவன் காயப்படுத்த, ஒன்று மாற்றியொன்று அவன் வாழ்க்கையின் பாதையைத் தடம் புரள வைத்தது.

ஒருகாலத்தில் அடிமை வியாபாரத்தில் இடைத்தரகராக இருந்தவர்தான் அபூ என்ற 70 வயதான அபூசல். திருமணம் ஆகாமலேயே காலத்தைக் கழித்தவர், தன் துணைக்காகப் பத்து வருடத்திற்கு முன்பு ஒரு அனாதைச் சிறுவனை அடிமைச் சந்தையில் சலுகை விலைக்கு வாங்கித் தன் சொந்த மகனைப் பார்க்கிலும் மிகப்பிரியமாக வளர்த்துவருகிறார்.

“அபூசாச்சா” என்று சமீரா வாசலில் இருந்து அழைத்தவுடன், “யாரது?” என்று கேட்டுக்கொண்டே அவரது வளர்ப்பு மகன் வெளியே வந்தான். கண்களைச் சுருக்கிக்கொண்டு மிக அருகில் வந்தவர் “சமீராதானே, ஏது இந்தக் கிழவனைப் பார்க்க இப்போதுதான் நேரம் கிடைத்ததா?'' என்று அவளின் தோளினை ஆதரவாகப் பற்றி வீட்டிற்குள் அழைத்து வந்தார்.

“சாச்சா, உங்களுக்குத் தெரியும்தானே, நெபூலா தொங்கு தோட்டத்திற்கு அடிமையாகப் போய் மூன்று வருடங்கள் முடியப்போகிறது. நான் கொஞ்சம் ஷெக்கல்ஸ் சேமித்து வைத்திருக்கிறேன். என் மகனை யாரிடமாவது அடமானம் வைத்துக் கொஞ்சம் கடன் வாங்கிக் கொடுத்தால் என் கணவரை மீட்டுக்கொண்டு வந்துவிடுவேன்'' என்றாள் சமீரா. சிறிது நேர மௌனத்திற்குப் பிறகு அபூசல் “சரி, நீ கூறியது போலச் செய்துவிடலாம். ஆனால், ஒன்று. உன் பாதுகாப்பிற்காக இந்தக் கிழவனும் உன்னோடு வருவேன், சம்மதமா?” என்றார்.

மெசபடோமியாவில் இருக்கும் புனித நகரமான பாபிலோனாவிற்கு இருவரும் அடுத்த நாள் காலையிலேயே புறப்பட்டார்கள். ஒவ்வொரு இடங்களையும் கடந்து வரும்போதெல்லாம், அந்த இடத்தின் முக்கியத்துவத்தைப்பற்றி அபூசல் கூறிக்கொண்டே வந்தார். காண்போர்களை வியக்கவைக்கும் ஊரினைச் சுற்றி எழும்பியுள்ள 56 மைல் நீளமும், 360 அடி உயரமும் உள்ள

மதில் சுவர். சுவற்றின் மேல் தளத்தில் நான்கு குதிரைகள் பூட்டப்பட்ட ரதத்தினை ஓட்டும் அளவிற்கு விசாலமான 60 அடி அகலம். வாயிலைக் கடந்தவுடன் எதிர்ப்படுவது மேற்டக் கடவுளின் கோயில். அதற்கடுத்து உயரமான பாபெல் கோபுரம்.

"இன்னும் சிறிது தூரம்தான். தொங்கு தோட்டத்தை அடைந்துவிடுவோம்" என்று கூறிய அபூசல் தன் பையில் வைத்திருந்த காய்ந்த பேரீச்சம்பழங்களைத் தேர்ந்தெடுத்து சமீராவிற்குக் கொடுத்தார். 400 சதுர அடி பரப்பளவில் 80 அடி உயரத்திலிருந்த பசுமை போர்த்திய அரண்மனையைத் தூரத்திலிருந்து பார்த்தவளுக்கு, ஏதோ ஓர் இருண்ட மூலையில் நெபூலா கண்டிப்பாக இருக்கிறான் என்ற நம்பிக்கையே மிகவும் மகிழ்ச்சியைக் கொடுத்தது. அமைதியான சூழ்நிலையில் பறவைகளின் சப்தமும், தேனீக்களின் ரீங்காரமும் அவளை ஒரு மாய உலகிற்கே கூட்டிக்கொண்டு போயின.

"அபூசாச்சா நாம் இந்த அரண்மனையில்தான் நெபூலாவைப் பார்க்கப் போகிறோமா?" என்று சமீராவின் வெகுளித்தனமான கேள்வியைக் கேட்ட அபூசல் "அப்பாவிப் பெண்ணே, இங்கு இருக்கும் வாயிலில் நிற்கக்கூட நமக்கு அனுமதி கொடுக்கமாட்டார்கள். நாம் அடிமைகளின் தலைவன் வீட்டிற்குத்தான் போகப்போகிறோம்" என்றார்.

அபூசல் கூறியதைப் பொறுமையின்றிக் கேட்டுக்கொண்டிருந்த அடிமைகளின் தலைவன் கடுமையான தன் குரலை உயர்த்தி "இதோ பார் பெரியவரே, 25 ஷெக்கல்ஸ் கொடுத்துவிட்டு அந்த நாயை மீட்டுக்கொண்டு போ. இல்லையென்றால் இந்த அழகிய பெண்ணை என்னிடம் விட்டு, அவனை இலவசமாக மீட்டுக்கொள்" என்று கூறித் தன் தொடையைத் தட்டி மிகச் சப்தமாகச் சிரித்தான். சமீராவோ தன்னிடம் இருந்த 20 ஷெக்கல்ஸைத் தலைவனின் பாதத்தில் வைத்து, அவன் முன் மண்டியிட்டு வணங்கி மன்றாடி, தன் ஆதரவற்ற நிலைமையைக் கூறி அழுதாள். "இதோ பார் அழகியே, சுகவீனப்பட்ட கழுதையால் யாருக்கும் லாபமில்லை. ஆதலால், உன் விண்ணப்பத்திற்குச் செவி சாய்க்கிறேன். ஆனால் ஒன்று. உனக்கு அரசியாரின் அந்தப்புரத்தில் ஒரு வேலை நிச்சயம் காத்துக்கொண்டிருக்கிறது என்பதை மட்டும் எப்போதும் ஞாபகத்தில் வைத்துக்கொள்" என்று கைதட்டி நெபூலாவை வரவழைத்தான். கடுமையான தொற்றுநோயால் பாதிக்கப்பட்ட அவனை இரண்டு பேர் கைத்தாங்கலாகக் கூட்டிக்கொண்டு வந்தார்கள். நெபூலாவைக் கண்டவுடன் ஓடிச் சென்று அவனை இறுக அணைத்துக்கொண்டு கதறினாள் சமீரா.

**ஒ**ருமாதமாக தன் கணவனைக் கண்ணுக்குள் வைத்துப் பராமரித்தாள். நேரத்திற்கு உணவு, மருந்தென அவளின் பணத் தேவையும் உடன் கூடிக்கொண்டே போனது. அவனும் உடல் தேறி நடமாட ஆரம்பித்தான். மகனைப் பற்றி நெபூலா கேட்கும்போதெல்லாம் ஏதேதோ பொய்க் கதைகளைக் கூறிச் சமாளித்தாள். இதற்கு மேல் நெபூலாவிடம் தன்னால் சமாளிக்க முடியாதென உணர்ந்தாள். ஒருநாள் காலை அவன் அருகில் அமர்ந்து அவனுக்கு மிகவும் பிடித்த தேனில் ஊறிய பேரீச்சம்பழங்களை ஊட்டிக்கொண்டே, "அன்பரே, நம் மகன் மம்மூத்தைக் கூட்டிக் கொண்டு வரப்போகிறேன். நாளை காலை வந்துவிடுவேன். உங்கள் துணைக்கு அபூசாச்சாவின் மகனை வரச் சொல்லி இருக்கிறேன்," என்று எந்தவிதமான பதிலுக்கும் காத்திருக்காமல் அவன் நெற்றியில் ஆழ்ந்த முத்தமிட்டு வெளியேறினாள்.

**ச**மீராவின் திடீர் முடிவைக் கேட்ட அபூசல் "மகளே, மேலும் சில நாட்கள் காத்திருக்கலாம். கடவுள் கருணையுடையவர். நம்மை நிச்சயம் கைவிடமாட்டார்" என்று தைரியம் கூறினார். "இல்லை சாச்சா, மகனையும் மீட்டெடுக்க வேண்டும். மருத்துவக் கடன் வேறு. எனக்கு வேறு வழியே தெரியவில்லை. பாபிலோனாவில் நாம் சந்தித்த அடிமைத் தலைவனிடம் என்னைக் கொண்டுபோய் விட்டுவிடுங்கள். கிடைக்கும் ஷெக்கல்ஸை வைத்து என் குடும்பத்தைப் புனரமையுங்கள். நான் பாதி இறந்துவிட்டேன், சாச்சா.. நெபூலாவிடம் உண்மையைக் கூறும் தைரியம் எனக்கில்லை'' என்று அபூசலின் கைகளைப் பிடித்துக் கெஞ்சியபடி மன்றாடினாள். அவளின் நிலைமையைக் கண்ட அபூசல் பயணத்திற்கான ஏற்பாட்டைக் கவனித்தார்.

தன்னலமற்ற ஒரு தாயின் அன்பால் ஒன்றுசேர்ந்தார்கள் தந்தையும், மகனும். இனிமேல் தனிமையில் இருக்கும் சமீராவிற்கு ஆறுதல் அளிக்கப்போவது வீட்டில் இருந்து அவள் தன்னுடன் எடுத்து வந்த களிமண் பலகையில் இருக்கும் நெபூலாவின் உள்ளங்கைப் பதிவும் அவனுடன் வாழ்ந்த அந்தச் சில நாட்களும் மட்டுமே. ■

• ஜின்னா அஸ்மி
ஓவியம் : கொ.வடிவேல்

# நீ துளையிட்ட எனது புல்லாங்குழல் – 1



நாம் சந்திக்காத பொழுதுகள்
இந்நேரம்
என்னவாக முடிந்திருக்கும்?
......
வாசலுக்கும்
வருகைக்கும்
எந்தச் சம்பந்தமுமில்லை அது
காற்றைப் போல
......

தூரிகையால் உன்னை வரைந்துவிட முடியாது...
உன் நிறம்
நிறங்களற்றது...
......
உன் பார்வையின் நிழலில் இருக்கிறேன்
தூங்கும்போது
எங்கே ஒளித்து வைப்பாய் என்னை?
......
நீ
பசிக்கு அழுவதற்கும்
பாவத்திற்கு அழுவதற்கும் இடையில்
நிறைய வித்தியாசங்களுடன்
நிறைந்திருக்கிறாய்...
......
ஏதுமற்ற யாசகனாக
நான் இருந்தாலும்...
என்னிடம் எடுத்துக்கொள்ள
அவ்வளவு காதல் இருக்கிறது
......
காதலுக்குத் தெரியாது
கண்களுக்குத்தான் தெரியும்
உருகுவதும் அழுவதும்
ஒன்றே அல்ல என்று...
......
நீ எங்கிருந்தாலும்
என்னைத் துளையிட்டு
இசைத்துவிடுகிறாய்
ஒரு புல்லாங்குழலென...

– இன்னும் இசைக்கும் ■

• கட்டாரி
ஓவியங்கள் : அழ.ரஜினிகாந்தன்


# சிலேட்டுக்குச்சி

எத்தன பேரு பாத்திருப்பம்.. எத்தன பேருக்கு இன்னும் நெனப்புல இருக்குமின்னும் தெரியல... சிலேட்டுக்குச்சி..... பள்ளிக்கொடத்த வெறுங்கட்டடமாக் கண்டவனக்கூட என்னாடாது... வெள்ளையா ஓமரொட்டியாட்டம்ன்னு புடிச்சிப்பாக்க வச்சுது...! மாவுக்குச்சி.. கல்லுக்குச்சி கலர்க்குச்சின்னு எத்தன வகையா வந்து நம்ப கையிக்குள்ள தேயிற ஏணிக்கம்பா நின்னுச்சின்னு சொன்னா எத்தின பேரு மறுத்துப் பேசிற முடியும்?

இப்பம் எதுக்கு இவன் சிலேட்டுக்குச்சியப் பத்திக் கிறுக்கிக்கிட்டுத் திரியிறாம்ன்னு யோசிக்கிறது புரியிது.. சித்தப் பொறுங்க.. பொதுவா ஒரு செவத்தப் புடிச்சுக் கிறுக்குற பச்சப்புள்ள வெறுமனே வட்டம் முட்டைன்னுதா லாந்திக்கிட்டுத் திரியும்.. ஆனா அது சிலேட்டுக்குச்சியப் புடிச்சி எழுதுறப்போ அந்த வட்டம் முட்டைக்கெல்லாம் ஒரு அர்த்தம் வந்து உக்காந்துக்குது. மொதமொதலா சிலேட்டுக் குச்சியப் புடிச்சி எழுதுனது எத்தன பேருக்கு ஞாபகம் இருக்கும்ன்னு தெரியல. இன்னும் தெளிவாப் பத்து நாளு நாத்துவிட்ட வயக்காடு மாதிரி பச்சையாப் போட்டு ஒடைச்சா.. எத்தன பேருக்குச் சிலேட்டுக்குச்சியப் புடிச்சி எழுதுற குடுப்பின வாச்சிருக்கும்ன்னும் தெரியல.

என்னடா இது... சிலேட்டுல எலி ஓட பூனை தொரத்தற மாதிரி சுத்திக்கிருக்கேன்னு யோசிக்கிரியளா..? ஒன்னுமில்லங்க. எல்லாருஞ் சொல்ற மாதிரி “அட.... அதெல்லா எங்க காலம்மப்பா.... என்னதா இருந்தாலும் அந்த நாளுகளப் போல வருமா”ன்னு எல்லாருக்கும் ஒரு காலமிருந்தது. அப்படியா எம் வயசொத்தவைய்ங்களுக்கு வாச்ச ஒரு காலம் சிலேட்டுக்குச்சிக் காலம்.

நாம அம்புட்டுப் பேரும் செத்து விழுகுற வரைக்கும் எதாவது ஒரு கொழந்தத்தனம் பண்ணிக்கிட்டேதா கெடக்குறோம். அது... இப்ப நா எழுதிக்கிட்டு இருக்க மாதிரி.. நீங்க இவன் என்னத்த எழுதிவச்சிருக்கான்னு படிச்சிக்கிட்டு இருக்க மாதிரி.. இப்படி ஏதாவது ஒரு கொழந்தத்தனம் பண்ணிக்கிட்டேதா கெடக்குறோம்.. அதுல நாம அம்புட்டுப் பேரும் மறக்கவே முடியாத ஒரு பெரும்பிள்ளைத் தனமான கொழந்தத்தனம் பள்ளிக்கொடம் போனது... படிச்சது. இப்பம் இருக்குற பள்ளிக்கொடங்களப்பத்தி நாம பேசப் போறதில்ல. எம் பாட்டம் எங்க அப்பன்... அப்பறம் நானு.. படிச்ச காலத்துல இருந்த பள்ளிக்



கொடங்களப்பத்திதெம்... பேசப்போறம். பாடத்த வாழ்க்கையாவும்... வாழ்க்கையப் பாடமாவும் சொன்ன... சொல்லிக்குடுத்த... பள்ளிக்கொடங்களப் பத்திதாச் சொல்லப்போகுது இந்தச் சிலேட்டுக்குச்சி.

அந்த நாளுகள்ல வாழ்ந்த வாத்தியாருன்னா ரீபாக் போட்டு பேட்மிட்டன ஆடிக் களைச்சிப் பூத்த வேர்வையோட கழுத்துல செயினு பொதைய சக்கரைக்கி மாத்திர முழுங்குறவைங்க இல்ல. இவைங்க அடிக்கிற அடில முதுகுல வரிக்கோடு விழுவும். அதே எடத்துல வந்து வருடிக் குடுப்பாங்க பாருங்க. செஞ்ச தப்ப ஏன்டா செஞ்சோம்ன்னு யோசிக்கிற அளவுக்குச் செஞ்சிரும். இன்னைக்கும் மண்ணுக்குள்ள பொதஞ்ச மழகணக்கா எங்க ஒவ்வொருத்தனோட வாழ்தல்லயும் பூத்துச் சிரிக்கிற எங்க வாத்தியாருகளப்பத்திதா பேசப் போறம். முடிஞ்சா ஒரு சிலேட்டு ஒரு கல்லுக்குச்சியத் தேடிப்புடிச்சிப் பக்கத்துல வச்சிக்கங்க..!!

நாம மழைக்கிக் கொட பள்ளிக்கொடத்துக்குப் போனதில்லன்னு பெரும பீத்திக்கிற அம்புட்டுப் பயலும்.. கண்டிப்பா மழைக்கிப் பள்ளிக்கொடம் ஒதுங்கியிருப்பான். படிக்கிறதுக்காக இல்லாட்டியும்.... ஊருக்காட்டுல நல்ல மழபெஞ்சதும்... ஊருபூரா குடிசகொட்டாயா இருந்ததும்... ஒரே ஒழுகாத ஒட்டுக் கட்டடமாப் பள்ளிக்கொடம் இருந்ததுமான பல காரணத்துகள இங்க சொல்லலாம்.. மழக்கி ஒதுங்குன பயலுக மன்னரு சரித்திரம் பேசுன கதைகள எல்லாம் படிச்சிப்புட்டுத்தான வந்து கெடக்குறோம் இங்க....

இனி............!!

**சிலேட்டுக்குச்சி**



சிலேட்டுக்குச்சின்னு மனசுக்குள்ள வந்து உக்காந்தவுடன ஞாபகத்துக்குள்ள பளிச்சின்னு கொடிமின்னலா வந்து போறவரு எங்க சிவராமன் சாரு. பொதுவா திருநெல்வேலிக்காரவுகல்லாம் கங்குல கெடக்குற கரித்துண்டாட்டம் கொஞ்சம் சூடாவே இருப்பாக. ஆனா சிவராமன் சாரு தண்ணி தெளிச்சிவச்ச கொன்னப்பூ மாதிரி. ஆரவாரமில்லாதவரு. எட்டு வயசுலேயே வேட்டிகட்டணும்ங்கிற ஆசை வந்திச்சின்னா அது அவரைப் பாத்துதா. தண்ணில தழஞ்சிக் கெடக்குற ஆகாசத்தாமர மாதிரி தழையத்தழைய கட்டிருப்பாரு. நெடுநெடுன்னு வளந்திருந்தாலும் பயலுககிட்ட பேசுறப்போ அவரும் பச்சக் கொழந்ததா. வருசந் தவறாம திருச்செந்தூரு கோயிலுக்குப் போற சிவராமன் சாரு.. சாம்பல் நெறத்துல கடல்பாசி மாதிரி இருக்குற ஒன்ன வாங்கிட்டு வந்து எல்லாருக்குங் குடுப்பாரு.. அது சிலேட்டுக்குச்சி மாதிரியே எழுதும். ஆனா தேயவே தேயாது. இது தீபாவளி பொங்கலு மாதிரி வருசந் தவறாம நடக்கும்.... ஆக... எங்களுக்குச் சிலேட்டுக்குச்சி வாங்குற காசு ஒருமூணு மாசத்துக்கு மிச்சம்....

சிவராமன் சாருக்கு எத்தன பிள்ளைங்கன்னு தெரிஞ்சிக்க அந்த வயசுக்கு என்னமோ யோசிக்கத் தெரியல. ஆனா எங்க எல்லாரையும் அந்த வயசுலேயே தாம் புள்ளைகளாத்தாம் பாப்பாருன்னு அந்த வயசுலேயே எங்களுக்குப் புரியவச்சவரு. ஒரு வாட்டி பள்ளிக்கொடத்துலேர்ந்து ராமேசுவரத்துக்குக் கூட்டிக்கிட்டுப் போனாங்க. எங்க அப்பாம்மால்லாம் "சார்.... புள்ளைக பத்திரம் சார். உங்கள நம்பித்தா அனுப்புறோம் சார்"ன்னு சொன்னது கூட ஒரு மாதிரி கலங்கலாத்தா ஞாபகத்துக்குள்ள இருக்கு. ஆனா சாரு தன்னோட சொந்தச் செலவுல சோறு வாங்கிக்குடுத்து எங்களுக்கான அந்தக் காச திரும்பி வந்தவுடனே எங்களுக்கே திருப்பிக்குடுத்தது இன்னும் பச்சப்பசேல்ன்னு மனசுக்குள்ள இருக்கு.

ஆனா "எங்க சிவராமன் சாருக்குக் கோவம் வந்து அக்குளுக்குக் கீழபுடிச்சிக் கிள்ளுனாரு கருத்தத் தோலுகூட செவந்து போயிரும்"ன்னு..... நாங்க....எங்களுக்கு அடுத்த வருசம் படிக்க வாறவைய்ங்ககிட்டப் பயமுறுத்திச்சொல்லுற அளவுக்குக் கண்டிப்பானவரு. அவருக்கு எந்த சாரு சொல்லிக்குடுத்திருப்பாருன்னு தெரியல.. சாரோட கையில இப்பல்லாம் வருதே ஸ்போர்ட்ஸ் கடிகாரம்.. அதே அளவுல மோதிரம் போட்ருப்பாரு. தப்பு செய்றவைங்கள நல்லா

மனசுல பதிச்சிவச்சிக்கிட்டு எங்க மண்டையிலயும் பதியம் போட்ருவாரு... இப்ப வாற "தெறிக்க விடலாமா"ல்லாம் நாங்க அப்பவே அச்சு மாறாம அனுபவிச்சவைய்ங்க.... சித்திரக்கதையில வாற மாயாவி முத்திரைய நாங்க நெசத்துலையே பாத்தவைய்ங்க.

இம்புட்டுக் கொடுமையாத் தண்டிக்கிற சிவராமன் சாரு பொம்பளப்புள்ளைகள மட்டும் தொடக்கூட மாட்டாரு.. இதுனாலேயே அப்ப இருந்த அறிவுக்கு எங்க கிளாஸ் பொம் பளப்புள்ள பேருகளையும் பக்கத்துல செமினி கணேசன் படத்தையும் ஒட்டி சிவராமன் சாருன்னு பேரு எழுதி... கள்ளிச் செடில சாரு பேரும் புடிக்காத புள்ளைக பேரும் சேத்துவச்சி எழுதிக் காரணம் புரியாம வேண்டுதலு பூசை எல்லாம் போட்ட காலமெல்லாம் கண்ணுக் குள்ளயே நிக்கி...

சாரு என்னதா அழகா கிராப் வெட்டி யிருந்தாலும் அவருக்கு மரம் வளக்குறதுன்னா அம்புட்டுப் புடிக்கும். யாரெல்லாம் மிக மிக அடங்காதவர்கள் பட்டியல்ல வாரோமோ அவைங்களல்லாம் அழச்சிக்கிட்டுப் போயிப் பள்ளிக்கொடம் முன்னால குழி தோண்டச் சொல்லி... அவரு வாங்கிட்டு வந்த மரக்கன்னுகள நடச்சொல்லுவாரு..மரத்துக்கு ரெண்டுன்னு பொம்பளப்புள்ளைகள மட்டும் தெனமும் தண்ணி ஊத்தச்சொல்லுவாரு...

எங்கள மாதிரி பயலுகளுக்கு அடப்பு வக்கிற வேல.... இப்படியா வருசத்துக்குப் பத்து மரமாவது பள்ளிக்கொடத்தச் சுத்தி நட்டு வச்சிருப்பம். ஒவ்வொருமரமா தளிரு விடுறப்பவும் துளுத்துச் செழிக்கிறப்பவும் சாரோட மொகத்துல அப்பிடி ஒரு பூரிப்பு தெரியும். எதாவது ஒரு செடி பூப்பூத்தா அன்னைக்கி எங்க வகுப்புல அவுரங்கசீப் பரோட்டா சுட்டுத் தருவாரு. மார்கோணியே வந்து ரேடியாப் பொட்டிக்குள்ள பாட்டுப்பாடுவாரு.

சாருக்கு என்னதாங் கோவம் வந்தாலும் எங்களக் கிள்ளுவாரே தவிர.. மரத்துல ஒரு சில்லுப் பேக்கமாட்டாரு... பள்ளிக்கொடம் முடிஞ்சி எல்லாரும் வீட்டுக்குப் போன பொறவு இவரு மட்டும் அந்த மரத்தடில நின்னு எலதழ வழியா மேவானத்தப் பாத்துக்கிட்டே நிப்பாரு. சாரு மரத்துகளப் பத்திப் பேச ஆரம்பிச்சாருன்னா அம்புட்டுதா... அன்னைக்கி வேளைக்கிப் பாடம் ஓடாது. "டேய் பசங்களா... இன்னைக்கி நீங்க வளக்குற இந்தச் சின்ன மரக்கன்னுகல்லாம் நாளைக்கி உங்கள விட ஒசரமா வளந்து உங்களுக்கு ஏதாவது நல்லது பண்ணிக்கிட்டே இருக்கும். அது நீங்க வளத்து விட்டதுக்கான பதில் உதவி இல்ல. அதுக வளர்றதே நல்லது செய்றதுக்காகத்தா. மரத்துக்கு நல்லவன் கெட்டவன்ல்லாம் தெரியாது. யாரு வந்தாலும் நெழல் குடுக்கும். யாரு போனாலும் கனி குடுக்கும். அந்த மாதிரி வாழணும்ல ஒரு வாழ்க்கை"ன்னு சொல்லிக்கிட்டே இருப்பாரு. அந்த வயசுக்கு அதோட அர்த்தம் லேசா வெளங்குன மாதிரியும் இருக்கும். வெளங்காத மாதிரியும் இருக்கும். யாருக்கும் தொந்தரவு இல்லாம ஒம்பாட்டுக்கு ஒன்னோட வேலையைப் பாத்துக்கிட்டே இரு. உனக்கானது வந்துக்கிட்டே இருக்கும்ன்னு சாரு சொன்னது புரிய கொஞ்சம் வயசு ஆகத்தா செஞ்சது.


ஒவ்வொரு வாட்டியும் பயலுக படிச்சி முடிச்சி வேற பள்ளிக்கொடத்துக்குப் போறப்பல்லாம் தலையத் தடவிக்குடுத்து நல்லாருன்னு சொல்லுவாரு. அப்ப மட்டும் பொம்பளப் புள்ளைக தலையத்தொட்டு அவிங்களையும் நல்லாருன்னுசொல்லுவாரு... பெரிய கிளாசு வந்தப்பறம் சிவராமன் சாரு சொன்னத எல்லாம் யோசிச்சிப் பாக்க வயசும் காலமும் எடம் குடுக்கல. கடிகாரம் ஒரு எடத்துல நின்னு சுத்திக்கிட்டே இருந்தாலும் காலந்தா எவ்வளவு வேகமா நம்மள உருட்டி ஓட்டிக்கொண்டு வந்துருது.....!

எனக்கு ரெண்டு வருசம் பின்னாடி படிச்ச ஒரு தம்பிய ஒரு இருவது வருசம் கழிச்சிப் பாத்தேன். அப்ப சிவராமன் சாரப் பத்திப் பேசயில அவன் சொன்னது. சாருக்குக் கடேசியா மாத்தல் வந்தப்ப பள்ளிக்கொடத்தச் சுத்தி நாங்க நட்டுவச்ச எல்லா மரத்துக்கிட்டையும் போயித் தடவிக்குடுத்து நல்லாருங்க.. புள்ளைகள பத்திரமாப் பாத்துக்கங்கன்னு சொல்லிட்டுப் போனாராம்.

இந்த வாட்டி ஊருக்குப் போயிருந்தேன். என்னமோ பள்ளிக்கொடத்துக்குப் போகணும்ன்னு தோணிச்சி. நாங்க குமிஞ்சித் தண்ணி ஊத்தி வளத்த ஒரு மரம் நா நிமிந்து பாக்குற அளவுக்கு ஒசரமா வளந்து நின்னுச்சி. மனசுக்குள்ள என்னமோ அம்புட்டு ஒரு பெரும.... பூரிப்பு... அண்ணாந்து மரத்தோட ஒசரத்தப் பாத்தேன். அங்க சிவராமன் சாரு பச்சையாச் சிரிச்சாரு......!!

– தொடரும்

ஓவியங்கள் : கொ.வடிவேல்



அண்டவெளிக்குள்
அலைந்துகொண்டிருக்கிறது
ஆன்மா...
பெருநெருப்பொன்றை
விழுங்கியபின்னும்
அடிவயிற்றுப்பசி
அடங்கவேயில்லை...
புகைந்து கிடக்கும்
ஆற்றாமைகள்
முற்றுப் பெறாமலேயே
மறு சுழற்சிக்கு
ஆயத்தமாக...
மீண்டும் மீண்டும்
இரவு பகல்களுக்குள்
இருத்திக் கொள்கிறது
பூமி...
**–மதுரா**

என் அப்பா
அமரும் படித்துறைகளில்
அமர்ந்துகொண்டு
அவர் படித்த புத்தகத்தின்
முதல் பக்கத்தைத்
திறக்கிறேன்
‘என் தந்தைக்குச்
சமர்ப்பணம்’
என்றிருந்தது ...
**– ராம் பெரியசாமி**

ராக்கால பூஜைக்கான மணியோசை
பழனி மலையிலிருந்து
அதிர்ந்ததிர்ந்து பரவிக்கொண்டிருந்தது.
யானையின் துதிக்கையென,
மலைப்பாம்பொன்றின் உடலெனக்
காங்கிரீட் சாலையில் நீள்கிறது நீர்த்தாரை.
உலோக உண்டியலின் குலுக்கல்களுடன்
நகரும் இசைக்குழுவில்
உடைந்த குரலில்
பார்வையற்றவர் பாடுகிறார்
நான் பார்த்ததிலே
அவள் ஒருத்தியைத்தான்
நல்ல அழகி என்பேன்
நல்ல அழகி என்பேன்.
– ஜி.சிவக்குமார்


நானருந்திவிட்டுக்
கசக்கி எரிந்த
காகிதத்
தேநீர்க் கோப்பையை எடுத்து
அருகிலிருந்த
குப்பைத் தொட்டியில் போட்டபடியே
என்னைப் பார்த்துச் சிரிக்கிறது.....
அக்குழந்தை....
குப்பை நெடி
எனக்குள்ளிருந்து
வெளியேறத் தொடங்கியது....
–சுயம்பு

படபடத்தடங்கும்
கூடிழந்த பறவையின்
சிறகொலியில்
மறைந்து கிடக்கிறது
வெளியேறும் வனத்தின்
காலடியோசை.
–கோ.லீலா ■



• இரா.விசுவேசுவரன்

# தொடர்ந்து செல்.. வேகம் குறைந்துபோகாதே!



வாழிய நீ எம்மான்
வையத்து நாட்டில் எல்லாம்
தாழ்வுற்று,
வறுமை மிஞ்சிகெட்டு,
பாழ்பட்டு நின்றதாம்
பாரத தேசந்தனை
வாழ்விக்க வந்த
காந்தி மகாத்மா....

– மகாகவி பாரதி.

தென்னாப்பிரிக்காவிலிருந்து இந்தியா திரும்பிய காந்தி, பிறிதொரு நாளில் இரண்டாவது முறையாகக் கல்கத்தாவில் இருந்த சாந்திநிகேதன் பள்ளிக்கு விஜயம் செய்தபோது, ரவீந்திரநாத் தாகூரால் மகாத்மா என்று முதன்முதலாக அழைக்கப்பட்டார் என்று கூறுவர். ஆனாலும் நமது முண்டாசுக் கவிஞன் மகாகவி பாரதி காந்தி தென்னாப்பிரிக்காவிலிருந்து இந்தியாவுக்குத் திரும்பப் போகிறார் என்கிற செய்தியைக் கேட்ட உடனேயே, வரவேற்புப்பா பாடினான், காந்தி மகாத்மா என்று.

அவனது பாடலை உற்றுப் பாருங்கள், காந்திக்கான வரவேற்புப் பாடல் மட்டும் அல்ல அது, அதோடு இந்தத் தேசம் இருந்த நிலையைக் கவலையோடு சித்தரித்து இருந்தான். எப்படி?

தாழ்வுற்று
வறுமை மிஞ்சிகெட்டு
பாழ்பட்டு நின்றதாம்
பாரத தேசந்தனை...

எனச் சொல்லியதோடு, இவற்றிலிருந்து நிச்சயம் இந்தியாவைக் காந்தி காப்பாற்றுவார் என்கிற நம்பிக்கையில்,

**வாழ்விக்க வந்த காந்தி,** என
நிறுத்திக்கொள்ளாமல்
**காந்தி மகாத்மா** என்று முடிக்கிறான்.

இந்திய தேசத்தின் அன்றைய நிலை, காந்தி காத்து ரட்சிப்பார் என்கிற உறுதியான நம்பிக்கை ஆகியன மகாத்மா என்கிற முதல் பிரகடனமாகப் பாரதியின் கவிதையில் வெளிப்படுகிறது.

காந்திஜி பன்முகச் சிறப்புத்தன்மையுடன் திகழ்ந்தவர்.

முனைப்பு மிக்க அரசியல் தலைவராக அரசியலில் உயர்ந்த மாண்புநெறிகளைக் கடைபிடித்தவர். மாபெரும் அரசியல் போராட்ட வல்லுநராகக் காலனியாதிக்கத்தை வீழ்த்தவும் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றவும் வன்முறையற்ற நீண்டதொரு மக்கள் இயக்கத்தை நடத்தியவர்.

ஆச்சார மிக்க மதப்பற்றாளர். பெண்களின் சமுதாய விடுதலைக்காக வாதிட்டவர். சாதிப்பாகுபாட்டை, சாதிய ஒடுக்குமுறையை, இறுதியாகச் சாதிய அமைப்பையே ஒழித்துக் கட்டுவதற்காக நின்றவர். சமுதாய வாழ்வின் அனைத்து அம்சங்களிலும் நியாயமான அணுகுமுறையை மேற்கொள்ளப் பொதுவாக வலியுறுத்தியவர். அனைத்து மோதல்களுக்கும் வன்முறையைப் பயன்படுத்தாமலேயே தீர்வு

காணக்கூடிய ஒரு உலகம் அமையவேண்டும் என்று தொலைநோக்குப் பார்வை கொண்டிருந்தவர். அவரது தனித்தன்மை மற்றும் அரசியலின் பல்வேறு பரிமாணங்கள் குறித்து இன்றும்கூட முழுமையாக அறியப்படவில்லை.

தேசப் பிரிவினை காலகட்டத்தில் தேசம் முழுவதும் வெறி கூத்தாடிய மதவெறியை எதிர்த்து மகாத்மா காந்தி நடத்திய வைராக்கியமான போராட்டம் வெறும் வரலாற்றுச் செய்தி மட்டுமல்ல, மாபெரும் படிப்பினையுமாகும். அதே நேரத்தில் மதவெறிக்கு எதிரான காந்தியின் போராட்டம் குறித்தும், காந்தி குறித்தும் சரியான கோணத்தில் தெரிந்துகொள்வது அவசியமாகிறது.

காந்தி மத நம்பிக்கை கொண்டவர். அன்றாடம் பிரார்த்தனைக் கூட்டங்கள் நடத்தியவர். சதா ராம நாமம் ஜெபித்துக் கொண்டே வாழ்ந்தவர். ராமராஜ்யக் கனவில் திளைத்தவர். அடிக்கடி ஆத்மசுத்திக்காக உண்ணாநோன்பு இருந்தவர். இது மகாத்மா காந்தி பற்றிய சித்தரிப்பின் ஒரு பக்கம்...

மத ஒற்றுமைக்காக, மதவெறிக் கலவரங்கள் நடந்த நவகாளியில், ஒற்றை ஆளாய், காலில் செருப்பு கூட அணியாமல் பாத யாத்திரை மேற்கொண்டவர். மதவெறிக்கு எதிராகச் சமரசமின்றிக் குரல் கொடுத்தவர். மதவெறியன் கோட்சேவின் குண்டுக்குத் தன் உயிரையே பலி தந்து, தன் இலட்சியத்துக்காக உயிர்த் தந்தவர். இது மகாத்மா காந்தி பற்றிய இன்னொரு சித்தரிப்பு.

மகாத்மாவைப் புரிந்துகொள்வது என்பது ஒரு தனி மனிதரைப் பற்றிய புரிதல் மட்டுமல்ல, காந்தியம் என்ற அரசியல், சமூக சித்தாந்தத்தைப் புரிந்துகொள்வதும் ஆகும்.

ஒரு அரசு எப்படி மதச்சார்பற்றதாக இருக்கவேண்டும் என்பதைப் பிசிறில்லாமல் உணர்ந்து எடுத்துரைத்தார் மகாத்மா. மேலும் மதச்சார்பின்மையைக் கட்டிக்காக்க அவர் தனக்கே உரிய கம்பீரத்துடன் மாற்றுகளை முன்வைத்தார்.

டெல்லியில் நடந்த ஒரு கலவரத்திற்குப் பின்னால் 12.01.1948 அன்று ஒரு பிரார்த்தனைக் கூட்டத்தில் ஆற்றிய சொற்பொழிவு மிக முக்கியத்துவம் வாய்ந்தது. அதில் அவர் பின்வருமாறு பேசுகிறார்...

“வாளை உருவிக் கையில் வைத்துக்கொண்டு சிலிர்த்து நிற்கும் வன்முறைக்கு முன்பாக உண்ணாவிரதம் என்ற சத்தியாக்கிரக நெறியே சிறந்தது எனும் முடிவுக்கு நான் வந்தேன்.

ஒரு மின்பொறி போன்று உண்ணாவிரதம் இருக்கவேண்டும் என்ற முடிவு எனக்கு உதித்தது. பரிசுத்தமான உள்ளத்தைக் கொண்ட ஒரு மனிதன் உன்னதமான ஒரு கொள்கைக்காகத் தன் உயிரைத் தவிர கொடுப்பதற்கு ஒன்றும் அவனிடம் இல்லை.


நாளை துவங்கும் எனது உண்ணாவிரதம் காலவரையறையற்றது. மக்கள் அனைவரும் மனம் மாறி, அவர்களின் இதயங்களில் அன்பு மலர்ந்து, நாங்கள் அனைவரும் சகோதரர்கள் என்ற உணர்வுடன் வாழத் துவங்கும்வரை, நான் உண்ணாவிரதத்தை நிறுத்த மாட்டேன்.

இதன் மூலம் மங்கிக்கொண்டிருக்கும் இந்திய நாட்டின் கௌரவத்தையும் இறையாண்மையையும் காப்பாற்ற இயலும் என்று நான் நம்புகிறேன். உலக நாடுகள் அனைத்திலும் இந்தியாவின் பெருமையை நிலைநாட்டுவதற்கு இந்த உண்ணாவிரதம் பயன்படும் என்று நான் கருதுகிறேன்.

எனது இந்த முடிவை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இறந்துபோக வேண்டிய நிலை ஏற்பட்டாலும் நான் அதற்குத் தயாராக இருக்கிறேன். என்னுடைய நோக்கமெல்லாம் சமுதாயத்தில் அமைதி நிலவ வேண்டும் என்பதுதான். இந்திய நாட்டில் அதன் மக்களாகிய இந்துக்கள், முஸ்லீம்கள், சீக்கியர்கள் ஒருவருக்கொருவர் சண்டையிட்டு மடிந்து வருவதைப் பார்த்துக்கொண்டு இருப்பதைக் காட்டிலும், நான் இறந்துபோவதே சிறந்த ஒரு முடிவு ஆகும் எனக் கருதுகிறேன்,” என்கிறார் மகாத்மா காந்தி.

**உலகத்திற்குக் காந்திஜியின் செய்தி**

“நான் நோய்வாய்ப்பட்டோ அல்லது ஒரு சிறிய காயம் ஏற்பட்டு அதன் விளைவாகவோ இறந்து போவேனேயானால் நான் என்ன லட்சியங்களுக்காக வாழ்ந்தேனோ அப்படிப்பட்ட மனிதன் அல்ல என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். எனது இக்கூற்று பலருக்குக் கோபத்தை வரவழைக்கும் என்பது எனக்குத்



பல மதங்களில் சங்கமமாக இந்தியா தன்னை உருவமைத்துக்கொண்டதுதான் இதன் வரலாறு என்பது எல்லோருக்கும் தெரியும்.

தெரியும். இப்போது நான் சொல்வதைக் குறித்து வைத்துக் கொள்ளுங்கள். சில நாட்களுக்கு முன்பு என்னை ஒருவன் கொல்ல முயற்சித்தது போன்று இப்போது என்னைத் துப்பாக்கியின் தோட்டா வினால் ஒருவன் சுட்டுக் கொன்றுவிடுவானாகில், நான் எந்தவித வெறுப்பும் இன்றி அந்தத் துப்பாக்கித் தோட்டாவைச் சந்திக்கவே விரும்புகின்றேன். எனது உதட்டிலே கடவுளின் நாமத்தைக் கூறிக்கொண்டு, எனது இறுதி மூச்சு விட விரும்புகின்றேன். அப்போதுதான் நான் எம்மாதிரியான ஒரு வாழ்க்கை வாழ வேண்டும் என்று விரும்பி இருந்தேனோ அப்படிப்பட்ட வாழ்க்கையை வாழ்ந்தவன் என்ற தத்துவத்திற்கு உரியவனாவேன்", என்பது மகாத்மா காந்தி தான் இறப்பதற்கு இருபத்துநான்கு மணி நேரத்திற்கு முன் தெரிவித்த கருத்து.

தன் பேத்தி மனுவைப் பார்த்து அவருக்குப் பிடித்தமான குஜராத்திப் பாடலைப் பாடச் சொல்கிறார்.

**'களைப்பாய் இருக்கிறாயோ**<br>
**களைப்பாய் இல்லையோ**<br>
**மனிதனே,**<br>
**வேகம் குறைந்து போகாதே...**<br>
**அப்படியே நின்றும் விடாதே.**<br>
**உனது போராட்டத்தில்**<br>
**நீ தனியே விடப்பட்டாலும்**<br>
**தொடர்ந்து செல்**<br>
**வேகம் குறைந்து போகாதே'**

மனு பாடிக்கொண்டு இருக்கிறாள், மகாத்மாவுக்கு எல்லா நாட்களையும் போலவே அன்றும் ஆரம்பித்தது.

பல்லாயிரம் ஆண்டுகளை உட்கொண்ட இந்த மண்ணின் வாசம் சகிப்புத்தன்மையே என்பது எல்லோருக்கும் தெரியும்.

அதைவிட மனித சமுதாயத்தின் மீது காட்டிய மரியாதை என்பதும் தெரியும். ஆரியர்களை, ஹூணர்களை, மங்கோலியர்களை, முகமதியர் களை, ஆங்கிலேயர்களை என வெளியிலிருந்து வந்தவர்களை எல்லாம் இந்த மண்ணில் வாழ வைத்திருக்கிறோம். பல மொழி, பல கலாச்சாரம், பல மதங்களில் சங்கமமாக இந்தியா தன்னை உருவமைத்துக்கொண்டதுதான் இதன் வரலாறு என்பது எல்லோருக்கும் தெரியும்.

இங்கு போர்கள் நடந்திருக்கின்றன. புதிய மதங்கள் தோன்றி இருக்கின்றன. வாளின் முனையில் மதங்கள் அழிக்கப்பட்டிருக்கின்றன. பேரரசுகள் தோன்றியிருக்கின்றன. சூழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. பெரும் தியாகங்கள் நிகழ்ந்திருக்கின்றன. இந்தியா உருக்குலைந்து போகவில்லை. உரம் பெற்றிருக்கிறது என்றே சொல்லவேண்டும். உலகுக்கு வழிகாட்டும் அளவுக்குச் சோதனைகளைச் சந்தித்த, அனுபவங்களைப் பெற்ற நாடாக இருக்கிறோம்.

கடந்த காலத்தை அழிப்பதல்ல எதிர்காலம். கடந்த காலத்திற்காகப் பழிவாங்குவது அல்ல எதிர்காலம்.

கடந்த காலத்தை ஏற்றுக்கொள்வதுதான் எதிர்காலம். கடந்த காலத்தின் தோளில் நின்று பயணம் செய்வதுதான் எதிர்காலம். இதைப் புரிந்துகொண்டவர்தான் மகாத்மா காந்தி.

கோட்சேக்களும் அவனைப் பின்தொடர்ந்து அலைபவர்களும் தங்களது வெறிக்கு எந்த விலையையும் கொடுக்கவும் எந்த அறநெறியையும் மீறவும் எப்போதும் தயாராய் இருப்பார்கள். குழப்பங்களையும் கலவரங்களையும் விதைக்காமல் தங்கள் கனவு நிறைவேறாது என்று அவர்களுக்குத் தெரியும்.

குண்டு துளைக்கப்பட்டு, குருதி கொப்பளிக்கும் நிலையில், உயிர் பிரிந்து மண்ணில் வீழ்ந்த மகாத்மாவிற்காக நாமும் அவரது பேத்தி மனுவோடு சேர்ந்து பாடுவோம்..

**களைப்பாய் இருக்கிறதோ**<br>
**களைப்பாய் இல்லையோ**<br>
**நாங்கள்**<br>
**வேகம் குறைந்து போகமாட்டோம்**<br>
**அப்படியே நின்றும் விடமாட்டோம்**<br>
**உனது போராட்டத்தில்**<br>
**நீ தனியே விடப்படவில்லை**<br>
**நாங்கள்**<br>
**தொடர்ந்து செல்வோம்**<br>
**வேகம் குறைந்துவிட மாட்டோம்.**<br>
**......**<br>
**வாழிய நீ எம்மான்**<br>
**வாழிய வாழியவே.**

• ஜி ராஜன்


# சிங்க மராட்டியர்தம் கவிதை கொண்டு...

**“சிங்க மராட்டியர்தம் கவிதை கொண்டு**
**சேரத்துத் தந்தங்கள் பரிசளிப்போம்”**

மராத்திய இலக்கியத்தின் செழுமை குறித்து அன்றே பாடிவைத்தான் முண்டாசுக் கவிஞன் பாரதி. அந்த மராத்திய இலக்கியம் உலகுக்குத் தந்திருக்கும் முத்துக்களில் ஒருவர் கவிஞரும் எழுத்தாளரும் சிறுகதை மற்றும் நாவலாசிரியருமான திரு விஷ்ணு வாமன் ஷிர்வாட்கர் (Vishnu Vaman Shirwadkar). இவர் “குஸுமாக்ரஜ்” எனும் புனைப்பெயரில் எழுதி வந்ததால் அப்பெயரிலேயே அதிகம் அறியப்படுபவர்.

**“எனது கவிதை எப்போதும்**
**வெற்றிக்காக எழுதப்பட்டதல்ல;**
**அதனால் அது எப்போதும்**
**தோல்விகளைக் கண்டு அஞ்சுவதில்லை!!**
**அது எப்போது பிறந்தது என்பது முக்கியமல்ல;**
**அதனால் மரணம் அதற்கொரு பொருட்டல்ல !!”**

என்று உறுதியோடு கவிதைகள் புனைந்த கவிஞர் வி வி ஷிர்வாட்கர் எனும் குஸுமாக்ரஜ் புனேயில் ஒரு சாதாரணக் குடும்பத்தில் 1912, பிப்ரவரி 27ஆம் தேதியில் பிறந்தார். தான் பிறந்த வீட்டிலிருந்து தத்தெடுத்த தந்தையாரின் ஊரான நாசிக் மாவட்டம் பிம்பள்கான் எனும் கிராமத்தில் தனது இளமைப் பருவத்தைக் கழித்தார். திராட்சையின் விளைநிலமான பிம்பள்கான் அக்காலத்தில் சிறிய கிராமமாக இருந்தாலும் “கேசரி”, “மனோரஞ்சன்” போன்ற மராத்திய தின இதழ்களும் “டைம்ஸ் ஆப் இந்தியா”, “குரோனிக்கல்” போன்ற ஆங்கில தினசரிகளும் மக்களின் வாசிப்புக்குக் கிடைத்திருந்தன. அதனால் அவை அவரின் சிறு வயதிலேயே வாசிக்கும் பழக்கத்தை




விதைத்திடக் காரணமாக இருந்தன. நாட்டில் நிலவிவரும் சுதந்திரப் போராட்டச் செய்திகளையும் அவ்வப்போதைக்கு அறிந்திடவும் காரணமாயின.

குழந்தைகளின் உயர்கல்வி கற்க ஏதுவாக அவரது குடும்பம் நாசிக் நகருக்குக் குடியேறியது. நாசிக் நகரில் பள்ளிக் கல்வி கற்கும் வேளையில்தான் அவரது உறவினர் வீட்டில்

சேமிக்கப்பட்டிருந்த அலமாரி நிறைய நூல்கள் ஷிர்வாட்கரின் வாசிக்கும் தாகத்துக்கு அமுதம் போல உதவின. அந்த நூல் சேமிப்பில் இருந்த வெவ்வேறு நாடக நூல்களும், கவிதை, கதைப் புத்தகங்களும் அவரது இலக்கியப் பசிக்குத் தீனியிட்டன. அன்றைய நாட்களில் மிகவும் பிரபலமான நாடக நூல்களின் ஆசிரியர் ராம் கணேஷ் கட்கரியின் எழுத்துக்களால் கவரப்பட்டு நூல்களின் நீண்ட வசனங்களை மனப்பாடம் செய்து வீட்டிலேயே உரக்கப் பேசி நடித்துப் பார்ப்பதுண்டாம். வரலாற்றுப் பாடம்தான் அவருக்கு விருப்பமானதாக இருந்தது. கூடவே சிறு சிறு கவிதைகளும் எழுதத் துவங்கியபோது அவர் வெறும் ஐந்தாம் வகுப்பின் மாணவனாக இருந்தார். அந்த வயதில், பள்ளியில் கையெழுத்துப் பத்திரிக்கைகளில் எழுதும் பழக்கமும் தொடங்கியது. அப்போது அவரது பள்ளியில் ஆசிரியராக இருந்த திரு புரோகித் அவர்களால் கவிதைகளை நல்ல முறையில் வடிவமைக்கவும் கற்றுக் கொண்டார்.


அவரது பள்ளி நாட்களிலேயே மராத்திய நாடக மேடைகளில் பெரிதும் புகழ் பெற்ற நாடக மன்றங்களான "லலித் கலாதர்ஷா", "மகாராஷ்டிரா மண்டலி", "பால்கந்தர்வ சங்கீத் நாடக் மண்டலி" போன்ற மன்றங்களின் நாடகங்களை விரும்பிப் பார்க்கத் துவங்கினார். புகழ்பெற்ற நாடக நடிகர்களான நட்சாம்ராஜ் கேசவராவ் தத்தே, மாதவராவ் சிட்னிஸ் மற்றும் போட்னிஸ் போன்றவர்களின் நடிப்புக்குப் பெரும் ரசிகராக மாறினார் ஷிர்வாட்கர். அந்த நாட்கள்தாம் பிற்காலத்தில் சிறந்த நாடக இலக்கியங்களை எழுத அவருக்குத் தூண்டுகோலாக அமைந்தன.

**நா**சிக் நகரில் ஹெச்பிடி கல்லூரியில் பயிலும்போதுதான் அவரது உள்ளுக்குள் இருந்த கவிஞன் வெளிவரத்துவங்கினான். அவர் "குஸுமாக்ரஜ்" எனும் புனைப்பெயரில் எழுதிய கவிதைகள் "தர்னாகர்" எனும் இதழில் வெளிவரத் தொடங்கின. அதைத் தொடர்ந்து மெல்ல நாளிதழ்களிலும் மற்ற பத்திரிக்கைகளிலும் எழுதினார். "ஜீவன் லஹரி" என்கிற கவிதைத் தொகுப்புதான் அவர் தனது இருபதாம் வயதில் எழுதி வெளியிட்ட முதல் நூல்.

**ம**ராத்தி மற்றும் ஆங்கில இலக்கியங்களைப் பயின்ற ஷிர்வாட்கர் சமூக ஆர்வலராகவும் இருந்தார். நாசிக்கில் நிகழ்ந்த கலாராம் கோயில் தாழ்த்தப்பட்ட மக்கள் நுழைவுப் போராட்டத்தில் கலந்துகொண்டபோது அவர் கத்தி போன்ற ஆயுதங்களால் தாக்கப்பட்ட துண்டு. எழுத்துலகில் பெற்ற புகழோடு "ஸ்வதேஷ்" எனும் இதழின் ஆசிரியராகவும் பணியாற்றினார். எழுத்தாளன் சமூக அக்கறை மிகுந்தவனாகவும் இருக்க வேண்டும் என்ற கொள்கையோடு இருந்தவர். பல இதழ்களிலும் அவரது எழுத்துக்கள் கவிதைகள் வடிவில் பரிணமிக்கத் தொடங்கின. அவரது "விஷாகா" எனும் கவிதைத் தொகுப்பு மிகப் பிரபலமானது. அந்தத் தொகுப்பு நாட்டு விடுதலைப் போராட்டக் காலத்தில் இளைஞர்களுக்குச் சுதந்திர வேட்கையைத் தூண்டுவதாக அமைந்திருந்தது. அந்தக் காலகட்டத்தில் அவர் எழுதியிருந்த தேச பக்திப் பாடல்கள் மக்களிடையே பெரும்புகழ் பெற்றுச் சுதந்திர விழிப்புணர்வைத் தூண்டின.

**க**விதைகளோடு கதைகளும் நாவல்களும் எழுதத்தொடங்கினார். 1946 ஆம் ஆண்டு வெளியான 'வைஷ்ணவ்' எனும் நாவல்தான் அவர் எழுதி வெளியிட்ட முதல் புதின நூல் ஆகும். 1935-1945 காலகட்டங்களில் கவிஞர் ஷிர்வாட்கர் எனும் குஸுமாக்ரஜ் மற்றும் கவிஞர் பி பி போர்கர் இருவரும் மராத்திய இலக்கியத்தின் கவிதை உலகைக் கோலோச்சிய இருபெரும் ஆளுமைகளாவர். ஷிர்வாட்கரின் "விஷாகா" எனும் முதல் கவிதைத் தொகுப்பை மராத்திய இலக்கியத்தின் ஆளுமையான திரு வி எஸ் காண்டேகர் அவர்கள்தான் தனது சொந்தச் செலவில் வெளியிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

**நா**வலோடு நாடகத் துறையிலும் சிறந்து விளங்கத் தொடங்கினார். 1948ஆம் ஆண்டு "தூர்ச்சே திவே" (தூரத்து விளக்கு) எனும் நாடகம் அவரது முதல் நாடகமாக அரங்கேறியது. நாடகம் மற்றும் இலக்கிய எழுத்தோடு நில்லாமல் "கோதாவரி சினிடோன்" என்கிற திரைப்பட நிறுவனத்துக்காகச் "சதி சுலோச்சனா" எனும் திரைப்படத்துக்குத் திரைக்கதை வசனம் எழுதித்





தானே நடித்தும் இருந்தார். ஆனால் அந்த நாட்களில் அப்படம் சரியான வரவேற்பைப் பெறாமல் போனதால் திரைத்துறை விட்டு மீண்டும் எழுத்து மற்றும் பத்திரிக்கைத் துறையிலேயே தனது பணிகளைத் தொடர்ந்தார். இன்றையநாள் வரை மராத்தியப் பத்திரிக்கை யுலகில் கோலோச்சும் “சகால்” நாளிதழின் நிறுவனரான திரு நானாசாஹெப் பருலேகர் அவர்களின் வழிகாட்டுதலில் ஷிர்வாட்கரின் பத்திரிக்கை எழுத்துத்திறன் மென்மேலும் மெருகேறத் தொடங்கியது. அந்நாட்களில்தான் புகழ்பெற்ற மராத்தி எழுத்தாளரான வி எஸ் காண்டேகரின் இதழான “சாரதி” எனும் இதழின் ஆசிரியர் குழுவிலும் சிலகாலம் பணியாற்றினார். காலத்தின் கட்டாயம் காரணமாக அவர் பற்பல பத்திரிக்கைகளில் மாறிமாறிப் பணிசெய்ய வேண்டியதாயிற்று. அவ்வாறு பணியாற்றிக் கொண்டிருக்கும் ஒருநாளில் கொல்கொத்தாவி லிருந்து வந்த தந்தி(கேபிள்)யிலிருந்த ஒரு சோகமான செய்தி அவரை மிகவும் வாட்டியது. ஆங்கிலேயரின் ஆட்சியில் கொல்கொத்தா சிறையில் உண்ணாவிரதமிருந்த அரசியல் கைதிகளின் நிலைமை மிகவும் மோசமாகிக் கவலைக்கிடமாகி உள்ளது என்கிற செய்திதான் அது. அன்று இரவு ஷிப்ட் முடிந்து சென்றவுடன் ஒரு தாளெடுத்து எழுதிய “புரட்சி ஓங்கட்டும்” எனும் பொருள்படக்கூடிய கவிதை, மறுநாள் மராத்திய மண்ணெங்கும் சுதந்திர வேள்விக்கு எண்ணெய் ஊற்றியதுபோல வெளிவந்தது.

**1938** - 1948 காலகட்டங்களில் பத்திரிக்கைத்துறையில் ஈடுபட்டிருந்த ஷிர்வாட்கர் 1944ல் பிற்காலத்தில் ‘மனோரமா’ என்று பெயர் சூட்டப்பட்ட ‘கங்கா’ எனும் பெண்மணியைக் காதலித்துத் திருமணம் செய்துகொண்டார். இந்திய விடுதலைக்குப் பிறகு “லோகிதவாதி மண்டல்” எனும் அமைப்பை உருவாக்கித் தாழ்த்தப்பட்டவர்களின் சமூக நீதிக்காகப் போராடும் இயக்கமாக அதைப் பயன் படுத்தினார். குஜராத்தி மற்றும் மராத்தி மொழி பேசும் மக்களை உட்கொண்டிருந்த பம்பாய் மாநிலத்தை மராத்திய மொழி பேசும் மகாராஷ்டிரா என்று தனியே பிரிக்க வேண்டுமென்ற “சம்யுக்த மகாராஷ்டிரா” இயக்கத்தில் பெரும்பங்கு வகித்தார் ஷிர்வாட்கர். அறுபதுகளில் மராத்தியத் திரைப்படங்களுக்குப் பாடல்களும் எழுதினார். 1954 முதல் 1975 வரை புனே பல்கலைக்கழகத்தின் செனட் உறுப்பினராகப் பணியாற்றினார்.

**ம**ராத்திய இலக்கியத்தின் அத்துணை வகைமையிலும் ஷிர்வாட்கர் எனும் குஸுமாக்ரஜ் தனது முத்திரை பதித்துள்ளார். அவர் படைத்த மூன்று நாவல்கள், பதினாறு கவிதைத் தொகுப்புகள், எட்டு தொகுதிகளாக வெளிவந்த சிறுகதைத் தொகுப்புகள், ஏழு கட்டுரைத் தொகுப்புகள், பதினெட்டு நாடகங்கள், ஆறு ஓரங்க நாடகங்கள், ஏராளமான தேசபக்திப் பாடல்கள் அனைத்தும் மராத்திய இலக்கியத்தின் பொக்கிஷங்களாகக் கருதப்படுகின்றன.

**ஷி**ர்வாட்கர் அவர்களின் எழுத்துப் பணிக்காகவும் சமூக சேவைக்காகவும் பல விருதுகள் தேடி வந்தன. இலக்கியத்துக்கான மகாராஷ்டிரா மாநில அரசு விருதைப் பலமுறை பெற்றுள்ளார். இளம் வயதில் அவரை எழுத்துலகுக்கு ஈர்த்த முதுபெரும் மராத்திய இலக்கிய ஆளுமையின் பெயரிலான ராம் கணேஷ் கட்கரி விருதையும் பெற்றார். மராத்திய மொழியின் தலைசிறந்த நாடக இலக்கியப் படைப்புகளில் ஒன்றான ‘நட்சாம்ராட்’ நாடகத்துக்காக 1974இல் **சாகித்திய அகாதமி விருது** பெற்றார். (இந்த நாடகத்தைக் கருவாக



வைத்து 2016இல் புகழ்பெற்ற மராத்தியத் திரைப்படக் கலைஞர் திரு நானா படேகர் நடித்து வெளியான "நட்சாம்ராட்" எனும் மராத்தித் திரைப்படம் அகில இந்திய அளவில் புகழ்பெற்றுப் பல மொழிகளிலும் மொழியாக்கம் செய்யப்பட்டுவருகிறது என்பதை இங்கு குறிப்பிட்டாகவேண்டும்).

**1987**ஆம் ஆண்டு இந்திய இலக்கிய ஆளுமைகளுக்கு அளிக்கப்படும் பெரும் விருதான **ஞானபீட விருதை** ஷிர்வாட்கர் எனும் குஸுமாக்ரஜ் பெற்றார். 1989இல் அவர் அகில உலக மராத்தி பரிஷத்தின் தலைவர் பதவியும் வகித்தார். 1991இல் இந்திய அரசின் **"பத்மபூஷண்"** விருதும் குடியரசுத் தலைவரின் கரங்களால் அவருக்கு வழங்கப்பட்டது.

**ஏ**றக்குறைய அரை நூற்றாண்டுக் காலம் மராத்திய இலக்கிய வரலாற்றில் தனது பெயரைப் பொன்னெழுத்துக்களால் பொறித்த விஷ்ணு வாமன் ஷிர்வாட்கர் எனும் சமூக நீதிப் போராளி 1999 மார்ச் மாதம் 19ஆம் நாள் தனது 87வது வயதில் காலமானார். மராத்தியத்தில் மட்டுமல்லாமல் உலக இலக்கிய வரலாற்றில் தனக்கென ஒரு இடம் பிடித்த ஷிர்வாட்கர் (குஸுமாக்ரஜ்) அவர்களின் பிறந்தநாளான பிப்ரவரி 27 **'மராத்தி மொழி தினம்'** ("மராட்டி பாஷா திவஸ்'') எனக் கொண்டாடப்பட்டுவருகிறது.

## முதுகெலும்பு

மராத்திக் கவிதை
மூலம் :
**வி வி ஷிர்வாட்கர் [குஸுமாக்ரஜ்]**
தமிழ் மொழியாக்கம் : **ஜி ராஜன்**

"என்னைத் தெரிகிறதா, ஐயா...?"
கொட்டுகின்ற மழையில்
ஆடையில் சேறு அப்பிக்கிடக்க
நீர் சொட்டும் சிகையோடு வந்தான்;
கொஞ்சம் மூச்சிரைக்க அமர்ந்தான்;
பின்னர் சிரித்தான்; பேசத் தொடங்கினான்...

"கங்கைத் தாய் விருந்தாளியாய்
என் குடிலுக்கு வந்துபோனாள்;
தாய்வீடு வரும் மகளைப்போல
நாற்சுவர் சுற்றிச்சுற்றி ஆடினாள்;
வெறும் கையோடு எப்படித் திரும்புவாள்..
மனைவி மட்டும்தான் மிஞ்சினாள்;
சுவரெல்லாம் இடிந்துபோக...
அடுப்பெல்லாம் மூழ்கிப்போக..
அகப்பட்டதெல்லாம் கொண்டுபோனாள்;
பிரசாதத் தீர்த்தமாய் எங்கள் கண்களில்
கொஞ்சம் நீரை மட்டும் விட்டுச்சென்றாள்;
இல்லத்தாள் இணைந்து நிற்க..
இன்னல் களையப் போராடுகிறோம்;
உடைந்த சுவற்றை மீண்டும் எழுப்பிச்
சேர்ந்த சகதியைக் கழுவிக் களைகிறோம்!"

சட்டைப்பையை என் கை துழாவ..
சட்டென்று எழுந்தவன்
சிரித்தவாறே சொன்னான்..
"காசுபணம் வேண்டாம் ஐயா!
தனிமை உணர்ந்து வந்தேன்;
இடிந்தது வீடு மட்டும்தான்..
உடையவில்லை முதுகெலும்பு;
என் முதுகில் தட்டிக் கொடுத்து..
சொல்லுங்கள் 'போராடு!'
அது போதும்...!" ■

மாணவர் பக்கம்
பயணக் கட்டுரை
தொடர் - 6

• தமிழ்பாரதன்
ஜவஹர்லால்நேரு பல்கலைக்கழகம், புதுதில்லி

# ஈரிருநாள் இலங்கை



அறிவிக்கப்பட்ட ஒலிகள் அரங்கத்தின் சுற்றுச்சுவர்களில் அலைக்கற்றைகளாய் மோதிச் செவிப்பறைகளுக்குள் புகுந்துகொண்டன. நித்யா சைகன், தமிழ்பாரதன், சாருஜன், உமாபரன் எனும் நால்வரும் இறுதிச்சுற்றில் களம்காணுவர் என்பதே செவிப்பறையுள் உறைந்தவை. இறுதிச்சுற்றுக்கு முன் உணவு இடைவேளைக்காக உண்ணச்சென்றோம். ஒளிப்பதிவு செய்யப்பட்ட அரங்கத்திற்கருகில் இந்திய உணவகம் இருந்தது. ஆர்வ மிகுதியினும், ஆசை மிகுதியினும், பசி மிகுதியினால் உணவருந்த உள்சென்றமர்கையில் தமிழ் உணவுகளைப் புறக்கணித்த வட இந்திய உணவுகளே இருந்தன.

தற்காலத் தமிழர்களின் தவிர்க்கமுடியாத விருப்ப உணவாகிப்போன பிரியாணி அங்கே கிடைத்தது. ஒருவழியாக உண்ணலானோம். நால்வரைத் தவிர பிற அனைவரும் தெளிவுடன் இருந்தனர். அவர்கள், இறுதிச்சுற்று செல்லும் போட்டியாளர்களுக்குப் பிரியாணியோடு இயைந்து தம்மால் முடிந்த ஊக்கத்தை, மேடையில் தாம் சொல்ல மறந்த பல நல்ல ஆக்கங்களை முனைந்து சொல்லிக்கொடுத்தனர். போர்சூட்சுமங்களைப் பெரிதும் யாரும் பகிர்ந்துவிடுவதில்லை. அஃதன்றி, தன் பேச்சு நுட்பங்களைக்கூட எடுத்துரைத்து ஆற்றுப் படுத்திக்கொண்டிருந்தனர். அழகிய முரணான இவ்வாற்றுப்படை நட்பின்பாற்பட்ட இக்காலகட்டத்திற்குரியதெனலாம்.

நண்பர்கள் ஆற்றுப்படுத்தி, உண்டு முடித்த பின், எற்பாட்டின் பிற்பருவத்தில் அரங்கத்தில் பிற்பகுதியுள் நுழைய நிரம்பி வழிந்தது அரங்கம். தொடக்கவிழா அரங்கேறியது. இலங்கை அரசின் இராஜாங்க அமைச்சர்கள், மலேசிய அரசின் அமைச்சர், உலகத் தமிழர்கள், தமிழறிஞர் களோடு, ஈழத்தமிழர்கள் எண்ணிக்கையளவில் அதிகமாய்க் குவிந்திருந்தனர்.

**இறுதிச்சுற்றுத் தலைப்பு :**

**இக்காலப்பெண்கள் வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுக்கும் தருணங்களில் முக்கியத்துவம் கொடுப்பது எதற்கு?**

அ) பணம் - மலேசியாவின் நித்யா சைகன்
ஆ) படிப்பு - இந்தியாவின் தமிழ்பாரதன்
இ) பண்பு - இலங்கையின் சாருஜன்
ஈ) அழகு - மலேசியாவின் உமாபரன்

“கொடுக்கப்பட்டுள்ள தலைப்பிலே இரண்டு நிமிடங்கள் பேசவேண்டும், தங்கள் வாதத்தை முன்வைத்தபின், மற்றவர்களின் கருத்தை

மறுத்துப்பேச ஒவ்வொரு போட்டியாளருக்கும் தலா 30விநாடிகள் வீதம் நான்குமுறை வாய்ப்பு வழங்கப்பெறும். அதற்கடுத்துப் பேச்சாளர் பேசிய நிலைப்பாட்டை மறுத்து, பிற மூன்று தலைப்புகளில் ஒன்றனோடு தொடர்புடையவரின் காணொளி திரையில் ஒளிபரப்பாகும். அதற்கு எதிர்வாதம் புரியவேண்டும். பின், இறுதிச்சுற்றில் சிறப்பு நடுவராக இணைந்த பேராசிரியர் கு. ஞானசம்பந்தன் அவர்கள், பேச்சாளர் பேசியதிலிருந்தே விளைந்த ஒரு கேள்வியைக் கேட்பார். அதற்குரிய விளக்கத்தை முன்வைக்க வேண்டும்'' என்பதே இறுதிச்சுற்றின் நிபந்தனைகள்.

போட்டி தொடங்கியது, நிலவரையறை தாண்டிய தமிழ்ப்பெருவெளியில் இதுவரை தனித்துத் தனித்து ஒலித்த தமிழொலிகள் ஒன்றாக ஒரேமேடையில் முழங்கத் தொடங்கின. தத்தம் தலைப்பிலே எவ்வளவு சிரத்தை எடுக்க இயலுமோ, அதற்கும் மேலே வெளிப் பாடாகியிருந்தது சிலருக்கு. இரண்டு நிமிடத்துள் ஆழவைக்கும் கருத்துக்களை மட்டுமே முதன்மைப்படுத்திப் பேசியிருந்தனர். குறிப்பாக, சுருங்கச் சொல்லிக் குறுகத்தரித்த குறளை மேற்கோள் காட்டினர் பெரும்பாலும்.

**பணம் :**

அருளில்லார்க் கவ்வுலகம் இல்லை
பொருளில்லார்க்
கிவ்வுலகம் இல்லாகி யாங்கு.

**படிப்பு :**

நுண்மாண் நுழைபுல மில்லான் எழினலம்
மண்மாண் புனைபாவை யற்று.

**பண்பு :**

பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்
அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன்.

அழகே எனப் பேசியவர் மட்டும் "இக்காலத்தில்" எனும் தலைப்புப் பொருண்மை யால், வள்ளுவரைத் துணைகொள்ளவில்லை என ஒப்புக்கொண்டார்.

நால்வரது பேச்சும் சூழல், நாடு, கல்வி இவற்றை ஒட்டிய சிந்தையோடு அமைந்தது. விவாதமாகவும் வீரியமாகவும் நடைபெற்ற அந்த இறுதிச்சுற்றினை https://youtu.be/Dglw1n8ZYDY எனும் சுட்டியின் வாயிலாகக் காணலாம். தத்தம் நிலைகளில் இறுதிச்சுற்றின் நான்கு பிரிவுகளையும் நிறைவு செய்தபின், யாவரும் இருக்கை திரும்பினோம். 2017ஆம் ஆண்டின் இறுதிச்சுற்றுக்குப்பின் போர்நிறுத்தமடைந்த களமாகக் காட்சியளித்தது அரங்கு.

சிறிது நேரத்திற்கெல்லாம் இலங்கைத் தமிழ்ப்பிள்ளைகளின் வரவேற்பு கலைநிகழ்ச்சி யோடு தொடங்கியது பரிசளிப்பு விழா. வாய்ச்சொல்லில் வாள்வீசி வந்த எங்களுக்கு அங்கங்கே கரம்கொடுத்து, மனதால் வாழ்த்திய பார்வையாளர்களோடு இரண்டறக் கலந்த பின்னரே, நிகழ்வுகளை இரசிக்கத் தொடங்கி யிருந்தது நனவிலி மனம். கலைநிகழ்ச்சிகளின் நிறைவில் பேசத்தொடங்கியிருந்தனர் சிறப்பு விருந்தினர்கள்.

இப்போட்டிகளை ஆண்டுதோறும் வடிவமைத்து அதனை அரங்கேற்றி வரும் வணக்கம் மலேசியாவின் நிர்வாக இயக்குநர் தியாகராஜன் பேசுகையில், "'மாணவர் முழக்கம்' என ஆரம்பத் தமிழ்ப்பள்ளி மாணவர்களுக்கான பேச்சுப்போட்டியே முதலில் நடைபெற்றது. அதுவே இன்று "பேசு தமிழா பேசு" எனும் பெயரில் பன்னாட்டுக் கல்லூரி மாணவர் களுக்கான பேச்சுப்போட்டியாக நிலைப் பெறுதற்குக் காரணமாக அமைந்தது", எனப் பெருமிதமடைந்தார்.

மலேசியக் கல்வித்துறைத் துணையமைச்சர் டத்தோ கமலநாதன் பேசுகையில், "மலேசியாவின் மொத்த மக்கள் தொகையில் இந்தியர்கள் ஏழு விழுக்காடு. இந்த ஏழு விழுக்காட்டில் கிட்டத்தட்ட 70% மக்கள் தமிழ் பேசுபவர்களே. 1816ஆம் ஆண்டு ஒரேயொரு வகுப்பறையில் உருவான தமிழ்க்கல்விதான் இப்போது மலேசியாவில் வேரூன்றி, விரிந்து, பரந்து, வளர்ந்து 524க்கும் அதிகமான தமிழ்ப் பள்ளிகளைக் கொண்டிருக்கிறது'' என மகிழ்ந்தார்.

இலங்கையின் கல்வித்துறை அமைச்சர் வி.இராதாகிருஷ்ணன் பேசுகையில், "இலங்கையின் வடக்குவாழ் தமிழர்கள் ஆதித் தமிழர்கள். அவர்கள் குடியேறியவர்கள் அல்லர். மத்திய இலங்கையான மலையகத்தைச் சேர்ந்தவன் நான்.




எங்கள் மலையகத் தமிழர்கள் 200 ஆண்டுகளுக்கு முன்பு தேயிலைத் தோட்ட வேலைகளுக்காக இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்டவர்கள். அந்தப் பரம்பரையின் தொடர்ச்சியே நாங்கள். தமிழ், சிங்களம் என இரு மொழிகள் பேசும் நாட்டில், இவ்விரு மொழிக்காரர்களுக்கு இடையே கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. கடந்த முப்பது ஆண்டுகளாக நடந்த யுத்தத்திற்கு இந்த மொழிப்பிரச்சினை முதன்மைக்காரணியாக இருந்தது. மொழிவேற்றுமையின்றித் தமிழர்கள் சிங்களம் படிக்கவேண்டும், சிங்களவர்கள் தமிழ் படிக்கவேண்டும். வேற்றுமைகளைக் களைந்து இணக்கமான உறவு ஏற்படுத்தப்படவேண்டும் என்பதற்காகவே இலங்கை அரசாங்கம் ஓர் அமைச்சகத்தை உருவாக்கியுள்ளது. அவ்வமைச்சகத்தின் தலைமைப் பொறுப்பை ஒரு தமிழரான மனோ கணேசனிடம் ஒப்படைத்துள்ளது. இதன் முக்கியத்துவத்தை உணரவேண்டும்", என்றார்.

இலங்கையின் தேசிய சக வாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் பேசுகையில், "தமிழர்கள் வாழாத நாடே இல்லை. ஆனால், தமிழர்களுக்கென ஒரு நாடே இல்லை என்று சொல்வார்கள். யாதும் ஊரே, யாவரும் கேளிர் என்பதாக எல்லா நாடும் எங்கள் நாடே! எல்லா மக்களும் எம்மக்களே!! இன்று யுத்தமில்லை. வெடிச்சத்தமில்லை. ஆனால், யுத்தங்கள் எதற்காக நடந்ததோ, அதற்கான காரணங்கள் மட்டும் இன்னும் முடிவுக்கு வரவில்லை. இதனை முடிவுக்குக் கொண்டுவர எல்லாத் தமிழ்த் தலைவர்களும் மிகுந்த பிரயத்தனம் செய்துவருகிறோம். இலங்கையில் 20 மில்லியன் மக்கள் உள்ளனர். இவர்களில் 5 மில்லியன் மக்கள் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள். மதத்தால் இந்துக்கள், முஸ்லீம்கள், கிறித்துவர்கள் எனப் பிரிந்திருந்தாலும், மொழியால் நாங்கள் இணைந்தே உள்ளோம். தமிழ்மொழி நிலைபெறுவதை நாங்கள் உறுதிப்படுத்துவோம் என்ற உறுதிமொழியை இந்நிகழ்வின் வாயிலாகத் தருகிறேன்" என்றார்.

தமிழ் மீதான சுரண்டல் நடந்த இடத்தில், பன்னாட்டுத் தமிழ் மாணவர்களை வரவழைத்து பெரிய அளவில் தமிழுக்காக ஒரு நிகழ்ச்சி நடத்தியதற்கு இலங்கை அரசாங்கம் ஒத்துழைப்பு நல்கியது அதன் தற்காலப் போக்கையும் அதன் அடுத்தகட்ட தேவைகளையும் வெளிக் காட்டுவதாய் அமைந்திட்டது. மேலும், இலங்கையில் போர் முடிவுக்குப் பின்பு புதிய அரசியலமைப்புச் சட்டம் எழுதப்பட்டுக் கொண்டிருந்த நேரத்தில்.. அமைச்சர்களின் பேச்சை முக்கியத்துவத்திற்குரியதாக நோக்கிய எனக்கு, அதுபற்றி அருகிருந்த இலங்கைத் தமிழ்ப் போட்டியாளர் ஒருவரிடம் கேட்டேன்.

உலகளாவிய அரசியல் நகர்வுகளில் மக்கள் அரசாங்கம்கொள்கை எனும் அடிப்படையிலான நிர்வாகமும் அதன் திட்டங்கள் குறித்தும் ஓரளவு தெளிவுபடுத்திய அவர், தெர்மாக்கோல் அமைச்சர் தொடங்கி இம்சை அரசன் 23ஆம் புலிகேசியின் அமைச்சர் வரை ஒரு அலசு அலசினார்.

நிலவொளியை எதிர்பார்த்துக் காத்திருந்த அந்திவானத்தின் கீழே நடைபெற்றுக் கொண்டிருந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்கள் பேசி முடிக்க, வெற்றி அறிவிப்புக்காக எல்லாரும்

காத்திருந்தனர். கடல்கடந்து தங்கள் நாட்டையும் நாட்டு மக்களையும் பிரதிநிதித்து இப்போட்டியில் கலந்துகொண்ட போட்டியாளர்கள் அனைவருக்கும் அவர்கள் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் மலேசிய ரிங்கிட்டுகள் பரிசாக வழங்கப்பட்டன. முதல்சுற்று, அரையிறுதிச்சுற்று வரை கொடுத்தாயிற்று.

நால்வருக்கான இறுதிச்சுற்று முடிவுகள் சாசனம் செய்யப்பட்டு ஒலிக்கப்படாமல் இருந்தன. மிகப்பெரிய பொறுப்பை முதுகில் சுமந்தமர்ந்திருந்தேன். இதுகாறும் பரிணமித்தவற்றில் இந்நிகழ்வு குறிப்பிடத்தக்க ஒன்று. 2016ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற இப்போட்டியில் கலந்துகொண்டு வென்ற தாமல்.கோ. சரவணனும் நா.அருணும் 'இறுதிச்சுற்றுக்குத் தகுதியாவதே பெரிது. தகுதியாகிவிட்டால் அதுவே பரிசு, வெற்றி பெற்றமைக்குச் சமம்' என ஆற்றுப்படுத்தி அனுப்பியிருந்தனர். ஒரு முடிவென்பது தன் மீது முன் சுமத்தப்பட்ட நேர்மறை பிம்பங்களுக்கு மேலும் பலம் சேர்ப்பதாக இருக்கவேண்டுமென்ற உணர்வை ஆரிக்கிளும் வெண்டரிக்கிளும் ஒவ்வொரு போட்டியின் முடிவறிவிக்கும் நேரத்திலும் துடித்துச் சொல்லும். இவற்றையெல்லாம் யோசித்து யாசிப்பதற்குள்ளாகவே ஒலிக்கத் தொடங்கியமையால் நினைவு வானிலிருந்து தரையிறங்கியது மனம்.

**இரண்டாம்நிலை வெற்றியாளர் மலேசியாவின் நித்யாசைகன்**

**இரண்டாம்நிலை வெற்றியாளர் இந்தியாவின் தமிழ்பாரதன்**

**முதல்நிலை வெற்றியாளர் மலேசியாவின் உமாபரன்**

**வெற்றியாளர் இலங்கையின் சாருஜன்**

என முடிவுகள் வெளியாகியிருந்தன. மேடையேறிய கால்களை விடுத்து, மேடையில் முழங்கிய திருவாய் விடுத்து, பேசுகையில் அவ்வப்போது விண்ணுக்கும் மண்ணுக்கும் சென்று வந்த கைகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. தமிழ்த் தொலைக்காட்சிகளில் காட்டுவது போல வெற்றி பெற்றதற்கான 'பெரிய' சான்றுகள் வழங்கப்பட்டன. இரண்டாம் நிலை வெற்றியாளர் என்பதற்கான கோப்பையும் சான்றும் 2000 மலேசிய ரிங்கிட்டுகள் பரிசுக்கான சான்றும் கைகளில் தவழ எடுக்கப்பட்டது படம். பின் நால்வரும் மேடையிலிருந்த முதன்மையாளர்களுடன் இணைந்தோம்.

அந்தக் கணத்தில் தனித்தனியாக எடுக்கப்பட்டது பேட்டி, "இந்தத் தருணத்தை எப்படி உணர்கிறீர்கள்?" என. "பறக்குமளவு இல்லையெனினும் சிறகுமுளைத்த மகிழ்ச்சியிருந்தது", எனப் பதிவுசெய்து கீழிறங்க, 'நல்லாப் பேசுனீங்க', எனச் சொல்லி அதுவரை என்னை யாரென்றறிந்திராத, அரங்கிருந்த பார்வையாளர்களுள் சிலர் சுயமி எடுத்துக்கொண்டனர். தமிழ் வாரிக்கொடுத்த மனிதர்களைப் பத்திரப்படுத்தி வைத்து, ஏனையோர்களோடு கூடிக் களித்து மகிழ்ச்சியைக் கொண்டாடி நிறைவு செய்ய இரவு எட்டு மணியாயிற்று.

அமைச்சர்கள், அறிஞர்கள், பத்திரிக்கையாளர்கள், உலகத் தமிழர்கள், உள்ளூர்த் தமிழர்கள், புதிய நட்புகள் என அனைவரிடமிருந்தும் விடைபெற அரங்கிலிருந்து விடுதிக்குப் பெயர்க்கப்பட்டோம். ஆங்கு, கிடைத்த அருகலை (WiFi) வசதியுடன் யாரெல்லாம் முதன்மையாக இலங்கைக்கு அனுப்பி வைத்தார்களோ அவர்களுக்குப் பரிசு வாங்கியதன் முதல் தகவல் அறிக்கையைச் சேர்ப்பித்தாயிற்று. இரவு உணவு வருவதற்குள் 'வாங்க, வெளிஉணவகத்தில் போய்ச் சாப்பிடலாம். இந்தியாலருந்து வந்து ஜெயிச்சதுக்கு ட்ரீட்' எனச் சொல்ல வெளி செல்லத் தயாரானோம்.

பரிமாற்றம் செய்யப்பட்ட இலங்கைப் பணத்தோடும் இந்தியர்கள் என்பதற்கான ஆளறி அட்டையோடும் நேற்று நகர்வலம் வந்த கடற்கரை ஒட்டிய வீதிகளை விடுத்து, கொழும்பு நகரின் உள்ளடங்க வீதிகளில் சுற்றினோம். கோயில் ஒன்றை ஒட்டியவாறு உள்ள உணவகத்தில் உணவுண்டு, யாமத்தின் பெரும்பகுதி முழுமையும் கொழும்பு நகர வீதிகளில் உலவி, விடுதி திரும்புகையில் ஓய்வு கால்களுக்கும் உடலுக்குமே தேவைப்பட்டிருந்தது.

மீண்டும் அருகலை கிடைத்தவுடன் உயிர்ப்புற்ற வாழ்த்துக்களை அறை முழுக்க நிரப்பி, அதிலே உயிர்வளியெடுத்து மனம்நிறைகையில் உறங்கிப் போயிருந்த கண்களில் உயிர்ப்போடிருந்தன கனவுகள்.

**– கண் விழித்ததும் பேசுவோம்** ■



நாடக வடிவில்
சங்க இலக்கியம்

• வடிவம் : பழநியப்பன் கிருஷ்ணமூர்த்தி
ஓவியம் : அழ.ரஜினிகாந்தன்

# குருதிப்பூ

**குறுந்தொகை 1**

செங்களம் படக்கொன்று அவுணர் தேய்த்த
செங்கோல் அம்பின் செங்கோட்டு யானைக்
கழல்தொடிச் சேஎய் குன்றம்
குருதிப் பூவின் குலைக்காந் தட்டே

**– திப்புத்தோளார்**

**தோழி :** இஃதென்ன, வியப்பாக இருக்கிறது! காந்தள் மலர்க்கொத்து ஒன்று கால்கொண்டு நடந்து வருகிறதே?

*(தனது முகத்தை மறைக்குமளவுக்குக் காந்தள் மலர்களைக் கையிலேந்தி வந்த தலைவன் மலர்களை விலக்கித் தன் முகத்தைக் காட்டியவண்ணம் தோழியிடம் பேசுகிறான்).*

**தலைவன் :** யானை பலமுள்ளவன் அடங்கிப்போனான் என்பது வேண்டுமானால் வியப்பாக இருக்கலாம். காந்தள் மலரைக் கொண்டு வருவதில் எல்லாம் வியப்பொன்றுமில்லை.

**தோழி :** யானை பலமுள்ளவன் ஏன் அடங்கிப் போனானாம்? அடக்கிப் பார்க்க வேண்டியதுதானே?

**தலைவன் :** யானை பலமும் அசுர பலமும் போர்க்களத்தில் வேண்டுமானால் வெற்றியைத் தரலாம். காதற் களத்தில் தருமா?

**தோழி :** பிறகெதற்குக் குருதி நிறத்தில் பூக்கொண்டு வந்தீராம்?

**தலைவன் :** தலைவிக்காகத்தான்.

**தோழி :** தலைவிக்காக என்றால், எங்களிடத்தில் இல்லாத யாரும் இதுவரை காணாத அதிசயமான ஒன்றையல்லவா கொண்டுவர வேண்டும்? காந்தள் பூக்கள்தான் எங்கள் குன்றுகள்தோறும் குலைகுலையாகப் பூத்துக் கிடக்கிறதே?

**தலைவன் :** இருந்தாலும், அதை நான் கொண்டு தரும்போது..

**தோழி :** (இடைமறித்து) அப்படியொன்றும் பரவசமாக இருக்காது. எங்கும் நீக்கமற நிறைந்து இருக்கும் சிவந்த வண்ணத்தை எப்போதும் பார்த்துக்கொண்டேதான் நாங்கள் இருக்கிறோம்.

**தலைவன் :** எங்கும் நீக்கமற எங்கு இருக்கிறது, சிவப்பு?

**தோழி :** சொல்கிறேன், கேள். எங்கள் சேஎயை எதிர்த்த அசுரர்களை அவர்களது குருதி தரையில் சிந்திச் சிவப்புக் களமாக மாற அவர்களை அழித்தவன். அதனால் அவனுடைய கூர்மையான அம்புகள் குருதி தோய்ந்து சிவந்த நிறத்துடனேயே இருக்கும். அதுவுமல்லாது, அவனது யானை இருக்கிறதே? அது அவனுக்கும் மேல். அவனைப் போன்றே பகைவர்களைக் குத்திக் கொன்றழித்ததால் அதனுடைய தந்தங்களும் சிவந்த நிறத்துடனேயே இருக்கும். அதனால் சிவப்புக்கும் வீரத்துக்கும் உம்போன்ற ஆண்களுக்கும் இங்கு பஞ்சமேயில்லை, போய் வாரும். நாளை பார்க்கலாம். ■

**படைப்பு அறக்கட்டளை | படைப்பு கவிதை மின்னிதழ் | படைப்பு பதிப்பகம் | படைப்பு ‘தகவு’ - கலை இலக்கிய திங்களிதழ் | படைப்பு இணையதளம் வரிசையில் இப்போது படைப்பு வலையொலி வாசல் திறக்கிறது உங்களுக்காக...**




ஒருகாலத்தில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் ஒளிபரப்பாகும் ‘ஒலியும் ஒளியும்’ நிகழ்ச்சி எப்படி நம்மையெல்லாம் மகிழ்வித்ததோ அதே போல இனி ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நமது ‘படைப்பு – ஒலியும் ஒளியும் கவிதைத் துளியும்’ கவிதை கீதம் படைப்பு வலையொலி (யூடுப்) மூலம் தொடர்ந்து வெளிவர இருக்கிறது என்பதை மகிழ்வுடனும் பெருமையுடனும் அறிவிக்கிறோம்.

இதுவரை எழுத்து வடிவில் மட்டுமே உறவாடிக் கொண்டிருந்த படைப்பாளிகள் இனி ஒலியும் ஒளியுமாக கவிதைத் துளியுமாக உலகெங்கிலும் உங்கள் படைப்புகளை காற்றில் ஆடும் கீதமாக கொண்டு செல்ல இருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது.

உங்களுடைய ஆதரவை லைக்கும் சப்ஸ்க்ரைப் பட்டன்கள் அழுத்துவதன் மூலம் அறிய தருகிறோம்.

• www.padaippu.com •

# படைப்புப் பதிப்பகம் வெளியீடுகள்

**நூல்களைப் பெற - 97908 21981**

